
வஞ்சிநகர்
வஞ்சி
விக்கிரமன்
கவிதா
வெளியீடு

# முன்னுரை

கடைச்சங்க நாளில் அரச அவையில் நாடகக் கணிகையர் முறை வழுவாமல் அபிநயந் தோன்ற ஆடிக் காட்டி அரசன்பால் தலைக்கோலி பட்டமும், பரிசில் களும் பெற்ற வரலாறு காணப்படுகிறது. (சிலப்பதி காரம் ஊர் காண்காதை) கடைச் சங்கக் காலத்தைத் தொடர்ந்து சோழ மன்னர்கள் காலத்தில் அரச அவையில் நாட்டிய மகளிர் ஆடி மகிழ்விப்பதுடன், கோயில்களில் இறைவன் முன் ஆடுவது வழக்கமாயிற்று.

முதல் இராசராச சோழன் காலத்தில் பரதத்திலும், இசையிலும் வல்ல பல நடன மாதர்களைத் திருக்கோயில் களில் தொண்டாற்ற, தமிழகத்திலுள்ள பல ஊர்களி லிருந்தும், குறிப்பாக திருக்காளத்தியிலிருந்தும் அழைத்து வந்துத் தஞ்சைப்பெருவுடையார் கோயிலைச் சூழ்ந்துள்ள தெருக்களில் குடியேற்றிய செய்தி கல்வெட்டுக்களி லிருந்துத் தெரிய வருகிறது. அதைப் போன்றே கங்கை கொண்ட சோழபுரத்திலும், இராசேந்திர சோழன் நடன மாதர்களைக் குடியேற்றினான்.

அவர்கள் தளிச்சேரிப் பெண்டுகள் எனவும், இறைவனுக்குத் தொண்டு புரிந்து வந்ததால், தேவரடி யார் எனவும், நாட்டியத்தில் வல்லுநராயிருந்தமையால் நாடகக் கணிகையர் எனவும், யாரையும் மணந்து கொள் ளாமைப் பற்றிப் பதியிலார் எனவும் அழைக்கப் பெற்றனர்.

பிற்காலத்தில் பெண்கள் சிலர் தாம் விரும்பிய வரை மணந்து கொண்டனர். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நாட்டியப் பெண் ஒருத்தி மணம் புரிந்து கொண்ட செய்தியைக் கல்வெட்டொன்று தெரி விக்கிறது.

இந்த வரலாற்று நாவல் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நடந்த சில சம்பவங்களுடன் கற்பனையும் சேர்த்துப் புனையப்பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் ஈழ நாடு, பாண்டிய நாடு இவற்றின்மீது படை எடுத்ததுடன் கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றதாக வரலாறு கூறுகிறது. குலோத்துங்கன் கருவூரைக் கைப்பற்றி, அங்கு தான் சோழ கேரளன் என்னும் பெயருடன் மாமுடி சூட்டினார், என்றும், பிறகு தோல்வியுற்ற சேரமன்னர் குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகவே, குலோத்துங்கன் தான் வென்ற கருவூரையும், சேர நாட்டையும் அவனுக்கே மீண்டும் அளித்தான் என்றும் வரலாறு கூறுகிறது.

**கொங்கான சோழ கேரள மண்டலத்து**
**வெங்கால நாட்டுக் கருவூரான முடிவழங்கு**
**சோழபுரத்துத் திருவானிலை மாதேவர்**

என்ற தொடர் மொழிகள் கல்வெட்டில் உள்ளன! குலோத்துங்கன் கருவூரின் மீது படையெடுக்கக் காரணம் ஏதும் தெரியவில்லை.

மேற்குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சிகளைக்கொண்டு என் கற்பனையையும் சேர்த்து 'வஞ்சி நகர் வஞ்சி' என்ற புதினத்தைப் படைத்துள்ளேன்.

கருவூர் படையெடுப்பு, மீண்டும் சேரமன்னருக்கு அந்த நாட்டை வழங்கிய செய்திகள் வரலாற்றில்உள்ளன மரகதவல்லி, அவளிடம் நடனம் பயின்ற மயில்விழி, அவள் காதலித்து மணம் புரிந்து கொண்டது இந்தச் சம்பவங்கள் என் கற்பனை.

'வஞ்சி நகர் வஞ்சி'—வரலாற்றுப் புதினத்தை எழுத கவிதா பப்ளிகேஷன் திரு. சேது. சொக்கலிங்கம் என்னை மிகவும் ஊக்குவித்தார். சிறந்த முறையில் வெளியிட்டதற்கு நன்றி.

எப்போதும் போல் என்னை ஆதரிக்கும் தமிழ்ப்பெரு மக்களுக்கு என் வணக்கங்கள்.

**விக்கிரமன்**

18584
3469356

# வஞ்சி நகர் வஞ்சி

## 1

கங்கை கொண்ட சோழபுரத்துச் சோழீசர் கோயிலில் சந்தியாகால பூஜைக்கான மணியோசை கணீரென ஒலித்தது.

கம்பீரமாக உயர்ந்திருந்த விமானத்தின் மேல் அமர்ந்திருந்த பறவைகள் பறந்து சென்று கூடுகளை அடையத் தொடங்கின.

இறைவனை வணங்கவும், பூஜையின் போது நடைபெறும் நர்த்தனத்தைக் காணவும் மக்கள் குழுமியிருந்தனர்.

குலோத்துங்க சோழ தேவர் நெற்றியில் திருநீறும், பரந்த மார்பில் துலங்கும் மணியாபரணங்களுக்கிடையே உருத்திராட்ச மாலையும் அணிந்து கரங்கூப்பி, விழிகளை மூடிப் பயபக்தியுடன் சந்நிதியில் நின்று கொண்டிருந்தார்.

தீப ஆராதனைகள் நடந்து முடிந்தன. குழல் இசைத்தது. உடுக்கை முதலான நாளவாத்திய இன்னிசை முழங்கின. வீணை முதலான நரம்பு வாத்ய இசை ஒலித்து நெஞ்சை நிறையச் செய்தது.

பாதச் சதங்கை ஒலிக்க இளம் நடனமணிகள் சிவத் தாண்டவப் பாடல்களுக்கு ஏற்ப அபிநயம் செய்து முடித்தனர்.

சந்தியா நிருத்யம் எனும், ஈசனின் நடன வகைகளில் ஒன்றான அதைப் பரம்பரையாக ஆடும் மரகத வல்லியைக் காணவில்லை.

சில நொடிகள் அங்கே அமைதி நிலவியது. கோயில் பணியாட்கள் இங்குமங்கும் பரபரப்புடன் சென்றனர். நட்டுவனார் எழுந்துச் சுற்றுமுற்றும் பார்த்தார். சந்தியா நிருத்தியம் முடிந்த பிறகுதான் தீபாராதனை நடைபெற்றுப் பிரசாதம் வழங்க வேண்டும்.

குலோத்துங்க சோழரின் அமைதி கலைந்தது. நெஞ்சிலே ஆடவல்லானைத் துதித்தவாறு நின்றிருந்தவரைச் சந்நிதியில் ஏற்பட்ட நிசப்தம் கலைத்தது. விழிகளைத் திறந்து சந்நிதியைச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

மரகதவல்லி சந்தியா நிருத்யம் ஆடவரவில்லை. அவளிடத்தைப் பூர்த்தி செய்து நடனமாட வேறு ஒருவரும் இல்லை.

இரவு நெடுநேரம் வரை குலோத்துங்கன் உறங்கவில்லை. சந்தியா நிருத்யம் இதுவரை ஒரு நாளாவது தடைப்பட்டதில்லை. அவருக்குச் செய்தி கிடைத்தது. மரகதவல்லிக்கு உடல் நலமில்லாததால் ஆட வரவில்லை என்று. மரகதவல்லி தன்னால் இயலாத நிலையில் தனக்கு அடுத்தபடியாக மற்ற ஒருவரை உருவாக்காமல் இருந்ததை நினைக்கும் போது அவர் சீற்றங்கொண்டார். முறை தவறி, ஒழுங்கு தவறி நடக்கும் எந்தச் செயலையும் அவர் ஒப்புக் கொள்ளமாட்டார்.

அரசர் துயிலுறாமல் படுக்கையில் புரண்டவாறு இருப்பதை அறிந்த பட்டத்தரசி திரிபுவன மாதேவியார் மெல்ல அவர் அருகே அமர்ந்து காரணம் கேட்டறிய முற்பட்டாள்.

''மாலையில் நீயும் பெருவுடையார் சந்நிதியில் இருந்தாயே, அங்கு என்ன நடந்தது தெரியுமா?'' என்று அரசர் கேட்டார்.



தேவி சற்று யோசித்து, ''எல்லாம் சரிவர நடந்தன. ஆனால் மரகதவல்லியைக் காணவில்லை. முதிர்ந்த வயதுடைய மரகதவல்லி வரவில்லை என்பதில் தங்களுக்கு என்ன அவ்வளவு கவலை?'' என்று மென் முறுவலுடன் கேட்டாள்.

தேவியின் சிருங்காரப் பேச்சை ரசிக்காத மன்னன், ''மரகதவல்லி தன்னுடைய பதினைந்தாவது ஆண்டிலிருந்து கங்கைகொண்ட சோழீசர் முன்னிலையில் நடனம் ஆடுகிறாள். இதுவரை ஒருநாள் கூட உடல் நலமில்லை என்று தன் கடமையை நிறுத்தியது கிடையாது. இன்று சந்தியா பூஜை அவளுடைய நடனமில்லாமல் பூரணமாக வில்லை என்பதை நினைக்கும் போது எனக்கு வேதனையாக இருக்கிறது. அதே போதில் கோபமும் மேலிடுகிறது. எனக்கு வயது முதிர்ந்து விட்டால் பிறகு வாரிசாக இளவரசுப் பட்டம் மகனுக்கோ—மற்ற தகுதியுள்ளவருக்கோ கட்டிவிடுகிறேன். மரகதவல்லி அவ்வாறு செய்திருக்க வேண்டாமா?'' அரசரின் குரலில் கடுமை இருந்தது.

''அப்பாடி! அந்தப்புரத்திலும் தங்களுக்குச் சீற்றம் பொங்குகிறது. அமைதியாக உறங்குங்கள். நாளை விடிந்ததும் நானே மரகதவல்லியின் இல்லம் சென்று தன் கடமையைச் செய்யமுடியா அளவுக்கு அவளுக்கு என்ன நோய் என்று கேட்டறிந்து வருகிறேன். மரகதவல்லியைப் போன்று அடுத்த தலை முறையை உருவாக்கவும் வழியொன்று கண்டறிந்து வருகிறேன். தங்களுக்கு உள்ள வேகத்தில் தாங்களே பதியிலாதார் வீதிக்குச் சென்று மரகதவல்லியைச் சந்தித்து விடுவீர்கள் போலிருக்கிறதே! ஆனால் நான் போவதில் தவறில்லை அல்லவா?'' என்று தேவி, அரசரது கரங்களை மெல்ல வருடி தன் நகைச் சுவை உணர்வின் மூலம் அரசரின் சினம் தணிக்க முயன்றாள்.

மறுநாள் திரிபுவன மாதேவி சோழீசர் கோயிலை அடுத்த வீதியிலுள்ள மரகதவல்லியின் வீடடைந்தாள்.

மரகதவல்லிக்கு அறுபது பிராயம் ஆனாலும் தளராத மேனி. நாள் தவறாமல் மையிட்டு எழுதிய விழிகளில் மேலும் கருமை. வெற்றிலைக் காவி ஏறிய பற்கள். ஒப்பனை இல்லாத நிலையில், அவிழ்ந்த குட்டைக் கூந்தலுடன் அவள் படுத்திருந்தாள். அவள் கால் பக்கம் சிலர் அமர்ந்து ஏதோ மூலிகைகளைப் பிழிந்துப் பூசிக் கொண்டிருந்தனர். அவள் விழிகள் மூடியிருந்தன.

அரசியார் வந்திருக்கிறார் என்றவுடன், மரகதவல்லி வசித்து வந்த சிறு குடிலில் பரபரப்பு ஏற்பட்டது. மரகதவல்லியைச் சுற்றியிருந்தவர்கள் ஒரு கணம் செய்வதறியாது திகைத்து எழுந்து மரியாதையுடன் ஒதுங்கி நின்றனர்.

எங்கே, எதில் அரசியை உட்கார வைப்பது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டு ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

திரிபுவன மாதேவி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்து, முழங்காலிட்டு மரகதவல்லி அருகே அமர்ந்து, குனிந்து, அவளுடைய நெற்றியில் கை வைத்து,

"என்ன உடம்பு மரகதவல்லி?" என்று இதமாக வினவினாள்.

கணுக்காலில் ஏற்பட்ட உபாதையால் தவித்துக் கொண்டிருந்த மரகதவல்லி கண்களை மூடிக்கொண்டு ஈசனைத் துதித்தவாறு பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். மெல்லிய கரமொன்று தன் நெற்றியில் படவும் அன்னத்தின் தூவி வருடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. கண் விழித்த மரகதவல்லிக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. தன்னைச் சுற்றிலுமிருப்பவர்கள் எழுந்து ஒதுங்கி நிற்பதைக் கண்டாள். தன் அருகே அமர்ந்திருப்பது யார்—யார்—?



அவள் விழிகளை அகல விரித்து நோக்கினாள். "என்னை அடையாளம் தெரியவில்லையா, மரகதவல்லி?" என்று அரசி கேட்கும் முன்பே, அருகே இருந்தவர்கள் மரகதவல்லியின் செவியருகே, "அரசியார் வந்திருக்கிறார்கள்" என்றனர்.

"புரிகிறது, புரிகிறது. வரவேண்டும், வரவேண்டும்" என்று கூறிக்கொண்டே கை கூப்பியவாறு எழுந்திருக்க முயன்றாள் மரகதவல்லி.

அவளை அப்படியே படுத்திருக்குமாறு அமர்த்தி, "மரகதவல்லி, திடீரென என்ன நேர்ந்தது? காலில் என்ன? நடனமாடுபவர்களுக்குப் பாதம் தானே உயிர்நாடி" என்றாள்.

திடீரென்று அரசியைப் பார்த்ததாலும் மேலும் தன்னருகே அமர்ந்துப் பரிவுடன் பேசியதாலும் உணர்ச்சி வயப்பட்ட மரகதவல்லியிடமிருந்துச் சொற்கள் வெளிவரவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க ஏதோ சொல்ல முற்பட்டாள்.

அரசி அவளது கூந்தலை மெல்ல வருடி, கண்ணீரைத் துடைத்து, "மரகதவல்லி, உன் விழிகளில் நீர் தளும்புகிறதே எதற்காக? பயப்படுகிறாயா? எதற்கும் பயம் வேண்டாம். உனக்கு என்ன நோய்? அதை முதலில் சொல்" என்றாள்.

அருகே இருந்த ஒருவர் மெல்லக் கூறினார்:

"முதல் நாள் கங்கை கொண்ட சோழீசர் கோயிலுக்குச் சென்று இரவு பூசை வரை இருந்து, வீட்டிற்குத் திரும்பியவள் படிக்கட்டுகளில் இறங்கும்போது இருட்டில் தவறி விழுந்து விட்டாள். வீட்டிற்கு வந்தவுடன் கணுக்காலில் வலி தெரிந்தது.

காலையில் வலது பாதம் வீங்கிவிட்டது. வலி பொறுக்க முடியாமல் துடித்தாள். கதறினாள். அழுதாள்,

வலியால் அன்று; அன்று மாலை நிருத்யத்திற்குச் செல்ல முடியாது போய்விடப் போகிறதே என்ற கவலையும், வேதனையும், பயமும் கலந்துத் துக்கமாக கூறச்செய்தன. உள்ளூர் மருத்துவர் அழைக்கப்பட்டார். அவர் தந்த பச்சிலைகளைப் பிழிந்துத் தடவினார்கள். வலி குறைய வில்லை'' என்று நடந்த செய்தியை அவர்கள் கூற அறிந்த அரசி பெருமூச்சுடன் மெல்ல எழுந்து நின்றாள்.

''மரகதவல்லி, எதற்கும் கவலைப்படாதே. அரண் மனை மருத்துவரை உடனே அனுப்புகிறேன். நீ ஓய்வு எடுத்துக் கொள். எந்தவிதக் கவலையு மில்லாது நாங்கள் கவனித்துக் கொள்வோம்'' என்று கூறிப் புறப்பட முற்பட்டவள், மீண்டும் மரகதவல்லியின் அருகே அமர்ந்து ஏதோ முக்கிய செய்தியைப் பேச எண்ணிச் சுற்றுமுற்றும் நோக்கினாள்.

அரசியின் குறிப்பறிந்த மெய்க் காவலர்களும் பணிப் பெண்களும் அங்கிருந்தவர்களை அந்த இடத்தைவிட்டுச் சற்று நேரம் வெளியே சென்றிருக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

''மரகதம்'' என்று பரிவோடு அழைத்த அரசி, உன் மீது மன்னர்பிரான் மிகுந்த பரிவு கொண்டிருக்கிறார். நேற்று சந்தியா நிருத்யம் நடைபெறாதது குறித்து வேதனைப்பட்டு இரவெல்லாம் உறங்கவில்லை. நீ பல ஆண்டுகளாகக் கங்கைகொண்ட சோழீசர் எதிரே அற்புத மாக நடனமாடுகிறாய். உன் வாரிசு என்று யாரையாவது வளர்த்திருக்கக் கூடாதா? அதை நினைத்தே தான் அரசர் வருத்தப்படுகிறார்'; என்றாள்.

மரகதம் திகைப்புடன் அரசியை நோக்கினாள்.

''சோழ நாட்டில் நாட்டியக் கலை நசித்துவிட்டதா? பந்தணை நல்லூரிலும், திருவாரூரிலும், திருவையாற்றி



லும் நடனக் கலையில் வல்லவர்கள் இருக்கிறார்களல் லவா?'' என்று கேட்டாள்.

தன் விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டு, ''பிராட்டியார் அவர்களே! ஒரு நாள் இறைவனுக்கு நாட்டியாஞ்சலி செய்யாதிருந்தது எனக்கு மிக வேதனை யைத் தருகிறது. கால் ஊனமுற்றதுகூட எனக்குக் கவலையை அளிக்கவில்லை'' என்று கூறும்போது, அரசி குறுக்கிட்டு, ''ஊனமுற்று—என்று சொல்லாதே. உன் பாதங்களுக்கு மீண்டும் நடனமாடும் சக்தி ஏற்பட நான் வழி செய்கிறேன். ஆனால், மரகதம், நீ கற்ற நடனக் கலையை உனக்கு நம்பிக்கையுள்ள ஒருத்திக்குக் கற்றுக் கொடுக்க உடனே ஏற்பாடு செய். அதனால் உனக்கு மதிப்புக் குறைவு ஏற்பட்டுவிடும் என்று அஞ்சவேண்டாம் உன் ஜீவிய காலம் வரை உனக்குள்ள அந்தஸ்து, செல்வாக்கு; வெகுமானம், மதிப்பு ஏதும் குறையாது உறுதி'' என்றாள்.

மரகதம் விம்மியவாறு உட்கார்ந்தபடியே அரசியின் பாதங்களைப் பிடித்து, ''சோழ மகாராசா ஆதரவில் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. நாட்டியக் கலை என்னுடைய தனிச் சொத்து அன்று. நான் பலருக்குக் கற்றுத் தருகிறேன்; கடவுள் அருளால் என் பாதங்கள் சரியாக இருப்பின் இனியும் தொடர்ந்து கலை நுணுக்கங் களைக் கற்றுத் தருவேன். ஆனால் கற்றுக் கொள்ளும் பெண்கள் தேர்ச்சியுற்றுச் சிறப்பாக ஆடுவதில்லையே. அவர்களுக்கு ஈடுபாடு குறைகிறதே! எனக்கு பெரிய மனக்குறை. உள்ளத்தில் பெரும் ஏமாற்றம் ஒன்று, சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. அந்த நாளிலிருந்து என் மனமே உடைந்துவிட்டது...'' அவள் குரல் தழு தழுத்தது.

அவளை மெல்ல அணைத்த அரசி, ''மரகதம்! இந்த நிலையில் நீ வருந்தக்கூடாது. கலைஞர்கள் கவலை

யின்றி இருப்பதற்காகத்தானே உடுக்க உடை, தங்க வீடு, தட்டாது உண்ண உணவு இவற்றை அரசே அளிக்கிறது. உன் உள்ளத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி என்னவென்று நான் அறியலாமா?'' என்று கேட்டாள்.

விழி நீரை மெல்லத் துடைத்து, ''அரசியார் அவர்களே! மலர்விழி என்ற பெண்ணை நான் எடுத்துவளர்த்து வந்தேன். அது பெரிய கதை. அதைச் சொல்லித் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. உட்கார வசதியற்ற இடத்தில் தங்களை இருக்கச் செய்வதே மரியாதையாகாது. அதனால் சுருக்கமாகச் சொல்கிறேன். மலர்விழிக்கு நான் அறிந்த கலைகளைக் கற்றுக் கொடுத்தேன். எனக்குப் பிறகு அவள்தான் கங்கை கொண்ட சோழீசருக்கு நடனாஞ்சலி செய்யத் தகுதியானவள் என எண்ணியிருந்தேன். சந்தியா நிருத்யம் கற்றுக் கொடுத்தேன். அவள் பயின்றாள். ஆனால்...'' என்று கூறிச் சற்று நிறுத்தியது வேதனையை உள்ளடக்கிக் கொண்டிருப்பதைப் புலப்படுத்தியது.

அரசி ஆவலுடன் மேலும் அறிய விரும்பி, ''உம்! சொல்லு...சொல்லு... மலர்விழி என்ன ஆனாள்? அவள் எங்கே?'' என்று கேட்டாள்.

''அரசியார் அவர்களே! அவளுக்கும் ஓர் இளைஞனுக்கும் காதல் மலர்ந்தது. ஒரு நாள் அவள் என்னை விட்டுப் பிரிந்துவிட்டாள்...'' என்றாள்.

காதலா? சோழ நாட்டு நடன மாதர்கள் காதலித்துத் திருமணம் செய்து கொள்வதா? அதற்கு அனுமதி இல்லையே உம்...போகட்டும்......அவள் இப்பொழுது எங்கே?''

''அவள் இப்பொழுது கரூரில் இருக்கிறாள் என்று அறிகிறேன்.''



''கரூரிலா? நமது கொங்குச் சேரர்களின் தலைநகரான வஞ்சியிலா? ஐயோ — நல்லதொரு கலைஞரைக் கொங்குச் சேரர்கள் சதி செய்து அழைத்துச் சென்று விட்டனர் என்று நான் நினைக்கிறேன். மன்னர் அறிந்தால் மிகவும் கோபப்படுவார்களே!'' என்று அரசி சொல்லும்போது அரசியின் முகத்தில் ஒருவித அச்சம் தெரிந்தது.

சோழ அரசியின் பேச்சிலே ஒருவித அச்சமும், பயமும் கலந்திருப்பதை மரகதவல்லி கண்டாள். அவள் அரசியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களையும் நோக்கினாள்.

மரகதவல்லிக்கும் அச்ச உணர்வு எழுந்தது. மலர்விழியின் செய்கை அரச விரோதமானது என்பதால், மலர்விழியை வளர்த்த தன் மீதும் அரசியார் கோபங் கொண்டு விடலாம்.

அரச கோபத்திற்கான தண்டனை தனக்கு அளிக்கப் பட்டால் என்ன ஆவது என்று ஒரு கணம் அவள் மனத்தில் தோன்றியது.

மலர்விழியின் மீது மேலும் குற்றம் சுமத்தாமல் அவளை நல்லவளாக உருவகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அரசியைச் சமாதானப்படுத்தும் வகையில், ''சோழப் பேரரசி அவர்களே! மலர்விழி மிக நல்ல பெண் அநாதையாகக் கிடந்த அவளை நான் எடுத்து வளர்த்தேன். கலைத் தேவியின் பூரண அருள் அவளிடம் இயற்கையாகவே நிறைந்திருக்கிறது. நான் பெரிய கனவெல்லாம் கண்டேன். எனக்குப் பிறகு அவள்தான் கங்கை கொண்ட சோழீசருக்குத் தொடர்ந்து நடனாஞ்சலி செய்யப் போகிறாள் என்று நம்பினேன். அவளை மயக்கி விட்டான் அந்தப் பாவி'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள்.

மரகதவல்லியின் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்ட சோழ அரசி, ''இந்த நிலையில் நீ வருந்தக்கூடாது

மரகதவல்லி. யாரவன் மலர்விழியை மயக்கி அழைத்துச் சென்று விட்டவன்?'' என்று கேட்டாள். மரகதவல்லி என்ன சொல்லப் போகிறாளோ என்று அவளருகே இருந்த மூதாட்டி ஒருத்தி மரகதவல்லியை நோக்கியபடி இருந்தாள். அரசி அந்த வீட்டிற்குள் வந்தவுடனேயே அங்கிருந்தவர்கள் வெளியேற, மூதாட்டியை மட்டும் அங்கேயே இருக்குமாறு, அரசியே சைகை செய்தாள்.

மரகதவல்லி, ததும்பிக் கொண்டிருந்த விழிநீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, ''பிராட்டியார் அவர்களே! நூறு வருடங்களாக எங்கள் பரம்பரையினர் கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் பணியாற்றி வருகிறோம். காலை மாலை நடனமாடுவதைத் தவிர, எங்கள் வீட்டிலுள்ளவர்கள் கோயிலில் சிறுசிறு வேலைகளை எந்தவித ஊதியமும் எதிர்பாராமல் செய்து வருகிறோம். எங்களுக்கு ஒருவிதக் குறையுமில்லை. நட்டுவாங்கக் காணியை இராசேந்திர சோழ மகாராசா காலத்திலேயே வரியிலாதப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். வசிக்க வீடு இருக்கிறது. வேறு எந்தவிதக் குறையுமில்லை. என் காலத்தே, மன்னர் அழைப்பிற்கிணங்க நான் சபையிலும் நாட்டியமாடுவது வழக்கம். தங்களுக்குத் தெரியும் பல தடவை என்னை அருகழைத்துப் பரிவுடன் பேசிப் பரிசில்கள் அளித்திருக்கிறீர்கள்...'' — சொல்லி வரும்போது அரசியார் குறுக்கிட்டு, ''அதற்கென்ன மரகதவல்லி! அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறாய்? கலைஞர்களை ஆதரிக்க வேண்டியது எங்கள் கடமை. உன்னைப் போன்ற நாட்டியக் கலையில் புலமை மிக்க நடனமணிகளுக்கு மேலும் பல உதவிகள் செய்ய வேண்டும் என்பது அரசரின் உள்ளக் கிடக்கை... உன்னைப் பற்றியும், உன் குடும்பத்தைப் பற்றியும் நீ விவரிக்காமலேயே அரண்மனையிலுள்ளவர்கள் அறிவர். கங்கை கொண்ட சோழீசரின் திருச்சந்நிதியில் நீ ஆடும் சந்தியா நர்த்தனத்தின்



பெருமை உலகமெங்கும் பரவியிருக்கிறது. எங்களுக்குப் பெருமை; மரகதவல்லி. அரசருக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா!''

அரசி இவ்வாறு கூறியவுடன், அரசியின் புகழுரை கேட்டு நெகிழ்ந்து, எழுந்து வணங்க முயன்ற மரகதவல்லியின் கை தொட்டு அமர்த்தி, ''மரகதவல்லி, உன் திறமையை நானும் அறிவேன். அதனால்தான் உன் உடல் நலம் கேட்டறிய இங்கே வந்தேன்'' என்றாள்.

''நான் கண்டெடுத்து வளர்த்த, மலர்விழிக்கு நான் நாட்டியக் கலையின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் கற்றுக் கொடுத்தேன். தாங்கள் அவளைப் பார்த்திருக்கலாம். காலை வேளையில் நாட்டியப் பெண்களுடன் சேர்ந்தாடும் போது அவளுடைய திறமை மட்டும் பளிச்சிடும். அவளும் பளீரெனத் தோற்றமளிப்பாள்...'' — சொல்லும் மரகதவல்லியின் இதழ்களில் மெல்லிய முறுவல் பூத்தது.

அரசியாரும் விழிகளாலேயே சிரித்து, ''மிக அழகாக இருப்பாளா?'' என்று கேட்டாள். ''ஆமாம் தேவி! அவள் விழிகள் வட்டவடிவமாக இருக்கும். நீண்ட நாசி. அவள் சிரிப்பு மற்றவரை மயங்க வைக்கும். மான் போல் துள்ளி ஆடக் கூடிய உடல்வாகு. விழிகள்கூட சில சமயம் மான்கள் விழிப்பது போல் இருக்கும். அதில் ஒரு குழந்தைத்தனம் இருக்கும். அதிர்ந்து பேசமாட்டாள். சொல்வதை உடனே மனத்தில் பதிய வைத்துக் கொள்வாள்''

''ஓ! கவனத்தைக் கவரும்படியான அழகும் கலைத் திறமையும் அவளிடமிருந்ததால் தான் ஆபத்தாகி விட்டது; அப்படித் தானே?'' அரசி கேட்டாள்.

ஒரு கணம் திகைத்த மரகதவல்லி, ''அப்படிச் சொல்லி விட முடியாது தேவி! அவள் என்னை விட்டு ஒரு கணம் கூட வேறு எங்கும் செல்லமாட்டாள். 'அம்மா—

அம்மா' என்று என்னை அழைக்கும் ஒவ்வொருசொல்லும் என்னைச் சிலிர்க்க வைக்கும். என் சொந்த மகனுக்கும் மேலாக அவனை நான் பாலித்து, ஒரு குறையும் இல்லாமல் வளர்த்து வந்தேன்...'' என்று கூறும்போது அரசியார் குறுக்கிட்டு,

''நீ அவனுடைய சொந்தத் தாயல்லள்; நான் ஓர் அனாதை என்பதை அவள் எப்போது தெரிந்து கொண்டாள்?'' அரசி கேட்டாள்.

மரகதவல்லி அதற்கு மறுமொழி கூறும் முன்பு, அங்கிருந்த மூதாட்டி குறுக்கிட்டு, ''இவளும் ஒரு குழந்தைங்க; தன்னைப் போலவே இவள் மற்றவரையும் வெள்ளை உள்ளம் கொண்டவள் என்று நினைத்து விடுவாள். மரகதவல்லியும் அனாதைதாங்க. ஆனால் ஒரு தடவை கூட தன் தாயார் யார் என்று கேட்டறிந்து கொள்ள ஆசைப்பட்டதே கிடையாது. ஆனால் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மலர்விழி என்னிடம் ''பாட்டி, உண்மையைச் சொல்லுங்க. அம்மா என் சொந்த அம்மா இல்லையா?'' என்று என்னிடம் கேட்டாள். மரகதவல்லியை அம்மா என்றுதான் அவள் அழைப்பாள். அப்பொழுதிருந்து தான் அவள் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்று கிழவி கூறிய போது மரகதவல்லி, ''ஏ கிழவி — அரசியாரிடம் மரியாதையாகப் பேசு. இதுவரை என்னிடம் சொல்லாததை எல்லாம் அரசியாரிடம் சொல்ல உனக்குத் துணிவு எப்படி வந்தது? போ, வெளியே! வெளியே போய் இரு. பிறகு வரலாம்'' என்று அதட்டலுடன் கூறினாள்.

குலோத்துங்க சோழ தேவரின் பட்டத்து அரசி. புவனமுழுதுடையாள் என்றெல்லாம் உலகம் போற்றும் பெருமகள், திரிபுவன மாதேவியின் இதழ்களில் குறும்புப் புன்னகை மிளிர்ந்தது.



கிழவியை அந்த இடத்தை விட்டுப் போக வேண்டாம் என்று அரசி சைகை செய்து ''பாட்டி, உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டாள்.

# 2

பாட்டி சொன்னதைக் கேட்டபோது சோழ அரசி புவனமுழுதுடையாளுக்கு வியப்பு ஒரு புறமும் சிரிப்பு ஒரு புறமுமாக எழுந்தன. அவள் வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டாள்.

வயது முதிர்ந்து, பல்லெல்லாம் போனாலும் சொல் போகாத நிலையிலுள்ள அந்த மூதாட்டி பேசுவதையே கூர்ந்து நோக்கியவாறிருந்தாள் அரசி.

மரகதவல்லியை வளர்த்து, அவளுக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக இருந்து வருவதால் பாட்டி பேசிவரும்போது மரகதவல்லி ஏதும் குறுக்கிடவில்லை.

மரகதவல்லி தன் வாழ்நாளை நடனக் கலைக்கே அர்ப்பணம் செய்திருந்ததால் அவளுக்கு உலகப்புற இன்ப வாழ்க்கையில் அதிகம் கவனம் செலுத்த முடியவில்லையா? அல்லது விருப்பமில்லையா என்பது தெரியவில்லை. காலை துயில் எழுந்தவுடனேயே நீராடிவிட்டு சோழீசர் கோயிலுக்குச் சென்று விடுவாள்.

அவள் செல்லும்போது தேர் நிலை அருகே இருக்கும் வீட்டிலிருந்து ஓர் இளைஞர் அவளைப் பின் தொடர் வான். கையில் மலர்க்கூடையுடன் மரகதவல்லி விரைந்து நடக்கும் போது அவன் சற்றே தள்ளிப் பின் தொடர் வான்.

அப்போது அவனது ரசனை எல்லாம் அவள் நடந்து செல்லும் அழகைச் சுற்றி வட்டமிடும்.

பின் இடையைத் தொட்டவாறு அசைந்தாடும் பின் சடை ஒரு சமயம் கருநாகம் போல் அவளை எச்சரிக்கும். அவள் வேகத்துக்கு ஏற்ப அவன் விரைந்து நடந்து அவள் நடைக்குச் சரி சமமாக காலடி எடுத்து வைத்து நடப்பான். அவன் மேனியிலே நறுமணம் சந்தனம் பூசியிருந்தான்.

தன்னருகே நறுமணம் வீசுவதைக் கண்டு அவள் திடுக்கிட்டு நோக்குவதை மெல்லத் தன் பல் வரிசையைக் காட்டி அவன் சிரிப்பான். ஏதோ பேசவேண்டும்போல் அவன் உதடுகள் துடிக்கும்.

மரகதவல்லி வெறுப்புக் கலந்த விழி நோக்கை வீசி அவனிடமிருந்துப் பார்வையைத் திருப்பி தன் நடையை மேலும் துரிதப்படுத்துவதுடன், தனக்கு முன்னே சென்று கொண்டிருக்கும் முகமறிந்த யாரையாவது பெயர் சொல்லிக் கூப்பிடுவாள். அவரும், மரகதவல்லியின் அழைப்பு ஏதோ தேவ கன்னிகையின் அழைப்பு எனப் பல்லிளித்துப் பேசத் தொடங்குவார். அந்த இளைஞன் தன் நடை வேகத்தைக் குறைத்து, மெல்லப் பின் தங்கி வேறு பக்கமாகப் போய்விடுவான்

சில நாட்கள், அவன் கங்கைகொண்ட சோழீசர் கோயில் நுழை வாயிலுக்கருகே நிற்பான். சில நாட்கள், கோயில் பெருஞ்சுற்றிலே இருக்கும் சிங்கக் கிணற்றருகே, மரகதவல்லி நிற்கும்போது எங்கிருந்தோ அருகே வந்து விடுவான்.

''இந்தக் கிணற்றிலே இறங்கும்போது நடுவே ஓர் சுரங்கவழி இருப்பதாகச் சொல்கிறார்களே நிஜந்தானா?'' என்று கேட்பான். அந்தக் குரலில் ஒருவிதக் கவர்ச்சி யிருப்பதை அவள் உணர்ந்தாள். அவள் குரல்கள் நமச்சிவாய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன. அதனால் அவன் கேட்டதை அவள் பொருட்படுத்த வில்லை.



மரகதவல்லி எரிச்சலுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விரைந்து நடந்தாள்.

ஒரு நாள் கோயிலின் திருச்சுற்றில் வெளிமாடத்தி லுள்ள கலைமகளின் சிற்பத்தின் எதிரே நின்று, மெய் மறந்து மரகதவல்லி துதித்துக் கொண்டிருந்தாள். ஒரு கையில் பூக்கூடை.

நீராடி, உலராத கூந்தலை உலர்வதற்காக அள்ளிச் செருகி, துணியைச் சுற்றிக் கொண்டிருந்தாள். நெற்றி யிலே வட்டமான குங்குமப்பொட்டு, மஞ்சள் பூசியதால் மேலும் சோபையை கூட்டும் வதனம். மூடிய இமை, விழிகள் மீனோ, கூர்வேல் நெடுங்கண்ணோ, என்று வர்ணிக்கச் செய்யுமளவுக்கு வடிவழகுடன் திகழ்ந்தன.

உயரே மாடத்தில் விளங்கும் ஞானதேவிச் சிற்பத்தின் கீழே அந்த இளைஞன் புன்முறுவலுடன் நின்று தன்னை மறந்துத் துதித்தவாறு இருக்கும் மரகதவல்லியின் தோற்றத்தைத் தன் மனத் திரைச் சீலையில் ஓவியமாகத் தீட்ட முயன்று கொண்டிருந்தான். அவன் விழிகளும் இப்பொழுது இமைக்காது மூடிக் கொண்டன.

அவன் இதயத்தில் மரகதவல்லியின் அழகிய தோற்றம் வரிவடிவமாகப் பதிந்தது. கூப்பிய கரங்கள், மூடிய விழிகள். இறைவன் பெயரை முணுமுணுக்கும் இதழ்கள். அள்ளிச் செருகிய கூந்தல். எழிலின் எதிரொலியாக நிமிர்ந்து நிற்கும் செங்கலச மார்புகள். அதை மேலும் அழகுப்படுத்தும் வண்ணக் கச்சை. கச்சையை மூடியும் மூடாமலும் தவழும் மேல் துகில். மூங்கில் தோள். சற்றே சாய்ந்த முகத்தோற்றம் கழுத்திலே மெல்லிய முத்துமாலை கையிலே வளையல், காலிலே சதங்கை.

''ஆகா; இவள் இப்படியே இங்கே இதே இடத்தில் ஆடமாட்டாளா? இளங்காலைப் போதில், காலைக் கதிர

வனின் மெல்லிய குழலல் கோயில் எங்கும் பரவியிருக்கையில்மரகதவல்லி ஆடினால்,இந்த வாழ்நாளெல்லாம் அந்த இனிய அநுபவத்தை மனத்தில் அழியாமல் பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம்...'' என்று அவன் எண்ணினான்.

பாட்டி சொல்லி வரும்போது இளங்குறும்பு நகையுடன், ''பாட்டி அந்த இளைஞன் மனத்தில் இருப்பதைத் தாங்கள் எப்படி அறிந்தீர்கள்?'' என்று கேட்டான்.

பாட்டி சற்று நாணத்துடன்? ''பிராட்டியார் அவர்களே! மரகதவல்லி என்னிடம் மனம் விட்டுப் பேசியபோது சொன்ன வார்த்தைகள். அந்த இளைஞனுடன் ஏற்பட்ட அநுபவத்தை மரகதவல்லி ஒரு வார்த்தை விடாமல் சொல்லியிருக்கிறாள். என்கற்பனை ஏதுமில்லை இதில்'' என்று கூறி பொக்கை வாய் தெரிய ஓசை எழாமல் சிரித்தாள்.

ஞானதேவியின் திருச்சிற்பம் முன்பே மரகதவல்லி மெய் மறந்து நிற்கவும், அவனையே பார்த்தவாறு அந்த இளைஞன் நிற்கவும் எவ்வளவு நேரம் அப்படியே இருக்க முடியும்? இளைஞன் மெல்லிய குரலில் பாடினான்.

மரகதவல்லியின் செவிகளில் அந்தக் கீதம் தேனாகப் பாய்ந்து மெய் சிலிர்க்க வைத்து, அவள் விழி விரித்து அவனை நோக்கினாள். அவனையறியாமலேயே ''ஆகா! மிக இனிமையாகப் பாடுகிறீர்களே'' என்றாள்.

அந்த ஒரு சொல்லுக்காக ஏங்கியிருந்த அவன் மெய் சிலிர்த்தது. அவன் ஒரு முறை விழிகளை மூடித் திறந்தான்.

''என் இதய ஓவியம் இப்பொழுது உயிர் பெற்று விட்டது'' என்றான்.



மரகதவல்லிக்குப் புரியவில்லை. அவர் குரலை நாம் ரசித்தோம். பாராட்டினோம். அவரோ 'ஓவியம் காவியம்' என்கிறாரே.

''ஐயா, உங்களைத்தான்! உங்கள் பாடல் இனிமை, குரல் இனிமை. சோமீசர் கோயிலில் பதிகங்களை ஓதுவார் பாடுகிறார்கள். ஆனால் குரலில் இனிமை இல்லை', என்றாள்.

''சித்திரம் பேசிவிட்டது. இவ்வளவு நாட்கள் நான் செய்த தவத்திற்குப் பலன் கிடைத்துவிட்டது'' என்ற அவன் பேச்சில் அடங்கிய உண்மை அவளுக்குப் புரியவில்லை.

''என்ன சொல்கிறீர்கள்? நான் உங்கள் குரலினிமையையும், பாடல் பொருளழகையும் பற்றிப் பாராட்டினேன்'' என்றாள் மரகதவல்லி. ''என் குரல் வாழ்க. நான் பாடிய பாடல் வாழ்க. பாடலைப் படைத்த தமிழ்க் குரவர் வாழ்க. என் பாடல் இனிமையாக இருந்ததாலல்லவா நீ பேசினாய்'' என்று அவன் பேசும் சொற்கள் கூட இனிமையாக இருந்தன. அவள் நிற்பது நடப்பது, சிரிப்பது, பார்ப்பது, பேசுவது அனைத்திலும் இனிமை பொங்கியிருப்பதை அவன் கண்டான். அவளிடம் சிறிது நேரம் பேச வேண்டும்போல் தோன்றியது. ஆனால் கோயிலுக்குள் செல்ல வேண்டிய அவசரம் அவளை உந்தியது.

அவன் அந்தப் பாடலை மீண்டும் ஒருமுறைப் பாடிப் பார்த்தான்:

**ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே**
**அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்காதாரே**
**ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடாதாரே**
**உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகாதாரே**

**பாட்டுவித்தால் ஆர்ஒருவர் பாடாதாரே**
**பணிவித்தால் ஆர்ஒருவர் பணியாதாரே**
**காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணாதாரே**
**காண்பார் ஆர்கண்ணுதலாய்க் காட்டாக்**
**காலே,**

அந்த இளைஞன் பாடிய திருப்பதிகம் அவள் உள்ளத்துள் புகுந்து உடலெங்கும் பரவிச் சிலிர்க்க வைத்தது. அது என்ன அற்புதமான பாடல். அவள் கரங்கள் நெளியத் துடிக்கின்றன. அவள் பாதங்கள் பூமியில் தாளமிடத் தவிக்கின்றன.

இன்னும் ஒரு தரம் அவனைப் பாடச் சொல்லிக் கேட்க வேண்டுமென ஆவல் ஏற்பட்டது.

அவன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

''உங்களுக்குத் தேவாரத் திருப்பதிகங்கள் முழுமையும் தெரியுமா?'' மரகதவல்லி கேட்டாள்.

அவன் வாய் திறவாமல் தலையை மட்டும் அசைத்தான், தெரியும் என்பதைத் தெரிவிக்க.

''சிற்றம் பலப் பதிகத்தை யார் எழுதியது?'' அவள் கேட்டாள்.

''திருநாவுக்கரசர்.''

அவள் விழிகளை மூடிக்கொண்டு உணர்ச்சி வயப்பட்டு ''ஆகா; நடனமிடுவதற்கு ஏற்ற பாடல்...'' என்றாள்.

''அதனால்தான்... பாடலுக்கேற்ற தங்கள் நடனத்தைக் காண ஆசைப்பட்டேன். 'ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே...' என்று நாவுக்கரசர் பாடி என்ன பிரயோசனம்...?'' என்றான் அந்த இளைஞன்.

மரகதவல்லி புருவத்தைக் கேள்விக் குறியாக உயர்த்தி வளைத்து, ''ஏன்?'' என்று வினவினாள்.



''உன்னை ஆட வைக்க ஆசைப்பட்டேன் முடியவில்லை. ஆனால் அப்பர் பெருமானோ ஆடச்சொன்னால் ஆடுமாறு ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தினால் யார்தாம் ஆட மாட்டார்கள் என்று கேட்கிறார். நான் நாவுக்கரசரா? சாதாரண கருணாகரன் தானே!'' என்று சோகமும் சோர்வும் ததும்பப் பேசினான்.

''ஓ! உங்கள் பெயர் கருணாகரனா? இதுவரை நான் தங்கள் பெயரைக் கேட்டறிந்து கொள்ளவில்லை, என் பெயரை நீங்கள் கேட்கவில்லையே?'' என்று மரகதவல்லி கேட்டாள்.

''கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அளவுக்குச் சாதாரணமான பெயரல்லவே. மரகதவல்லியை அறியாதவர்கள் இருக்க முடியுமா?'' அவன் பார்வை, பேச்சு அவள் இதயத்தை ஊடுருவ முயன்றது.

''நான் என்ன அரசிளங்குமரியா? படைத் தலைவர் மகளா? அல்லது நகர வணிகர் குடும்பத் தலைவியா? அவள் கேட்டாள்.

''ஓ! நீங்கள் சொன்ன அத்தனை பேரும் கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரபலமானவர்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்களுக்கு ஆடத் தெரியுமா? உன் விழியைப் போல் அவர்களுக்குச் சுண்டியிழுக்கும் விழிகள் உண்டா? அவர்களை எனக்குத் தெரியாது. உன்னைத்தான் நான் அறிவேன். சோழீசர் முன்பு நீ நாள்தோறும் ஆடும்போது நான் பார்த்திருக்கிறேன். இறைவன் மீது பாடப்பெற்ற பதிகங்களுக்கு ஏற்றவாறு நீ அபிநயிப்பதை நான் என்னை மறந்து ரசித்திருக்கிறேன் அதனால் உன்னைப் பற்றி விசாரித்தறிந்தேன். உன் பெயரைக் கேட்டறிந்தேன். உன்னை அறியாதவர்கள் சோழபுரத்தில் யாரும் இருக்க முடியாது'' என்று அவன் உணர்ச்சி மிகுதியால் பேசினான்.

அவன் பேசுவது அவனது உள்ளத்திலிருந்து வரும் சொற்களாக இருப்பதை அவள் உணர்ந்தாள்.

அவள் மெல்ல அவனை உற்று நோக்கிப் புன்முறுவல் பூத்தாள்.

"நன்றாகப் பாடுகிறீர்கள், நன்றாகப் பேசுகிறீர்கள், நன்றாகப் புகழ்கிறீர்கள்" என்றாள்.

"மேலும் மேலும் உன்னைச் சொற்களால் அலங்கரிக்க நினைக்கிறேன். இப்பொழுது நீ இங்கே எனக்காக இந்தப் பதிகத்திற்கு ஆடினால் உனக்குப் புகழாரம் சூட்டுகிறேன்" என்று அவன் கெஞ்சினான்.

அவளுக்குப் பெருமையாகத்தானிருந்தது. ஆனால் அந்த இடத்தில் அந்த நேரத்தில் அவள் ஆட விரும்பவில்லை.

ஒருவிதமாக அவள் ஒலியை எழுப்பி, "இங்கா, நான் ஆடுவதா? இந்த நேரத்தில் ஆடக் கூடாது. மிகத் தவறு. காலைப் பூசை முடிந்தவுடன் வீணையும் குழலும் ஒலிக்க வேதம் முழங்க, வாத்யக் கோஷங்கள் எழ அதன் பிறகு நான் பாடுவேன். இங்கெல்லாம் நான் ஆடக் கூடாது. ஆடமாட்டேன்..." என்று கூறி அவள் அங்கிருந்துச் செல்ல முயன்றாள். அதற்கு முன்பு, "கருணாகரா, நீ இப்பொழுது பாடிய திருநாவுக்கரசரின் பதிகம் மிக அற்புதம். மற்றொருதடவைப் பாடுகிறாயா?" என்றாள்.

அவள் வார்த்தைகளில் நீங்கள் என்பது மாறி நீ என்று ஒலிப்பதை கருணாகரன் கவனிக்கமாலில்லை. "நீ இந்தப் பதிகத்திற்கு ஆடுகிறேன் என்று உறுதி கொடு நான் பாடுகிறேன்" என்று கூறி அவன் அவளை நெருங்கினான்.

"இங்கா...கூடவே கூடாது... முடியவே முடியாது. அரசர் அறிந்தால் சினங்கொள்வார். சினத்துடன் சீறுவார்; அது தண்டனையில் முடியும். நான் ஒரு



யோசனை சொல்கிறேன். என் வீட்டிற்கு வந்து திருநாவுக்கரசரின் பதிகத்தைப் பாடுகிறாயா?" என்று மரகதவல்லி கேட்டாள்.

"அவ்வாறு ஆடுவதாக உறுதி கூறுகிறாயா? என்னை வரவழைத்து, என்னைப் பாடச் சொல்லிவிட்டு பிறகு என்னைப் போய்வா என்று சொல்லிவிடக்கூடாது" என்று கருணாகரன் உறுதி கேட்டான்.

கிழவி கூறிவருவதை ஆவலுடன் கேட்டு வந்த அரசிக்கு சற்றுச் சலிப்பும் ஏற்பட்டது. கிழவி மிகவும் சுற்றி வளைத்துப் பேசுகிறாள். முழுக் கதையையும் அவள் சொல்லக் கேட்பதற்குள் பொழுது விடிந்து விடும் என்று எண்ணினாள்.

"பாட்டி நடந்தது நடந்தபடி சொல்கிறீர்களே! எவ்வளவு வருடத்துக் கதையை நினைப்பில் வைத்திருக்கிறீர்களே" என்று கேட்டாள்.

"நினைவா! என் பார்வையாற்றலும், நினைவாற்றலும் இன்னும் மழுங்கிவிடவில்லை. மரகதவல்லியின் இளம் வயதிலிருந்து நான் அவள் அருகேயே இருக்கிறேன். நான்தான் அவளை வளர்த்தேன் என்று சொல்லலாம், இளம் வயதில் மரகதவல்லியைப் போன்று நானும் மிக அழகிதான்" என்று மூதாட்டி சொல்ல முற்பட்டபோது சற்று அதட்டும் குரலில் மரகதவல்லி சலிப்புடன், "பாட்டி நீ முதலில் இங்கிருந்துப் போகப் போகிறாயா இல்லையா? உன் தாயார் ராஜேந்திர சோழர் மாளிகையில் பணிபுரிந்த காலத்திலிருந்து சொல்ல ஆரம்பித்து விடுவாய். நம்மைப் போல் வேலை, வெட்டி இல்லாதவர்களா அரசியார்" என்றாள்.

பாட்டி மௌனமானாள். "மரகதவல்லி, பாட்டியை கோபிக்காதே, உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும் என்ற ஆவலில், உண்மையை அப்படியே சொல்ல

வேண்டும் என்ற ஆசையில் ஒன்றுவிடாமல் சொல்கிறாள்' என்று கூறி மூதாட்டியின் பக்கம் திரும்பி, ''பாட்டி மேலே நடந்தவற்றைச் சொல்லுங்கள். மரகதவல்லியின் உடல் நிலையைப் பற்றி அரசிடம் நான் சொல்ல வேண்டும். கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். இசையில் வல்லவனான அந்த இளைஞன்— பெயர் என்ன சொன்னீர்கள்—கருணாகரன். அவன், மரகதவல்லியின் வீட்டிற்கு வந்தானா? அப்பர் பெருமானின் பாடல்களைப் பாடினானா? மரகதவல்லி ஆடினாளா? இருவருக்கும் காதல் வளர்ந்ததா?'' என்று அரசி கேட்டபோது மரகதவல்லி சற்று நாணத்துடன், ''மகாராணியாரே; நானே சுருக்கமாகச் சொல்கிறேன்'' என்றபோது அரசி வியப்புடன் அவளை நோக்கினாள்.

''கருணாகரன் என்ற பெயர் கொண்ட அந்த இளைஞன், என்னைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று பல மாதங்களாகவே முயன்றிருக்கிறான். அன்றுதான் அவன் துணிவுடன் என்னிடம் பேசினான். நான் அவனது கலை ஆர்வத்தைக் கண்டு அவனுடன் பேச முற்பட்டேன். அவனது குரலினிமையில் மயங்கினேன். இறைவன் முன் அல்லாது மற்ற மனிதர் முன் ஆடுவதில்லை என்ற உறுதி கொண்டிருந்த நான் என் கொள்கையிலிருந்துச் சற்றுத் தளர்ந்தேன். அவனை என் வீட்டிற்கு வரச் சொன்னேன். ஆடவர்களை எதிட்டுப் பாராத நான் கருணாகரனை வீட்டிற்குள் அழைத்துப் பாடச் சொன்னதும், பிறகு பாடலுக்கேற்ப ஆடியதும் கண்டவர்கள் வியப்படைந்தனர்.

கருணாகரன் என்னைக் கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் சந்தித்துப் பேசுவான். என்னை மிக நெருக்கமாக அணுகி அவன் பேச முற்படுவதை நான் கவனித்திருக்கிறேன். தனக்கு உற்றார் உறவினர் ஒருவரும் இல்லை என்றும் தேர் நிலை அருகே உள்ள ஓர் வணிகர் வீட்டில் பணி செய்து வருவதாகவும் வணிகரிடம் பணி புரிய



வரும் முன்பு காஞ்சிபுரத்தில் தமிழும், இசையும் பயின்றதாகவும் அவன் கூறினான். இறைவன் சந்நிதியில் நான் ஆடுவதை நாள்தோறும் பார்த்துப் பெருமூச்சுவிடுவான். அவனுடைய விருப்பத்தை ஒருநாள் அவன் என்னிடம் வெளிப்படுத்தினான்...'' என்று கூறி அவள் சற்று நிறுத்தினாள்.

''நான் நினைத்தேன் தன் காதலைத்தானே?'' என்ற அரசி கேட்டாள்.

''இல்லை அரசியார் அவர்களே! தனக்கு நடனம் கற்றுத் தருமாறு என்னைக் கேட்டான்...''

''நடனமா...?'' அரசி வியப்புடன் வினவினாள்.

''ஆமாம்; ஆடற்கலையில் நல்ல தேர்ச்சி பெற்று தெய்வ சந்நிதானத்திலும் அரசரவையிலும் ஆடி அரும் புகழும் பெறவேண்டும் எனும் தன் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்தான்...''

''ஓகோ! நிருத்தப் பேரரையன் ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டானோ? நம் சபையிலும் கோயிலிலும் நிருத்தப் பேரரையர்கள் யாருமில்லை என நினைக்கிறேன்...'' என்றாள் அரசி.

இப்பொழுது இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு இல்லை, நட்டுவகாணி, பெறத் தகுதியுடையவர்கள் அந்தப் போதில் இல்லை. அதனால் கருணாகரன் நிருத்தப் பேரரையனாக ஆசைப்பட்டான். அவன் ஆசைப்பட்டது எனக்கு வியப்பாக இருந்தது.''

''வியப்பு என்ன! சிவபெருமான் கூத்தரசன் அல்லவா? நிருத்தகாரி என்ற பெயர் அவருக்கு உண்டு. ஆண்கள் நடனம் பயில முன்வர வேண்டும் என்பதற்காகவே நிலங்களை அளிக்க முன் வந்தோம். உம்; பிறகு சொல்லு. அவனுக்கு நீ நடனம் கற்றுத் தந்தாயா?'' அரசி ஆவலுடன் கேட்டாள்.''

''நல்ல நாள் பார்த்து நடனம் கற்றுத்தர தொடங்கினேன். வீட்டில் பலத்த எதிர்ப்பு. இதோ இந்த பாட்டி மிகக் கடுமையாக எதிர்த்தாள். ஆனாலும் கருணாகரனுக்கு நான் ஆரம்பப் பாடம் முதல் கற்றுத் தந்தேன். அவன் முறையாக கற்றுக் கொள்வதற்கு முன்பு ஒரு நாள் தன் மன விவகாரத்தைப் புலப்படுத்திவிட்டான். சொல்லி முடிக்கும் போது அவன் குரல் தழுதழுத்தது. ''என்ன நேர்ந்தது......?'' அரசி ஆவலும் பரபரப்பும் நிறைந்த குரலில் கேட்டாள். பாட்டி இப்பொழுது குறுக்கிட்டாள். ''என்ன நேர்ந்தது? ஓர் பருவ மங்கையும், இளைஞனும் நாள் தோறும் ஒன்று சேர்ந்து பழகினால் என்ன நேரிடும்? ஒருநாள் கருணாகரன் ஒரு பகல் வேளையில் யாரும் இல்லை என்று நினைத்துக் கொண்டு மரகதவல்லியிடம் தன் அடக்க முடியாத காமத்தை வார்த்தைகளால் எடுத்துப் பிதற்றி, மரகதவல்லியை இருக அணைத்துக் கொண்டான்.

''பிறகு?'' பரபரப்புடன் அரசி கேட்டாள்.

''மரகதவல்லி பெண் புலியெனச் சீறினாள். அந்தக் கணமே அவன் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கர்ஜித்தாள். கருணாகரன், இப்படி அவள் சொல்வாள் என்று எதிர்பார்க்கவில்லை. தடுமாறினான். திகைத்தான், அஞ்சி நடுங்கினான். ''என்னை மன்னித்து விடு மரகதவல்லி'' என்று அவள் காலில் விழுந்தான்.

அந்த அறையிலிருந்த தன் சதங்கைகள் தாளம் இவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறினான். வெளியேறும் போது விழிகளில் நீர்மல்க அவன் ஒன்று கூறினான். அதை அழுத்தமாகக் கூறினான். அது சபதம் போல் இருந்தது'' என்று மூதாட்டி கூறியபோது, ''அரசி சபதமா? என்ன சபதம்?'' என்று கேட்டாள்.

# 3

''பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், தங்கைக் கொண்ட சோழீசர் திருக்கோயிலின் நுழைவாசலில் பத்து வயது கூட நிரம்பாத ஓர் சிறுமி அழுதவாறு உட்கார்ந்து இருந்தாள். மேலே சிறு அங்கி. இடையே கிழிந்த பாவாடை. அவளைப் பார்த்தவுடன் நான் சற்று நின்றேன். அவளை நெருங்கி, அவள் ஏன் அழுகிறாள் என்று கேட்டறிய எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. ஏன் அப்படித் தோன்றியது என்று எனக்கே தெரியவில்லை'' என்று மரகதவல்லி சொல்லத் தொடங்கினாள்.

சோழ அரசி கேட்டதற்குத் தானே தொடர்ந்து கூறி வராமல், மரகதவல்லியே சொல்லட்டும் என்று மௌனமாக இருந்தாள் மூதாட்டி.

''மரகதவல்லியே சொன்னால்தான் சரியாக இருக்கும் ஏனென்றால் அவளே நேரே கண்டு, கேட்டு அனுபவித்ததை அவளே சொல்வதுதான் இயற்கையாக இருக்கும்'' என்று மூதாட்டி அபிப்பிராயப்பட்டாள்,

''தேவி! தங்களுக்குள்ள பல முக்கிய வேலைகளுக்கிடையே என் வீட்டிற்கு வந்தது சோழ அரசியின் உயர்ப் பண்பைக் காட்டுகிறது. ஓர் நடன மாது உடல் நலம் சரி இல்லாமல் இருக்கிறாள் என்றால், பணியாட்களை விட்டுக் கேட்டறிந்திருக்கலாம். தாங்களே நேரே வந்து இவ்வளவு நேரம், காற்றோட்டமில்லா சிற்றிடத்தில் அமர்ந்து என் கதையைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நடந்து போன கதையை மனம் விட்டு நான் சொன்னால்தான் இன்றைய நிலைமைக்கு விளக்கமாக அமையும்'' என்று கூறிவிட்டு மெல்ல அரசியின் முகத்தை நோக்கினாள்.

''உம்: சொல்லு மரகதவல்லி. அவளைத் தாண்டி விட்டாள் மூதாட்டி. அத்துடன் மிக முக்கியமான சம்பவம் ஒன்று புதைந்திருக்கிறது. அதை நான் கவனமாக அறிந்து அரசிடம் சென்று உரைக்க வேண்டும். ஒன்றும் ஒளிக்காமல் சொல்லு மரகதவல்லி'' என்றாள் அரசி.

கோபுர வாசலில் உட்கார்ந்து அழுது கொண்டு இருந்தவன் மயில்விழிதானே என்று அரசி கேட்டாள். தொடர்ந்து வியப்புடன் மரகதவல்லி, தங்களுக்கு எப்படித் தெரியும் என்று விழியால் வினவிய மரகதவல்லி, ''ஆமாம் தேவி, அவளைத்தான் நான் எடுத்து வளர்த்தேன். அழுது கொண்டிருந்தவளை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று மெல்ல அவளைப் பற்றி வினவினேன்.''

''அவளுக்கு அம்மா இல்லையாம். அம்மா இறந்து நான்கு வருடங்கள் ஆகின்றனவாம். அவள் தநதை ஓர் ஓவியர். சித்திரம் வரைவதில் கிடைக்கும் வருமானம் அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூடப் போதவில்லையாம். கிழக்கே காவிரிப்பூம் பட்டினத்தில் அவர்கள் வசித்து வந்தார்கள். கங்கை கொண்ட சோழபுரம் சென்றால் நிச்சயமாக பிழைக்க வழி ஏற்படும் என்று அவள் தந்தை அவளை அழைத்துக் கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து புறப்பட்டாராம். நடந்தே அவர்கள் வந்திருக்கின்றனர். மாற்றுடை இல்லை. வழியே சத்திரங்களில் தங்கி பசியைத் தணித்துக் கொண்டு சோழபுரம் வந்து அடைய பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. இங்கே வந்து இரண்டு நாட்களாக அவள் தந்தை அவளையும் அழைத்துக் கொண்டு அலையாத இடம் இல்லையாம். அவள் இரண்டு நாட்களாக மனவேதனையுடன் இருந்தாளாம். இன்று காலை, கோபுர வாசலில் உட்கார வைத்துவிட்டு, சிறிது நேரத்தில் வருவதாகக் கூறிச் சென்றவர் வரவில்லை. அவள் விவரமறியாத சிறுமிதானே, கண் கலங்கினாள். விழிநீர் பொங்கித்



ததும்பியது. விசும்பினாள். பிறகு அழத் தொடங்கிவிட்டாள்.

நான் அவளைப் பற்றி உடனடியாக ஏதும் கேட்கவில்லை. பிறகு அவள் தந்தை கோயிலருகே வந்து அவளைத் தேடி இருக்கலாம். மீண்டும் நாள்தோறும் அவளைத் தேடி அவன் கோயிலுக்கே வரக் கூடும் என்று நான் நடனமாடக் கோயிலுக்கு வரும்போது அவளையும் அழைத்து வருவேன், அதே கோபுர வாயிற்படியருகே உட்காரச் சொல்வேன். அவள் தந்தை வரவில்லை.

வேளைக்கு உணவும் நான் காட்டிய பரிவும் வீட்டிலே நடனம் பயில வரும் மற்ற பெண்களின் கலகலப்பான பேச்சும் அவளது கவலையை மாற்றிவிட்டன.

கோபுர வாயிற்படியருகே உட்காராமல் சந்நிதியில் நான் நடனமாடும்போது நடனத்தைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினாள். நான் ஆடியது போல் தனியே ஆடிப் பழகினாள். சில நாட்கள் சென்ற பிறகே எனக்குத் தெரிய வந்தது. அவளுக்கு இயற்கையாக நடனத்தின் மீது ஈடுபாடிருந்தது என்பது. நடனக் கலைக்கு ஏற்ப உடல்வாகு அவளுக்கு அமைந்திருந்தது. அவளுடைய கலை ஆர்வத்தை மேலும் வளர்க்க முடிவு செய்தேன்.

இதோ இருக்கும் பாட்டி என்னைத் தடுத்தாள். இவள் யாரோ — எந்த ஊரோ, இவளுக்கு நடனம் கற்றுத் தராதே என்றாள். அனாதை என்று அவளை அழைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. பாட்டியை நான் கடிந்து கொண்டேன். பிடிவாதமாக அவளுக்கு நடனம் கற்றுத் தர உறுதி எடுத்துக் கொண்டேன்.''

மற்ற மாணவிகளுக்கு நான் நடனம் கற்றுத் தரும் போது அவளையும் சரி சமமாக நிற்க வைத்து ஆரம்பம் முதல் ஒவ்வொரு நடனக் கலையின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் சொல்லித் தரத் தொடங்கினேன்.''

இயற்கையிலேயே புத்திசாலித்தனம் கைவரப் பெற்றிருந்த மயில்விழியை மேலும் ஊக்குவித்தேன். என்னிடமிருந்த மரியாதையும், பாசமும், சற்றும் பயமும் கொண்டிருந்த மயில்விழியை நான் சொந்த மகள் போல் பாவித்தேன். கோயிலுக்கு அழைத்துச் செல்லும் போது என்னைப் பார்ப்பவர்கள் மயில்விழியைப் பற்றியும் வினவுவார்கள். அவள் என் உறவினள் என்று அவளை அறிமுகப்படுத்துவேன்.

ஒரு நாள் மயில்விழியும் நானும் மட்டும் சந்தியா நிருத்தியம் ஆடிவிட்டுக் கோயிலிலிருந்துத் திரும்பி வரும் போது நன்றாக இருட்டிவிட்டது. என் பெயரையும் மயில்விழியின் பெயரையும் சொல்லி யாரோ அழைக்கும் குரல் கேட்டது. இவ்வளவு துணிவுடன் பெயர் சொல்லி அழைப்பவர்கள் யாராக இருக்க முடியும் என்று நான் சற்றுக் கோபத்துடன் பார்த்தேன்.

அடர்ந்த தாடி மீசையுடன் ஓர் உருவம் தள்ளாடி எங்களை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. அருகே வந்ததும், ''என்னைத் தெரியவில்லையா மரகதம்'' என்று மிக உரிமையுடன் கேட்டதும் நான் சற்றுத் திகைத்து நின்றேன். மறுகணம்—

''அப்பா'' என்று மயில்விழி அவரை நோக்கிக் கூவி அவரருகே ஓடினாள்.

ஆகா; மயில்விழிக்குத் தந்தை கிடைத்து விட்டார். இவ்வளவு ஆண்டு கழித்தாவது, மகளைத் தேடி வந்தாரே என்ற மகிழ்ச்சியும் அதே போது சற்றுக் கோபமும் சூழ, ''ஐயா, தாங்கள் மயில்விழியின் தந்தையா? பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவளைக் கோபுர வாசலில் தவிக்க விட்டுச் சென்றீர்களே, நியாயமா? உங்கள் மயில்விழியை அழ அழ விட்டுச் சென்றீர்களே—அனாதையாக விட்டுச் சென்றீர்களே, அவள் என்ன ஆனாள் என்பதைப்பற்றிய கவலை இல்லாமல் எங்குச் சென்றிருந்தீர்கள்?'' என்று நான் கேள்விக் கணைகளை வீசினேன்.



மயில்விழியின் தந்தை எதும் மறுமொழி கூறவில்லை. மயில்விழியைப் பார்த்து, ''மகளே! நலமாக இருக்கிறாயா? நலமாயிருப்பாய் என்று எனக்குத் தெரியும்'' என்று சொல்லி அவள் கூந்தலை வருடிக் கொடுத்தார்.

பிறகு அவர் மரகதத்தை நோக்கி, ''நடன அரசியார் அவர்களே! நான் மகளுடன் சிறிது நேரம் தனியே பேச வேண்டும். அதற்கு அனுமதி தருவீர்களா?'' என்று கேட்டார்.

''நான் அரசியுமல்லள்; அமைச்சருமல்லள். நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் வரையில் நான் இங்கே நின்று கொண்டிருக்க முடியாது. நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து பேசலாம்'' என்றேன் கண்டிப்புடன்.

''நீண்ட நாட்கள் பிரிந்து விட்டால் ஏற்பட்ட வேதனை என் மகளுக்கும் இருக்கும்; எனக்கும் இருக்கும். அவளுடைய சுக சௌக்கியங்களைக் கேட்டறிந்து பேசி விட்டு உங்கள் வீட்டிற்கு அவளை அனுப்பி வைக்கிறேன்'' என்றார் அவர்.

''முடியாது. மயில்விழியை முன்பின் தெரியாதவர்களுடன் அனுப்ப மாட்டேன். இஷ்டப்பட்டால் என் வீட்டிற்கு வாருங்கள். இல்லாவிடில் வந்த வழியே போய் விடுங்கள். மயில்விழியின் தந்தை என்று உரிமை கொண்டாடும் தங்களை எவ்வாறு நான் நம்புவது? என்னிடம் அடைக்கலம் புகுந்துவிட்ட மயில்விழியை மிகவும் பொறுப்புடன் காப்பாற்ற வேண்டியது என் கடமை. வீணாகப் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. மயில்விழி வரமாட்டாள். நீங்கள் வருவதென்றால் உடன் வாருங்கள்...'' என்றேன்.

''மரகதம், நான் உன் வீட்டிற்கு வருவதற்கில்லை. என் மகள் என்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டாள். அதிலிருந்தே நான் தவறாக உரிமை கொண்டாடுபவனல்லன் என்பதைத் தாங்கள் புரிந்துகொள்ள

வில்லையா? சில நாழிகைகள் அவளுடன் பேசுகிறேன். பிறகு போய் விடுகிறேன். மீண்டும் நான் திரும்பி எப்போது வருவேனோ தெரியாது. என் மகளுடன் பேசக் கூட எனக்கு உரிமையில்லையா?'' என்று அவர் மிகவும் பணிவான குரலில் கேட்டார்.

''இல்லை; உரிமை இல்லை. பெற்ற மகளைச் சின்னஞ் சிறுவயதில்விட்டுச் சென்ற நீங்கள்மீண்டும் தந்தை என்று உரிமை கொண்டாட முடியாது. இதுவரை ஒருவரையும் என் வீட்டிற்கு அழைத்ததில்லை. உங்களை அழைக் கிறேன். அங்கே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிவிட்டுச் செல்லுங்கள். மயில்விழியை உங்களுடன் அனுப்ப மாட்டேன் நேரத்தை வீணாக்காதீர்கள். ஒன்று என் வீட்டிற்கு வாருங்கள், இல்லாவிடில் சென்று விடுங்கள்...'' என்று கூறி அங்கிருந்து நகர முற்பட்டேன்.

மயில்விழியின் தந்தை பெரிதாகச் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்? சிரிக்கக்கூடிய விஷயமா இது.''

''இதுவரையில் ஒருவரையும் தங்கள் வீட்டிற்கு அழைத்ததில்லை; என்னை அழைக்கிறேன் என்று கூறினீர்களே அதற்காகச் சிரித்தேன்.''

''ஆமாம், நான் சோழ அரசரின் மதிப்பும், பாராட்டும் பெற்றவள். இறைவன் சந்நிதியில் நடனமிடும் உரிமை பெற்றவள். நான் ஓர் ஆடவரையும் இதுவரையில் என் வீட்டிற்கு அழைத்ததில்லை...''

''இதுவரையில் என்று சொல்லாதீர்கள். இதற்கு முன்பு என்னை அழைத்திருக்கிறீர்கள். எனக்கு நடனம் கற்றுத் தந்துள்ளீர்கள்...''

அவர் இவ்வாறு கூறி முடித்தவுடன் நான் திடுக்கிட்டேன். புரிந்து கொண்டுவிட்டேன். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம் என் எதிரே நர்த்தனமாடின.''



அரசி நிமிர்ந்து உட்கார்ந்தாள். ''உன் மீது ஆசைப் பட்டாரே அந்தக் கருணாகரன்தானே மயில் விழியின் தந்தை'' என்று ஆவலுடன் கேட்டாள்.

மரகதவல்லி குனிந்த தலையுடன், ''ஆமாம் தேவி அவரேதான் என்னிடம் சபதமிட்டுச் சென்றவர். என்னி டம் நடனம்பயில அவரால் இயலவில்லை. பல ஆண்டுகள் கழித்துத் தன் மகளை என்னிடம் நடனம் பயிலுமாறு செய்திருக்கிறார்'' என்கிறாள்.

''மயில்விழியை வேண்டுமென்றே கோபுர வாசலில் கருணாகரன் விட்டுவிட்டுச் சென்றாரா? மயில்விழிக்குத் தெரியுமா?'' அரசி கேட்டாள்.

''இல்லை? இல்லை. அவளுக்குத் தெரியாது. என்னிடம் நேரில் அழைத்துவந்து அறிமுகப்படுத்தவே அவர் விரும்பி னாராம்.''

''ஏன் என்ன நேர்ந்தது. தன் மகளை ஏன் அவ்வாறு விட்டுவிட்டுச் சென்றுவிட்டாராம்?''

''நான் கேட்கவில்லை தேவி. பழைய சம்பவங்களை நான் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை. கோயில் அருகே நின்று எவ்வளவு நேரம் பேசுவது. நடந்ததை மறந்துவிட்டு வீட்டிற்கு வாருங்கள் என்றழைத்தேன். அவர் மிகத் தளர்ந்து விட்டிருந்தார். தன்னைப் பற்றி ஏதும் அவர் கூற விரும்பவில்லை. மயில்விழியைப் பெற்ற மகளைப் போல் நான் பார்த்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்தார். பலமுறை தெரிவித்தார். தன்னிடமிருந்த மூட்டையிலிருந்து சில பொற்காசுகளை எடுத்து என்னிடம் கொடுத்தார். ''என் மகளுக்கு நடனம் கற்றுத் தந்ததற்காக, இந்த எளியவனுடைய காணிக்கை என்று சொன்னார். இன்னும் என்னென்னவோ சொன்னார். பல தடவைகள் வார்த்தைக்கு வார்த்தை நன்றி தெரிவித்

தார். தன் மகளுக்கு நடனக் கலையில் ஒவ்வொரு நுணுக்கத்தையும் கற்றுத் தருமாறு மிக வேண்டிக் கொண்டார்.

"நான் உணர்ச்சி வசப்பட்டேன் நெகிழ்ந்து போனேன். உங்களுடைய பெண் என்று அறிந்து கொள்ளாமலேயே மயில்விழிக்கு நான் அறிந்த நடன சாத்திரம் முழுவதையும் கற்று தந்து வருகிறேன். என் பெண் போல் நினைத்து மேலும் செய்வேன்" என்றேன்.

"நாம் அப்பொழுதே மணந்திருந்தால் மயில்விழி உன் வயிற்றில் பிறந்திருப்பாள். அவள் மற்றொரு நடனமணியாக உருவமாகும் அந்தஸ்தைப் பெற்றிருப்பாள்... என்ன இருந்தாலும் உனக்கு வேண்டாதவனின் மகள்தானே அவள். மரகதவல்லி பழைய சம்பவங்களை மறந்து மயில்விழிக்கு ஒன்றுவிடாமல் எல்லா கலை நுணுக்கங்களையும் கற்றுத் தந்துவிடு" என்றார் கருணாகரன்.

அவருடைய பேச்சு ரசக் குறைவாக இருந்தது. திருமணம்—வாழ்க்கை—காதல் இவை பற்றிய நினைவாக இல்லாமல் இறைவன் தான் ஒன்றினை மட்டும் நினைத்து நடனாஞ்சலி செய்துவரும் என்னிடம் அவர்பேசிய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. அவருடைய எண்ணத்தை மாற்ற விரும்பினேன். "உங்கள் மகளுக்கு நானறிந்தவற்றை எல்லாம் கற்றுத் தருவேன்; எனக்குப் பிறகு மயில்விழிதான் கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் முதன்மை நடனமணி; நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்" என்றேன்.

"இல்லை; இல்லை நான் பார்க்கவே மாட்டேன். இன்று விடை பெற்றுக் கொண்டு வடக்கே செல்லப் போகிறேன். பிறகு நான் வரப்போவது எப்போதோ தெரியாது. ஒருவேளை வராமலும் போகலாம். என் மகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார். அவர் குரலில் துயரம் நிறைந்திருந்தது. தழுதழுத்த குரலில் அவர் பேசினார்.



"கருணாகரா! உனக்கு என்ன நேர்ந்து விட்டது? பெற்ற மகளை விட்டுப் பிரியும் அளவுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட துயரம்தான் என்ன?" என்று நான் கேட்டேன்.

கருணாகரன் சிரிப்பில் விரக்தி இருந்தது. "மரகதம் நீ இப்படிக் கேட்பது சரியா? எனக்கு என்ன நேர்ந்தது என்று உனக்குத் தெரியாதா? பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் உனக்கு மறந்திருக்கலாம். உன் மனத்தில், வாழ்க்கையில் எந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாமலிருக்கலாம். ஆனால் என் இதயத்தில் ஆழமான முதல் கீறல் உன்னிடமிருந்துதான் கிடைத்தது' என்று அவர் சொல்லும்போது நான் குறுக்கிட்டுச் சற்றுக் கோபத்துடன் "என்ன சொல்கிறீர்கள், கருணாகரன்? ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டு, இதயத்தில் நீங்களே உங்கள் செய்கையால் கீறல்ஏற்படுத்தி, மற்றவர் மேல் பழியைப் போடுதல் என்ன நியாயம்? நீங்களே நினைத்துப் பாருங்கள்! நீங்கள் என் கலையைத்தான் விரும்புவதாக எண்ணினேன். ஆனால் நீங்கள் என் உடலை விரும்பினீர்கள். காதல் என்ற புனிதச் சொல்லை நான் இறைவன் காலடியில் அர்ப்பணித்திருக்கும்போது உங்களை நான் எப்படி விரும்ப முடியும்? அன்று நீங்கள் என் வீட்டில் ஒருவருமில்லாத வேளையில் நடந்து கொண்ட விதம் முறையானதுதானா? ஓர் பெண்ணிடம் ஆண் நெருங்கியிருக்கும்போது ஓர் ஆண் செய்யக்கூடிய செயலா அது? இங்கே உங்கள் மகள் இருக்கிறாள். என் வயிற்றில் பெறாத மகளாக நான் கருதுகிறேன். அவள் எதிரே நடந்த கதையைச் சொல்லுவதும் ஒரு விதத்தில் நல்லதுதான். உங்கள் இதயத்தில் ஏற்பட்ட ரணத்திற்கு என்னைப் பொறுப்பாளியாக்காதீர். அது போகட்டும். பிறகு நல்ல பெண்ணாக மணந்து, வாழ்க்கையை இன்பமாகவே நீங்கள் கழிப்பதைக் கூட நான் தடுத்து விட்டேனா?"

கருணாகரன் சற்று நேரம் மௌனமாயிருந்தான். பிறகு, "நீ என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை எப்படி விளக்க முடியும். உன்மீது எனக்கு ஏற்பட்ட காதல், உன் மேனியின் மீது ஏற்பட்டதன்று. முதலில் உன் கலை; பிறகு உன் குணம்; பிறகு உன் அழகு—இது மூன்றும் என்னைப் பித்துப் பிடிக்கச் செய்தன. நான் பிறவியிலேயே ஓர் ஓவியன். பார்க்கும் பொருளை எல்லாம் இதயச் சிலையில் சித்திரமாகத் தீட்டிவிடுவேன். அதைப் போல உன் வடிவத்தையும் வரைந்தேன். ஆனால் வரைந்த வடிவம் இதயத்தையே கிழித்துவிட்டது" என்று சொல்லும்போது நான் மீண்டும் குறுக்கிட்டேன். "இதோ பாருங்கள் இரவு சென்று கொண்டிருக்கிறது. உங்களுடனேயே பேசிக் கொண்டிருந்தால் என்னுடைய மற்றப் பணிகள் தடைப்பட்டுவிடும். அதிகாலையில் எழ வேண்டுமானால் அதிக நேரம் கண் விழிக்கக்கூடாது. மயில்விழியோடு நீங்கள் பேச வேண்டியவை இருக்கலாம். கடந்துபோன சம்பவங்களை நினைத்து உணர்ச்சிவசப்படாமல், வருத்தப்படாமல், வேதனைப்படாமல் இனி பிறகு நடந்தவற்றைச் சொல்லுங்கள். இனி நடக்கப் போவதைப் பற்றியும் பேசுவோம்" என்றேன்.

கருணாகரன் சொன்ன கதை மனத்தை மிகவும் வருத்தியது.

## 4

குலோத்துங்க சோழ தேவரின் பட்டத்து அரசி, மரகதம் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு எழுந்து நின்றாள்

மரகதவல்லி இதுவரையில் சொல்லி வந்தவற்றை மிகக் கவனமாகக் கேட்டாள். மூதாட்டியும் மரகதவல்லியும் மாறி மாறிக் கதைப் போல் நடந்தவற்றை எல்லாம் சொல்லி வந்ததைக் கேட்ட அரசிக்கு மரகதவல்லியின் இன்றைய நிலை புரிந்தது.



மரகதவல்லியிடம் காதல் தோல்வியுற்று, மனம் உடைந்து சென்ற கருணாகரன் கங்கைகொண்ட சோழபுரத்தை விட்டே சென்றுவிட்டான். பழையாறையில் சில நாட்களும் சிதம்பரத்தில் சில நாட்களும் தங்கியவன் காஞ்சி நகரில் தன் கலையைப் புலப்படுத்திப் பிழைக்க முடியுமா என்று முயன்றபோது நீலவேணி அவனுக்கு அறிமுகமானாள். அவள் ஓதுவார் ஒருவரின் மகள். போதிய வருமானமில்லாத குடும்பத்தில் பிறந்த அவள் வறுமையையும் மீறி அழகாக இருந்தாள்.

ஜீன காஞ்சியிலுள்ள அருகர்பிரான் ஆலயத்தில் சித்திரங்களைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான் கருணாகரன். ஒருதலைக் காதலில் ஏற்பட்ட தோல்விக்கு நீலவேணியின் சந்திப்பு அவனுக்கு நல்லதொரு மருந்தாக அமைந்தது.

அவர்களுடைய இன்ப வாழ்க்கைக்கு அறிகுறியாக ஒரு பெண் பிறந்தாள். அவள்தான் மயில்விழி. மயில்விழியின் அழகிய முகத்தைப் பார்த்தவாறு தன் துயரத்தை மறக்க முயன்றான் கருணாகரன்.

காதல் தோல்வியால் ஏற்பட்ட துயரம் மெல்ல மெல்ல மறையும்போது கருணாகரனுக்குப் பெரிய அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. நீலவேணி கடும் நோய் வாய்ப்பட்டாள். எந்த மருந்தும் அவள் நோயைத் தீர்க்கவில்லை. எழெட்டு வயது நிறைந்த மயில்விழியையும் கருணாகரனையும் தவிக்கவிட்டு நீலவேணி இறந்தாள்.

கருணாகரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சித்தம் கலங்கியது போன்ற நிலையில் சில நாட்கள் தடுமாறினான். ஏற்றுக் கொண்ட ஓவியப் பணியைத் தொடர்ந்து செய்ய அவனால் முடியவில்லை.

வறுமை அவனையும் அவன் மகள் மயில்விழியையும் சேர்த்து வாட்டியது. கங்கை கொண்ட சோழபுரம் சென்றால் ஏதாவது வழி பிறக்கும் என எண்ணினான். அவனுக்கு மரகதத்தின் நினைவு வந்தது.

நடந்தே கங்கைகொண்ட சோழபுரம் வந்து சேர்ந்தான். வழி நடைப் பயணத்தின்போது மயில்விழிக்குப் பல கதைகளைச் சொல்லி வருவான். மரகதத்தைப் பற்றியும் அவளுடைய நாட்டியத் திறமையைப் பற்றியும் சொல்லி வந்தான்.

மயில்விழிக்கு நடனம் கற்றுக் கொள்ள ஆவல் பிறந்தது. தன் விருப்பத்தைத் தன் தந்தையிடம் தெரிவித்தாள். மரகதவல்லியிடம் அழைத்துச் சென்றால் அவள் பழைய சம்பவத்தை மனத்தில் கொண்டு மயில்விழியை ஏற்க மறுத்து விடுவாள் என்று எண்ணி தன் மகளை அனாதை போல் கோயிலருகே விட்டு விட்டுச் செல்ல எண்ணினான். எப்படியும் மரகதம் அவளை ஏற்பாள் என்று எண்ணினான். மகளிடம் விவரம் முழுமையும் கூறவில்லை.

''மரகதவல்லியிடம் எப்படியாவது உன்னை ஒப்படைத்து விடுகிறேன். அவளிடம் உண்மையைக் கூறாதே. 'கோபுர வாயிற்படியிலேயே இருக்குமாறு என் தந்தை சொல்லிச் சென்றுள்ளார்; அவர் திரும்பி வரவில்லை' என்று சொல்லி அழுது கொண்டிரு! மரகதவல்லி இளகிய மனம் படைத்தவள். உன்னை அழைத்துச் சென்று காப்பாற்றுவாள். பிறகு இரண்டொரு நாளில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்'' என்று கூறிச் சென்றான்

அவன் சொன்னபடியே எல்லாம் நடந்தது. ஆனால் கருணாகரன் திரும்பி வரவில்லை. நிஜமாகவே தன் தந்தை திரும்பி வராததால் மிகவும் அதிர்ச்சியுற்ற மயில்விழி சில நாட்களில் தன்னைத் தேற்றிக் கொண்டாள். இந்தச் சம்பவம் நடப்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது கருணாகரன் மயில்விழியைச் சந்தித்துப் பேசி



விட்டு விடை பெற்றுச் சென்றான். பிறகு திரும்பி வரவில்லை.

அவளுடைய தந்தை திரும்பி வராததைப் பற்றி மரகதம் பலவாறாக மயில்விழியைக் கேட்டுப் பார்த்தும் பலனில்லை. கருணாகரன் திரும்பி வரவில்லை.

மயில்விழி அதற்காக வருத்தப்படவில்லை. முன் எப்போதையும் விட கலையில் அதிக ஆர்வம் செலுத்தினாள். புதிய உற்சாகம் அவளிடம் ததும்பி நிற்பதை உணர்ந்தாள் மரகதம். அதன் காரணத்தை அறியவில்லை. மயில்விழிக்கும் ஓர் இளைஞனுக்கும் காதல் அரும்பி இருக்கும் செய்தியை மற்றவர்கள் கூறக் கேட்டபோது முதலில் மரகதம் அந்தச் செய்தியை நம்பவில்லை.

ஒரு நாள் அவளே கண்டுணர்ந்து, அதைப்பற்றி மயில்விழியிடம் கேட்டு அவளைக் கண்டித்தாள்.

''மயில்விழி, புதிய புதிய செய்தியைக் கேள்விப்படுகிறேன் உண்மைதானா?'' என்று மரகதம் மயில்விழியை ஒருநாள் கேட்டுவிட்டாள்.

திடுக்கிடுபவள் போல் மயில்விழி நடித்து, ஒன்றும் அறியாதவள் போல், ''என்ன செய்தி அம்மா?'' என்று கேட்டாள்.

''தினந்தோறும் நீ கோயிலிலிருந்து வரும்போது ஓர் இளைஞனிடம் பேசிக் கொண்டு வருகிறாயாம்.''

''இளைஞனிடமா? பொய் அம்மா பொய். நான் ஒருவரையும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.''

''பொய்யாக இருக்க வேண்டும் என்றே இறைவனைப் பிரார்த்திக்கிறேன். ஆனால் நாள்தோறும் ஏன் உன்னைப் பற்றி மற்றவர்கள் அவதூறு, பொய் சொல்லப் போகிறார்கள்?'?

''என் மீது பலருக்குப் பொறாமை, அம்மா, அதனால் இல்லாததும் பொல்லாததைச் சொல்லியிருக்கிறார்கள்.''

''அவர்களுக்கு அதனால் என்ன லாபம்?''

''லாபமென்ன, என் மீது தங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தத்தானம்மா''

''ஓர் இளைஞனுடன் நீ சிரித்துப் பேசிக்கொண்டு இருப்பதை ஒருவர் சொல்லவில்லை· பலர் சொல்கிறார்கள் அவர்கள் எல்லோருக்கும் பொறாமையா?''

மரகதம் அவளைக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் துளைத்தும் மயில்விழி அந்தக் குற்றச்சாட்டை ஏற்கவில்லை. மரகதம் வெகுண்டெழுந்தாள். ''பொய் சொல்லாதே மயில்விழி'' என்று கூவினாள்·

''உன் சொந்த விஷயம் என்று நீ சமாதானம் சொல்லலாம். என்னைப் பாதிக்கும் நடவடிக்கையில் நீ இறங்கி இருக்கிறாய்'' என்று தன் நாபிக் கமலத்தின் அடித்தளத்திலிருந்து குரலை எழுப்பிக் கத்தினாள் மரகதம்.

மரகதத்தின் ஆக்ரோஷத்தைப் பார்த்து மயில்விழி நடு நடுங்கினாள். காதலிப்பது தவறா? அவளுக்குப் புரியவில்லை. உண்மையைச் சொல்லி விடுவோமா என்று ஒரு கணம் எண்ணினாள்.

''தங்களுக்கு கெட்ட பெயர் ஏற்படக் கூடிய ஏதும் நான் செய்யவில்லை அம்மா...''—அவள் குரல் தழுதழுத்தது·

''மயில்விழி உன் சிந்தனையைச் சிதறவிடாதே. மனத்தில் சலனம் ஏற்படும்படியான நிலையை உண்டாக்கிக் கொள்ளாதே இறைவனுக்குக் கைங்கரியம் செய்வதில்தான் நமது மனம், வாக்கு காயத்தை ஈடுபடுத்த வேண்டும். உன் அழகு உன் பருவச் செழுமை எல்லாம் இறைவனுக்கே நீ ஆடும் நடனக் கலை சிவபெருமானுக்குத்தான் காணிக்கை என்பது நினைவிருக்கட்டும். அதற்கு மாறாக மற்றவரிடம் ஒப்படைத்து விட்டாய்



இல்லையா?'' மரகதம் கேட்டாள். மயில்விழி உடல் மெல்ல நடுங்கியது. இதற்குமேல் மறைத்துப் பேசத் துணிவில்லை.

''அம்மா'' என்று விம்மலுடன் பேசினாள்.

''மயில்விழி, சொல்லு, உண்மையைச் சொல்லு... அவனுடன் குதூகலமாகப் பேசுகிறாயாமே யார் அவன்?'' மரகதம் அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

''சிரித்துப் பேசுவது தவறா?'' விம்மலுடன் கேட்டாள் மயில்விழி.

''யாரிடம் நீ பேசுகிறாய் என்பதைப் பொறுத்திருக்கிறது. நீ ஓர் வாலைக்குமரி. கலைத் திறமையுடையவள், காண்பவர் நெஞ்சத்தைக் கவர்ந்திழுக்கும் அழகை இறைவன் உனக்குக் கொடுத்திருக்கிறான். கலையையும் அழகையும் அளித்த இறைவனுக்கு அவற்றை அர்ப்பணிக்க வேண்டும். நம்முடைய மனத்தைச் சிதறவிடக்கூடாது. ஓர் பெண் சிரிக்கும்போது அவள் இழப்பது பல...'' மரகதம் பேசும்போது மயில்விழிக்கு எரிச்சலாகஇருந்தது. ஓரிரண்டு வார்த்தைகள் கூறி அவள் பேச்சை நிறுத்த வேண்டும் போல் தோன்றியது.

''அம்மா, சிவபெருமான்தானே அழகைக் கொடுத்தார்; கலையைக் கொடுத்தார். அவற்றுடன் மனத்தையும் கொடுத்து விட்டாரே. நான் வெறும் மரமல்ல. பூத்துக் குலுங்கும் மலர்க்கொடி. மெல்லப் படருகிறேன் அது தவறா?'' மயில்விழி முடிப்பதற்குள் மரகதம் பேய் ஆட்டம் ஆடிவிட்டாள்.

''ஆம்; தவறுதான். உன் வயதின் போதுதான் உன் தந்தை என் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்த முனைந்தார். நான் உறுதியுடன் இருந்ததால் இன்று நிமிர்ந்து நிற்கிறேன். நான் என்னை இழந்து அவரைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் அரசு அளித்திருக்கும் பதவியை இழந்திருப்பேன்...'' என்று கூறும்போது மயில்விழி

குறுக்கிட்டு, "நடனமாதர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா?" என்று கேட்டான்.

"ஆமாம்...கூடாது" இறைவன் பணியில் ஈடுபடுத்திக் கொண்ட நாம் இறைவனடிமையாக இருக்கவேண்டும். உனக்கும் எனக்கும் எல்லாருக்கும் அது சட்டம்." அழுத்தமாகக் கூறினாள் மரகதம்.

மயில்விழி மௌனமானாள். அவளிடமிருந்து அச்சம் பறந்தோடி விட்டது. தந்தை கூறிச் சென்றது நினைவில் வந்தது. அவள் முடிவான முடிவுக்கு வந்துவிட்டாள்.

மரகதத்தை நிமிர்ந்துப் பார்த்தாள். அந்தப் பார்வையில், நான் கட்டுப்பாடற்ற பறவை என்ற பொருள் தெரிந்தது.

தங்கள் கூண்டிற்குள் எவ்வளவு நாள் அடைப் பட்டிருப்பது என்ற கேள்வி பிறந்தது. என்னை இறைவன் பெண்ணாகப் படைத்து அதற்கான ஆசாபாசங்களையும் கொடுத்து விட்டானே! அவன் கொடுத்ததை யார் தடை செய்வது என்று கேட்பது போலிருந்தது.

"என்ன, வார்த்தை சொல்வது என்று யோசிக்கிறாயா? உனக்கும் அந்த இளைஞனுக்கும் எவ்வளவு நாள் தொடர்பு?"—மரகதம் சீறினாள்.

"ஜன்ம ஜன்மமான தொடர்பு." —மயில்விழியே ஆச்சரியங் கொண்டாள், நாமா இப்படிப் பேசினோம் என்று!

மரகதம் சீறிப் பாய்ந்தாள், "என்ன?" என்ற ஆக்ரோஷக் குரலுடன்.

"நானும் அவரும் முதலில் கங்கை கொண்ட சோழீசர் சந்நிதியில்தான் சந்தித்தோம். அவர் விழிகள் என் இதயத்திற்குள் புகுந்தன. என் விழிகளை அவர் பறித்துப் பதித்துக் கொண்டார். பிறகு பல இடங்களில்





சந்தித்தோம். மௌனமாகப் பேசினோம். பிறகு வார்த்தைகளால் அறிந்து கொண்டோம்.

"ஓ"—

"என்னை மறக்க அவரால் முடியவில்லை. அவரை மறக்கவும் என்னால் உறுதியாக முடியாது..."

"அடிப் பாவி"

"ஒருவரை யொருவர் நேசிப்பதில் இறைவன் பணிக்கு இடையூறு ஏற்படாது. அவரும் ஒரு கூத்தர் தான்..."

"பெயர்..."

"பெயர்... பெயர்" என்று சற்று திருத்திய அவள், "பிறகுதானே தெரிகிறது" என்றாள்.

அவ்வளவுதான் மயில்விழி பேசினாள். பிறகு மரகதத்தின் தாக்குதலுக்கு மறுமொழி கூறவோ எதிர்ப்புத் தெரிவிக்கவோ முயலவில்லை.

சோழப் பேரரசி பெருமூச்சுவிட்டாள். "மரகதம், போதும் இறகு முளைத்த பறவையை நீ பொற்கூண்டிற்குள் எவ்வளவு நாள் வைத்திருக்க முடியும். பறந்து விட்டது, அவ்வளவுதானே" என்று கேட்டபோது மரகதம் விம்மி விம்மி அழுதாள்.

அரசியார் தேற்றினாள். ஆறுதல் மொழியைக் கூறக் கூற அவள் இதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் பொங்கிப் பிரவாகித்தது.

"மயில்விழி இல்லாத குறை இவ்வளவு நாட்களாகத் தெரியவில்லை. இன்றுதான் உணர்கிறேன். என் ஐயன் ஈசனுக்கு சந்தியா வேளையில் நடனாஞ்சலி செய்ய முடிய வில்லை. என்னிடத்தை அவள் நிரப்புவாள் என்று எண்ணியிருந்தேன். நான் கற்ற கலையை எல்லாம்

அவனுக்குப் பயிற்றுவித்தேன். என் அகந்தைக்கு ஓர் அடி கிடைத்துவிட்டது. நான் இனி என்ன செய்யப் போகிறேன். என் கணுக்காலில் ஏற்பட்டுள்ள முறிவு என் இதய முறிவைப்போல் பேரிடியை அளித்துவிட்டது. இறைவனே காற்றாக எங்கும் கரைந்திருக்கும் கங்காபுரீசா! இப்படி எனக்கொரு சோதனையா? எனக்கு மட்டும் சோதனை யில்லை, இறைவா உனக்கும் தான். நடனாஞ்சலி உனக்கு யார் அளிக்கப் போகிறார்கள். விழியற்றவர்கள் வீணை மீட்டலாம். செவியற்றவர்கள் பாடலாம். ஊமையர்கள் நடனமாடலாம். காலற்றவர்கள் என்ன செய்ய முடியும்? குலோத்துங்க சக்கரவர்த்திக்கு நான் என்ன சமாதானம் சொல்லுவேன்...'' பிலாக்கணம் வைத்து அழுதாள்.

மரகதத்தின் வேதனைக் குரலை மேலும் கேட்டுக் கொண்டு அரசி அங்கே நிற்கவில்லை.

குலோத்துங்க சோழ சக்கரவர்த்திகளிடம் நான்கு நாழிகை நேரம், தான் கேட்ட நிந்தலற்றைக் கூறியபோது குலோத்துங்கன் பரிதாப உணர்ச்சி கொள்ளவில்லை.

எதிரியைக் கண்டதுபோல் வெகுண்டார். அரசியை நோக்கி, ''தேவி இது என் மானப் பிரச்னை. சோழ நாட்டை அவமானப்படுத்த வேண்டும் என்று யாரோ செய்திருக்கும் சதி. என் முப்பாட்டனார் காலந்தொட்டு இடைவிடாது நடைபெற்று வந்த சந்தியா நிருத்யத்தை, என் இறைவன் இன்று கண்டு மகிழவில்லை. யாரோ செய்திருக்கும் சதி. யாரங்கே?'' என்று அமைச்சரை அழைத்து, கட்டளைகளை இட்டார்.

ஒன்று, உடனே சோழ நாட்டில் நடனக் கலைஞர்கள் இருக்குமிடங்களை ஆட்களை அனுப்பித் தக்கவர்களைத் தலைநகரத்திற்கு விரைந்து அழைத்துவர வழி செய்ய வேண்டும். இரண்டாவது, மயில்விழி தன் காதலனுடன்



எங்கே தங்கியிருக்கிறாள் என்பதை அறிந்து கையுடன் அவர்களைப் பிடித்திழுத்துவர வேண்டும்.

மறுநாள் இரவு நெடுநேரம் கழித்து ஒற்றர் படை தலைவர், மிகப் பணிவுடன் அரசரின் சமூகத்தில் முக வாட்டத்துடன் கை கட்டிக் குனிந்து நின்று, ''மயில்விழி யையும் அவள் காதலனையும் கங்கை கொண்ட சோழ புரத்தைச் சுற்றிப் பல காதங்களில் தேடியும் கிடைக்க வில்லை'' என்ற செய்தியைச் சொன்னார்.

குலோத்துங்க சக்கரவர்த்தி மிகப் பலமாகச் சிரித்து, ''முட்டாள்களே! சோழநாட்டில் தங்கியிருக்குமளவிற்குப் புத்திக் கூர்மையற்றவர்களா? முன்பாகவே வகுத்த திட்டப்படி மயில்விழியும் அவள் காதலனும் வஞ்சி நகருக்குப் பறந்துவிட்டார்களா? சேரன் வகுத்த திட்டம் முதல் வெற்றி சேரனுக்குத்தான்'' என்று கூறிவிட்டு அரசியை நோக்கி, ''தேவி! மரகதவல்லி தோற்று விட்டாள். அவளால் அவமானப் படுத்தப்பட்ட கருணாகரன் தன் மகள் மூலம் தன் வஞ்சினத்தைத் தீர்த்துக் கொண்டான். கங்கை கொண்ட சோழீசர் எதிரே தக்கபடி ஆட, நல் மகளிர் இனி எங்கே கிடைக்கப் போகிறார்கள்?'' என்று கூறும்போது அவரது குரலில் வேதனை பிரதிபலித்தது.

## 5

கங்கொண்ட சோழீசர் கோயிலில் சந்தியா நிருத்யம் நின்று போய்ப் பல மாதங்களாகிவிட்டன. அரசன் குலோத்துங்கனும் மதுரை மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டு அதை நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்து மாக இருந்ததால் கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் தடைப்பட்ட நிருத்யத்தைப் பற்றி அவர் நினைக்கவில்லை மதுரைப் படை எடுப்பு முடிந்த பிறகு ஒரு நாள் மரகதம்

மன்னரைச் சந்தித்து வணங்கி நின்றாள். அரசர் தன் இதழ்களில் குறும்புப் புன்னகை மிளிர, ''யார் நாட்டிய அரசி மரகதமா என் எதிரே நிற்பது?'' என்று கேட்டார்.

மிகவும் கூனிக்குறுகி, கையைக் கொண்டு வாயினைப் பொத்தி, விழிகளாலேயே ஆமாம் என்று சொல்ல முயன்றாள்.

அரசர் ஏன் இவ்வாறு கேட்டார்? அவளுக்கே புரிய வில்லை. என்னை மறந்து விட்டாரா? ஈசன் எதிரே காலையிலும் மாலையிலும் நிருத்யாஞ்சலி நடைபெறும் போது அரசர் கோயிலுக்கு வந்து கலந்துகொண்டு பல மாதங்களாகி விட்டன. நாட்டியத்தை மறந்த மன்னர் என்னையும் மறந்துவிட்டார் போலும்.

விழியில் நீர் தளும்ப, ''மன்னர் பிரான் அவர்களே, நான் மரகதம் தான்...என்னை மறந்துவிட்டீர்களா?' என்று குரல் தழுதழுக்கப் பேசினாள்,

பலமாக நகைத்தார் குலோத்துங்க மாமன்னர்.

''பழைய மரகதத்தைக் காணவில்லையே...என்பதான் அவ்வாறு சொன்னேன்'' என்று கூறி மீண்டும் நகைத் தார்.

மரகதத்திற்குப் புரியவில்லை. விழிகள் கேள்விக் குறியாய் நின்றன. உதடுகள் பேச முயன்றுப் பிரிந்து நின்றன, சற்றே குனிந்து நின்றாள், ''புரியவில்லை, மன்னித்து விடுங்கள்'' என்ற பாவம் நிறைந்திருந்தது அவளிடம்.

''உன் அழகு எங்கே? இளமை எங்கே? அந்த மரகதத்தை மீண்டும் பார்க்க முடியுமா?'' என்றார் மாமன்னர்.

''அப்பாடா—இதற்குத்தானா இப்படிப் பேசினார்'? என்று பெருமூச்சு விட்ட மரகதம் முகம் கணத்தில் மாறியது.



''பாதி இளமையைக் கவலைக் கொண்டுவிட்டது'' என்றாள்.

மன்னருக்குப் புரிந்தது 'சந்தியா நிருத்தியம் ஆட வாரிசு இல்லையே என்ற கவலை மரகதத்தை வாட்டு கிறது' என்பதை அறிவார்.

''உனக்கென்ன கவலை மரகதம்? குறையில்லாமல் மாளிகையிலிருந்து உதவி வருகிறதல்லவா?'' என்று கேட்டார்.

மன்னர் ஓய்வாக இருந்து இவ்வாறு பேசிப் பல ஆண்டு களாகி விட்டன.

ஹும் என்று பெருமூச்சுவிட்ட மரகதம், ''இந்த உடலை வளர்க்க ஒன்றும் குறையில்லாமல் நடக்கிறது. ஆனால் இதயத்திற்கு இதமளிக்கும் செயல் ஓய்ந்துப் பல ஆண்டுகளாகி விட்டன'' என்றாள்.

''உனக்குள்ள குறையைச் சொல்லலாமே மரகதம்'' என்றார் மன்னர், அவளது உள்ளத்துள் புகுந்து ஆராய்வது போல் பார்த்து கொண்டே.

மரகதம் விம்மினாள். ''மாமன்னரின் அமைச்சர் பிரதானிகளிடம் நான் என் விண்ணப்பத்தை எப்போதோ சமர்ப்பித்து விட்டேன், அவர்கள் கவனிக்கவில்லை...'' என்று தொடங்கிய மரகதத்தைக் கையசைத்து, ''நாட்டிய பெண்களைப் பந்தணை நல்லூரிலிருந்து அழைத்து வரும் தைப் பற்றித்தானே'' என்றார்.

தலையசைத்தாள் மரகதம்.

''உன்னைப் போலவும், உன்னிடம் நாட்டியம் கற்றுக் கொண்டாளே அந்த பெண் உன்னைவிட்டு ஓடிப் போனாளே அவளைப் போலவும் திறமை மிகுந்தவர் இருந்தால் அழைத்து வரலாம் என்று சொல்லிவிட்டேன். தன் தாயாரைப் போன்ற மனைவி வேண்டும் என்று

விரும்பினாரோ விநாயகரைப் போல... அவர்கள் தேடித் தேட அனுக்கு விட்டார்கள்.''

அரசர் இவ்வாறு கூறியவுடன் திகைத்தாள் மரகதம்.

அரசர் மேலும் தொடர்ந்தார்: ''மரகதம் அமுதம் கிடைத்தால் உண்ண வேண்டும்; இல்லாவிட்டால் வெறும் வெல்லப் பாகை ஏற்கலாமா?''

நிமிர்ந்து பார்த்தாள் மரகதம். கண்களிலிருந்து முத்துச்சரம் போல் நீர்த்துளிகள் உதிர்ந்தன.

''அரசர்க்கரசரே! நான் மாபாவம் செய்துவிட்டேன். என் இளமை உதிர்ந்துவிட்டது பற்றி நான் கவலைப்பட வில்லை. இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இந்த உடல் மாற்றம் குறித்து வேதனைப்படவில்லை. ஆனால் சோழீசருக்கு சந்நியா நிர்த்தயத்தை எவ்வொரு நாளும காணிக்கை ஆக்காமல் நான் வாழ்ந்துகொண்டிருக் கிறேனே என்ற இதய வேதனை குறித்தே கவலைப்படு கிறேன்'' என்று கூறிவரும் போது வார்த்தைகள் தடைப் பட்டன.

''மரகதம், இதற்காக வருத்தப்படாதே? சோழீசர் திருவுள்ளம் அப்படித்தான் என்றால் அதன்படி நடக் கட்டும் சோழீசர் திருவுள்ளம் வேறு விதமாக இருக் கிறது. மதுரை மாநகரத்திலே வீராபிடேகம் செய்து கொண்டேன். சொக்கநாதர் திரு முன்பு நாட்டியாஞ்சலி செய்யத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். அடுத்தது என் பார்வை வஞ்சியின் மீது...'' மன்னர் இவ்வாறு கூறியவுடன், மரகதம் கலங்கிய கண்களைத் துடைத்து மலர விழித்து, நிமிர்ந்து நின்று குரலில் கம்பீரத்தை வரவழைத்துக்கொண்டு, ''மாமன்னர் அவர்களே! தங்கள் சமூகத்தில் விண்ணப்பிக்க வந்ததைத் தெரிவிக்காமல் வேறு ஏதேதோ பேசி வருகிறேன். நான் வளர்த்த அந்த மயிலை என்னிடம் இருந்துப் பிரித்து அழைத்துச் செல்லத் திட்டம் வகுத்தவர் சேர மன்னர்.



18584
346935

வஞ்சி நகரில் மயில்விழி பசுபதீச்வரர் [illegible] திரு முன்பு நாட்டியாஞ்சலி செய்கிறாள். [illegible] என் மனம் பதறுகிறது. தாங்கள் உடனே [illegible] எடுக்கவேண்டும்.''

அரிய பெரிய செய்தியைச் சொல்லிவிட்ட பெரு மிதத்தில் நின்றிருந்த மரகதத்தைப் பார்த்து மன்னர் ஓர் அலட்சியச் சிரிப்புடன், ''இந்தச் செய்தியை நான் என்றோ அறிவேன். சோழ நாட்டின் எல்லைக்கருகேயே கருவூரில் தலைநகரை அமைத்துக் கொண்டு வஞ்சி என்று பழம் பெருமையுடைய பெயரைக் கருவூருக்குச்சூட்டியுள்ள கொங்குச் சேரன் வேங்கையுடன் விளையாட முற்படு கிறான். கங்கைகொண்ட சோழர்திருமுன்பு நாட்டியமாட முடியாமல் செய்வது அவன் திட்டமாம்''—பயங்கரமாக சிரித்து, ''பதர்-நமது வீரர்களின் மூச்சுக் காற்றிலேயே பறந்துவிடக் கூடியவன். ஊரும் நமது கவனம் மதுரையின் பக்கம் சென்றதனால் இதுவரை பிழைத்திருக்கிறான். சோழ நாட்டை அவமானப் படுத்திவிட்டதாக மமதையால் குதிக்கும் கொங்குச் சேரன் கொட்டம் ஒடுக்குவேன். அதற்கு முன்பு மயில்விழியை இங்கே கவர்ந்து வந்துவிட முடியுமா என்று யோசித்துப் பார்க்கிறேன்...''—மன்னர் பிரான் தன் உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை மரகதம் புரிந்து கொண்டாள்.

அரசரைச் சந்தித்துவந்த அன்று மரகதம் நிம்மதியாக உறங்கினாள். மயில்விழியை இழுத்து வந்து அரசர் முன் நிறுத்தப்பட்டது போன்ற கனவு அவளுக்கு. பத்தும் கசை அடிகள் தண்டனை கொடுக்குமாறு அரசர் உத்தரவு. மயில்விழிக்கு அளிக்கப்பட்ட தண்டனை கேட்டு மரகதம் பதறுகிறாள். ''மன்னர் அவர்களே! வேண்டாம், வேண்டாம். மனம் திருந்தி அவள் வந்து நிற்கிறாள். செய்த பிழையை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கி றாள். ராஜா காலத்திற்குச் சோழீசருக்குத் தொண்டு

செய்வதாக உறுதி கூறுகிறாள். தான் வளர்த்தேன் என்பதற்காகவாவது கடுந்தண்டனையை அளிக்காது அவளைச் சோழ நாட்டு மகளாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்...'' என்று கதறுகிறாள்.

''மரகதம் நீ மன்னரின் உத்தரவில் தலையிடாதே. மயில்விழி செய்தது மாபெரும் அரச துரோகம்...'' என்று அமைச்சர் கூறுகிறார்.

மரகதம் மன்னரிடமே சென்று, ''மன்னாதி மன்னர் அவர்களே? தங்களை அடைக்கலம் என்று வந்தவளுக்கு அருள் செய்யுங்கள்'' என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறாள்.

''மயில்விழி தானாகவே வந்து அடைக்கலம் புகவில்லை. நமது வீரர்கள் கொண்டு வந்தனர். என்கிறார் அரசர்.

''அரசர் பிரானே! தங்களுக்கு தெரியாதது ஒன்று இல்லை. வஞ்சி நகரைவிட்டு வர அவள் பலமுறைமுயன்று இருக்கிறாள். இயலவில்லை. கட்டுக் காவல் அதிகம். அது அவள் குற்றமில்லை. சோழீசருக்கு நாட்டிய பூஜை நடத்தச் சிறந்த கலைஞர் வந்திருக்கிறாள் என்பதாம் ஏற்பது நமது கடமை'' என்று மரகதம் கூறுகிறாள்.

குலோத்துங்க மாமன்னர் மீண்டும் நகைக்கிறார்.

''மரகதம் உன் நெஞ்சில் கலைத் தாகம் நிரம்பியிருக்கிறது. கலைத் தாகம் எனக்கும் உண்டு. அதைவிட ஒழுங்கு, கட்டுப்பாடு ராஜதர்மம் என்பவற்றைக் கட்டிக் காத்து நிறைவேற்றும் காவலன் நான். நாட்டுக்குத் துரோகம் செய்பவர்களை மன்னித்து விட்டால் வருங்காலத்தில் இதைப் போன்ற மன்னிப்புக் கிடைத்துவிடும் என்று பலர் துரோகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கி விடுவார்கள். நாட்டுத் துரோகத்திற்குத் தண்டனை உண்டு என்ற அச்சம் ஏற்படவேண்டும் நீ தலையிடாதே'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டார்.



''மன்னர் அவர்களே மலர்க்கொடி போன்ற மென்மையான மேனியுடைய மயில்விழியின் உடல் ஒரு கசையடியைக் கூடத் தாங்காதே. பத்து கசையடி பட்டால் அவள் உருவமே மாறிவிடும். இந்த உலகத்தை விட்டே அவள் மறைந்து விடலாம். மயில்விழியின் பணியை மீண்டும் பெறத்தானே அவளைக் கங்கை கொண்ட சோழபுரம் கொண்டு வந்தோம். அவள் மேனி சோழ பூமியில் விழுந்து மண்ணோடு மண்ணாவதால் நமக்கு என்ன பலன்?

நாட்டியக் கலையில் சிறந்த ஒருத்தியைச் சோழ மண்ணில் புதைத்த பெருமைதான் நமக்கு மிஞ்சும். ஒரு வேளை வருங்காலத்தில் புலவர்கள் தங்கள் செயலைக் கண்டித்துப் பாடக் கூடும். அந்தப் பழி வேண்டாம் சோழ நாட்டிற்கு''—மரகதம் மன்னர் காலைப் பிடித்தபடி கதறி அழுதாள்.

''மரகதம். என்னை என்ன செய்யச் சொல்கிறாய்'' மன்னர் குரலில் கண்டிப்புடன் சற்றுக் கனிவும் இருந்தது.

''மயில்விழியை நீங்கள் ஏற்க வேண்டும். அவள் செய்த பிழையை மன்னித்து விட வேண்டும்'' மரகதம் கெஞ்சினாள்.

''தண்டனையை ஏற்ற பிறகுதான்''

''ஐயோ! தண்டனையை அவள் உடல் தாங்காது...''

''அப்படி உடலுக்குத் தண்டனை வேண்டாம். உள்ளத்துக்கு ஒன்று தருகிறேன்.''

''அப்படியென்றால் சரி. எந்தத் தண்டனையையும் அவள் ஏற்பாள்.

''கங்கை கொண்ட சோழீசருக்குத் தன்னைப் பரிபூரணமாய் அர்ப்பணித்திருக்கும் நடன மணிகள் பதியிலாதவராய் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் உண்டு என்பது உனக்குத் தெரியுமல்லவா?''

"தெரியும் அரசே! இறைவனுக்குத் தொண்டாற்றும் பெரும் பணியை ஏற்றுக் கொண்ட நான் உடலிச்சை மீது என்றுமே நான் நாட்டங் கொண்டதில்லை,

"ஆனால் நீ வளர்த்த மயில்விழி திருமணமானவள்."

"ஆமாம் ஈசனிடம் காதலாகிக் கசிந்துருகி வாழ்நாளை அர்ப்பணிப்பதனின்று மாறினாள்; காதல் வயப்பட்டாள். சேர நாட்டில் இந்தக் கட்டுப்பாடில்லை..."

"சோழ நாட்டில் கண்டிப்பாக உண்டு. மயில்விழி தன் கணவனைத் துறந்து வர வேண்டும். எந்தக் காலத்திலும் அவள் தூய்மையாக இருக்க வேண்டும். மறு பிறவி எடுத்தது போன்று நினைக்க வேண்டும். இதற்குச் சம்மதம் என்றால் அவளை நாம் மன்னித்து ஏற்கத் தடை இல்லை."

மன்னரின் முடிவு கேட்டு மரகதம் மகிழ்ச்சி அடைந்தான் என்றாலும் அவனுக்குள் ஓர் அச்சம் ஏற்பட்டது. "நேசித்து மணந்தவரைத் துறக்க மயில்விழி சம்மதிப்பாளா?" என்ற கவலை ஏற்பட்டது.

மயில்விழியிடம் விரைந்துச் சென்றான்.

"மயில்விழி உனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மாற்றுவதாக மன்னர் சம்மதித்து விட்டார். ஆனால் ஒரு நிபந்தனை. உன்னை மயக்கி அழைத்துச் சென்றவரை நீ மறந்து கங்கை கொண்ட சோழபுரத்து வழக்கப்படி ஈசனிடம் மட்டும் காதல் கொண்டு தொண்டாற்ற வேண்டும். அதற்குச் சம்மதம் தெரிவித்தால் இந்தக் கணமே சாட்டையடித் தண்டனை இல்லாமல் உன்னை விடுதலை செய்து கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் உயர் பதவி தருவார்கள்" என்றான்.

மயில்விழி மிகக் கோபமாக மரகதத்தை திரும்பிப் பார்த்தாள்.



"முடியாது; எனக்கு வாழ்வளித்து என் உடலில் சரிபாதியாக இருந்து, வஞ்சி நகரில் எனக்கென்று தனி மதிப்பை ஏற்படுத்திய என் காதல் கணவரை என்னால் மறக்க முடியாது" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

மரகதம் நடுநடுங்கினான். மயில்விழிக்குக் கிடைக்கப் போகும் தண்டனையை எண்ணிப் பார்த்தவுடன் மிகுந்த பயத்துடன் 'ஐயோ' என்று கூவினான்.

# 6

மரகதம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். மயில்விழிக்குக் கசையடித் தண்டனையை அரசர் அளித்திருக்கிறார் என்ற செய்தி கனவில் நடைபெற்ற நிகழ்ச்சியென்பதை அவன் உறுதியாக உணர வெகு நேரம் பிடித்தது.

ஆனால் சோழ மன்னர் எப்படியும் மயில்விழியைக் கருவூரிலிருந்து கவர்ந்து வந்து தண்டனையளித்து விடுவார். சோழ நாட்டிற்கு அழியாத அவமானத்தை மயில்விழி அளித்து விட்டாள் என்று தணியாத சினத்தில் மன்னர் இருக்கிறார் என்ற உண்மையை அவனால் கனவு என்று தள்ளிவிட முடியவில்லை. அவனுக்கு வேதனை அதிகமாகியது. மன்னரிடமிருந்து என்ன செய்தி வருமோ என்று கவலையுடன் எதிர்பார்த்திருந்தான்.

கருவூரின் பலத்தை அறிய குலோத்துங்க சோழர் அனுப்பியிருந்த ஒற்றர்கள் திரும்பி வந்து, மன்னரிடம் முழு விபரத்தையும் தெரிவித்தனர்.

அமைச்சர் குழுவினர் நிறைந்திருந்த மந்திராலோசனை மண்டபத்தில் குலோத்துங்க சோழ மன்னர் ஒற்றர்கள் கூறியவற்றை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்.

''கொங்குச் சேரர்களுக்கு தாங்கள் பழம் புகழ் பெற்ற சேரப் பரம்பரையினர் என்ற நினைப்பு இல்லாவிட்டால் ஒரு காலத்தில் புகழ்கொடி விசித் திகழ்ந்த அந்தப் பெருமை மிகுந்த வஞ்சியின் பெயரையே இந்தக் கருவூருக்கு சூட்டியிருப்பாரா?'' என்று கூறி குலோத்துங்கன் நகைத்தார். அதில் ஏளனம் நிறைந்திருந்தது.

''மலை நாட்டில் வஞ்சிநகர் அருகே ஓடிய ஆறு போன்று இங்கே அமராவதியை ஏதோ மிகப் பெரிய நதி என்று மனப்பால் குடித்து, கருவூரை வஞ்சியாக்கி விட்டான் வீர சோமன்!'' என்று அமைச்சர் ஏளனச் சிரிப்புக்குத் தூபமிட்டார்.

''அமராவதி பொன்னி நதியில்தான் வந்து சேர்கிறது கடலில் அல்ல!'' என்று மற்றவர் கூறும்போது மீண்டும் நகைப்பு! ''வஞ்சி நகர் கோட்டையைப் பற்றி ஒற்றர்கள் கூறுவது பிரமிக்க வைக்கிறது அமைச்சரே! ஒரு நாள் நம்முடன் மோதப் போகிறோம் என்பதை முன்பே எதிர் பார்த்தே கோட்டையை மிகப்பலமாகக் கட்டியிருக்கிறார் போல் தோன்றுகிறது. நுழைய இரகசிய வழி இல்லாமலா போய்விடும்? அதைத் தெரிந்து வந்தீர்களா?'' என்று ஒற்றர்களைப் பார்த்து அரசர் கேட்டார்.

''கோட்டையின் மதில் பலம் அறிந்து வந்திருக்கிறார்கள். வில்லவர்கள் மறைவாக எங்கே அமர்ந்து அம்பை வீசுவார்கள் என்பதைத் தெரிந்து வந்திருக்கிறார்கள். படை வீரர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாக அறிந்து வந்திருக்கிறார்கள்.'' படைத் தலைவன் கூறினார். ''அம்பா?'' குலோத்துங்கன் நகைத்து, ''ஓ! சேரர்களல்லவா? வில்லும் அம்பும் பயன்படுத்துகிறார்கள்'' என்றார்.

''யானைப் படைகளின் பலம் கண்டு வந்திருக்கிறார்கள்''— அமைச்சர் சொன்னார். ''சேரர்கள் ஏராளமாக யானைகளைப் பயன்படுத்துவது ஆச்சரியமல்ல...''



''கொங்குச் சேர மக்கள் மன்னரிடம் மிகுந்த மரியாதையுடனிருக்கிறார்கள். படை வீரர்கள் நம்பிக்கைக்குரியவர்கள்.'' சேனைத் தலைவர் கூறினார்.

இந்தச் செய்தியைக் கேட்டவுடன், ''அதனால் தான் வீர சோமன் நமக்குத் திரை செலுத்துவதை நிறுத்தி விட்டான். படை வீரர்களின் விசுவாசமும் குடிமக்களின் அன்பும் இருந்துவிட்டதால் கொங்குச் சேரருக்குச் சுதந்திரமாக வாழும் தன்மை வந்ததில் வியப்பில்லை'' என்று கூறிய சோழ மன்னர் குலோத்துங்கன், அமைச்சரை நோக்கி, ''இதுவரையில் நிலுவையாக நிற்கும் திரைப் பணத்தைச் செப்புக் காசுகூட விடாது அனுப்புமாறு செய்தி சொல்லி அனுப்புங்கள்'' என்று கட்டளை யிட்டார்.

திரை நிலுவையை உடனே செலுத்துமாறு, கொங்கு சேர மன்னருக்குத் தெரிவிக்க வஞ்சி எனப்படும் கருவூரை நோக்கி இரண்டு வீரர்கள் சென்றார்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுடன் மேலும் இரண்டு சோழ வீரர்கள் சென்றார்கள். அவர்கள் மாறுவேடத்தில் சென்றனர்.

அமராவதி ஆற்றைக் கடந்து வஞ்சிக்கோட்டை வாயிலைச் சோழ வீரர்கள் அடைந்தபோது கோட்டைக் காவலர்கள் புலிக்கொடி பிடித்திருந்த அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

''மன்னரிடமிருந்து உங்கள் மன்னருக்குச் செய்தி கொண்டு வந்திருக்கும் தூதுவர்கள் நாங்கள்'' என்று கம்பீரமாக தூதுவர்கள் சொல்லியும் கோட்டைக் காவல் வீரர்கள் கேட்கவில்லை.

''எங்கள் மன்னரிடம் உத்தரவு பெற்றே உள்ளே அனுமதிக்க முடியும்'' என்று கண்டிப்பாகக் கூறி விட்டனர்.

''தூதுவர்களுக்கும்கூட முன் அனுமதி தேவையா?'' என்று அவர்கள் கேட்டனர்.

''எதிரி நாட்டவர்களுக்கு அப்படித்தான்.''

''எதிர்களா? சோழ நாட்டவர்கள் உங்களை இன்னும் எதிரிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை. கப்பம் செலுத்தும் சிற்றரசர்களை நாங்கள் எதிரிகள் என்று நினைக்க மாட்டோம்.''

''சிற்றரசர்களா?''—கோட்டைக் காவலர்கள் பலமாக நகைத்து, ''வஞ்சியிலிருக்கும் ஒருபெண் பிள்ளைகூட இப்படிச் சொல்லமாட்டார்கள்'' என்று மெல்லிய நகைப்புடன் கூறினர். ''எங்கள் கொங்குச் சேர மாமன்னரைச் சிற்றரசர் என்றுசொல்ல உங்களுக்குஎன்ன துணிவு. இந்த ஒரு வார்த்தைக்காகவே உங்களைச் சிறையில் அடைத்து விடலாம்'' என்று கோட்டைக் காவல்காரர் சீறியதைக் கேட்டுச் சோழ நாட்டுத் தூதுவர்களுக்குச் சினம் எழ, சூழ்நிலை சரியன்று என முடிவு செய்த தூதுவர்கள், ''அண்ணன்மார்களே! நாங்களும் உங்களைப் போல் அரசர் இட்ட கட்டளையைச் செய்பவர்கள்தாம். உங்கள் அரசரைச் சந்தித்து வருமாறு எங்கள் அரசர் சொன்னதை நாங்கள் நிறைவேற்ற வந்திருக்கிறோம் எங்கள் அரசர் சக்கரவர்த்தி; உங்கள் அரசர் சிற்றரசர் என்று நமக்குள் எதற்கு வீண் விவாதம், எங்களை உள்ளே செல்ல அனுமதியுங்கள்'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு மெல்லப் பேசினர்.

''இங்கேயே இருங்கள்; எங்கள் மன்னரிடம் உத்தரவு பெற்று வருகிறேன்'' என்று கூறிக் காவலன் ஒருவன் சென்றான். அந்தச் சமயம் பார்த்து வடநாட்டு யாத்திரிகர் வேடத்தில் வந்திருந்த சோழ நாட்டைச் சேர்ந்த இரண்டு ஒற்றர்களும் நகரத்திற்குள்ளே நுழைந்தனர்.



மயில்விழி தன் வீட்டின் முற்றத்தில் அமர்ந்து, மற்ற மாணவிகளுக்கு நாட்டிய முத்திரைகளை விளக்கிக்கொண்டிருந்தாள்.

யாத்திரிகர்கள் வடிவில் இருந்த சோழ ஒற்றர்கள் மயில்விழிக்கு நண்பர்கள்.

திண்ணையில் களைப்புடன் பரதேசிகள் இருவர் வந்தமர்ந்திருப்பதை அறிந்து மயில்விழி, அவர்களுக்கு ஏதாவது உணவளிக்குமாறு பணிப்பெண்ணிடம் சொல்லிவிட்டுத் தன் காரியத்தைத் தொடர்ந்து செய்யலானாள்.

''தை... தக்க தை...தை...தை'' என்ற சதங்கை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

உணவு கொண்டு வந்த சிறுமியைப் பார்த்துப் பரதேசியருள் ஒருவன் மெல்லிய குரலில், ''மயில்விழியை நாங்கள் பார்த்துப் பேச வேண்டும், சற்று அவர்களை இங்கு வரச் சொல்கிறாயா?'' என்று கேட்டான்.

அந்தச் சிறுமிக்கு வியப்பு ஏற்பட்டது. தங்கள் ஆசிரியையின் பெயரைக் கூறி இதுவரை யாரும் அழைத்தது கிடையாதே; இவர்கள் துணிவுடன் அழைக்கிறார்களே என்ற ஐயத்தில் உள்ளே சென்று, மயில்விழியிடம் விபரம் தெரிவித்தாள். மயில்விழி வெளியே வந்தாள்.

''நான்தான் குமார வேலன். கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் நந்தவனக் காப்பாளன். ஒரு காலத்தில் உனக்குப் பிரியமான பாரிஜாத மலர்களைப் பறித்துக் கூடையில் போட்டுத் தருவேனே நினைவு இருக்கிறதா?'' என்று அவன் மெல்லக் கூறவும் மயில்விழிக்குப் புரிந்துவிட்டது. பழைய நினைவுகள் தோன்றின.

கங்கை கொண்ட சோழீசர் கோயிலுக்குச் சென்று சந்தியா நிருத்யம் செய்துவிட்டுத் திரும்பும் வேளைகளில் குமாரவேலன் குடலை நிறைய மலர்களுடன் நந்தவன வாயிலில் நிற்பான்.

பாரிஜாத மலர்களின் மணம் குப்பென்றுஎங்கும் வீசி இரவின் அமைதியையும் துளைத்து இதயத்திற்குள் பாயும்.

''இரவு இந்த நேரத்திற்குமேல் எதற்காக இவ்வளவு பூக்களைக் கொண்டு வந்திருக்கிறாய் மயில்?'' என்று மரகதம் கேட்பாள்.

பாரிஜாத மலர்களை அடர்த்தியாகத் தொடுத்து இறைவனுக்குச்சூட்டி அழகு பார்த்துவிட்டு ''இதற்காகத் தான் அம்மா'' என்பாள்.

''மலர்கள் இறைவனை அழகுபடுத்தப் பிறந்தவை. பெண்களின் கூந்தலில் வாடிவதங்க அல்ல. நீ செய்தது தான் சரி. சோழீசரின் அருள் உனக்குப் பூரணமாக உண்டு;'' என்று மரகதம் பாராட்டுவாள். அந்த நினைவு மயில்விழிக்கு இப்பொழுது எழுந்தது.

''மயில்விழி என்னை நினைவிருக்கிறதா?'' என்று குமாரவேலன் கேட்டான்.

பல ஆண்டுகள் ஆனாலும் பாரிஜாத மலர்களை மறக்க முடியாதது போல் அவளால் குமாரவேலனையும் மறக்க முடியவில்லை. அவளுடைய காதலரிடம் சில சமயங்களில் அவன் தூது சென்றிருக்கிறான். அவர்கள் சந்திப்பிற்கு அவன் உதவியிருக்கிறான்.

''ஆகா: மறக்க முடியுமா? பாரிஜாத மலரின் மணம் இன்னும் நாசியைவிட்டு நகரவில்லை'' என்று மயில்விழி மென்னகை புரிந்தவாறு கூறினாள்.

''எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் மலரையும் மணத்தையும் மறக்கமுடியவில்லை. ஆனால் நாட்டவரை வளர்த்தவரைத் தான் மலர் மறந்து விட்டது'' என்று குமாரவேலன் கூறினான்.

மயில்விழி அவனை நோக்கிப் புருவத்தை உயர்த்தினாள். அவன் சொல்வதன் உட்பொருள் என்னவென்று கேட்டாள்.



''கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊர் ஒன்று இருக்கிறது என்பதாவது உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று குமாரவேலன் கேட்டான்.

''கங்காபுரியை மறக்க முடியுமா? என்னை வளர்த்து உருவாக்கி நடனக் கலையில் சிறக்கச் செய்த மரகதம் மாளை நான் மறக்க முடியுமா? அவர்கள் வயிற்றில் நான் பிறக்கவில்லையே தவிர தாயினும் சாலப் பரிந்து என்னைக் காப்பாற்றிக் கலையில் சிறக்கச்செய்த தெய்வம் அவர்கள்; அவர்கள் இருக்கும் ஊரை நான் எப்படி மறக்கமுடியும்?''—மயில்விழியின் குரலில் பாச உணர்வு மிகுந்திருந்தது.

''சொல்லில் தேனைக் குழைத்தளிக்கும் திறமை பெற்றிருக்கிறாய். நடனக் கலையில் வல்லமை பெற்றிருப்பதோடு பேச்சுக் கலையிலும் இப்பொழுது தேர்ந்து விட்டாய். மரகதத்தின் நினைவு உனக்கு இருப்பது சொல்லளவில்தான். இதயத்தின் உள்ளாழத்திலிருந்து நீ சொல்வதாக எனக்குத் தெரியவில்லை'' என்று குமாரவேலன் கூறும்போது, மயில்விழி பரபரப்புடன், ''ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள். நான் அந்தக் கலைத்தேவியை மறக்கவில்லை'' என்றாள்.

''கலைத்தேவி என்று நீ இப்பொழுது புகழ்பாடும் அந்தத் தாய் கால் ஊனமுற்று மன வேதனையுடன் ஓர் நடைப் பிணம் போல் உலவி வருகிறாள்'' என்று கூறிய குமாரவேலன், மயில்விழியின், முக மாறுதலை உன்னிப்பாக நோக்கினான்.

மயில்விழியின் முகம் கவலையால் மாறியது. சற்று மன அமைதி குலைந்த நிலையில், ''என் தாய் மன அமைதி இழந்துக் காணப்படுகிறாளா? கால் ஊனமுற்றுத் தவிக்கிறாளா? அய்யோ எனக்குச் செய்தி தெரியவில்லையே...'' என்று வேதனையுடன் கூறினாள்.

''செய்தி தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? நீ செய்த காரியம்தான் மரகதத்தை நிலை குலைய வைத்து

விட்டது: உன் நினைவாகவே அவள் உருகித் தவித்து எலும்பும் தோலுமாய் விட்டாள்...''

''ஐயோ... அம்மாளின் வடிவம் மாறிவிட்டதா? என்னால் அவர்களுக்குத் துன்பமா? நான் இப்பொழுது என்ன செய்வேன்?''

''நீ உன் வளர்ப்புத் தாயிடம் அன்பாக இருப்பது மெய்யானால் அம்மாவுக்கு ஏற்பட்ட சீர்குலைவுக்காக வேதனைப்படுவது சத்தியமானால் நான் சொல்வதுபோல நீ செய்வாயா?'' என்று குமாரவேலன் கூறியதுகேட்டு விழிகளை மயில்விழி உயர்த்தி,''என்ன சொல்லுங்கள்...'' என்றாள்.

''செய்வாயா?''

''சொல்லுங்கள்...அதன்படி நடக்கிறேன்.''

''நீ என்னுடன் கங்கை கொண்ட சோழபுரம் வர வேண்டும்.''

இந்தச் சொற்களைக் கேட்ட மயில்விழி திடுக்கிட்டாள் என்பது அவள் முகத்தில் பிரதிபலித்தது.

''மயில்விழி, உன் நிலை எனக்குத் தெரியும். நீ யோசித்துச் சொல்லு. உன் கரம் பிடித்த மணாளனின் கருத்தைக் கேட்டுச் சொல்லு. சோழ மன்னரிடமிருந்து, வஞ்சி நகருக்குச் செய்தி கொண்டு தூதுவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் நாங்களும் வந்திருக்கிறோம். நாளை அவர்கள் திரும்பி விடலாம். அப்பொழுது நாங்களும் செல்ல வேண்டும். உன் முடிவைத் தெரிந்துச் செல்ல வேண்டும். முடிந்தால் உன்னையும் அழைத்துச் செல்ல வேண்டும்'' என்றான்.

மயில்விழி மறுமொழி கூறவில்லை. மௌனமாக நின்றாள். உள்ளே நடனம் பயில வந்த பெண்கள் தங்கள் பயிற்சியை நிறுத்திவிட்டு, வெளியே பேசிக் கொண்டு



இருக்கும் தங்கள் தலைவியையே நோக்கியவாறு இருந்தனர். தங்கள் தலைவி என்ன பேசுகிறாள் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் அவளுடைய முக உணர்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவள் பேசாமல் நிறுத்தியதையும் கவனித்தனர். தன் மாணவிகள் தங்களைக் கவனிப்பதைக் கண்ட மயில்விழி, ''தாங்கள் கேட்டது: எளிதில் யோசிக்க முடியாத, உடனே என் முடிவைச் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறேன். நாளைக்குச் சொல்கிறேன்'' என்றாள்.

''நாங்களும் அதைத்தான் சொன்னோம். நாளைக்கு எந்த நேரத்தில் புறப்படுவோமோ தெரியாது. உன் நல்ல முடிவை அறிந்தால் மகிழ்ச்சியடைவோம். அதைவிட உன்னையும் உடன் அழைத்துச் சென்றால் சோழ மன்னர் பெருமகிழ்ச்சியடைவார். எங்களுக்குப் பெயரும், புகழும் கிடைக்கும். எங்களுக்குக் கிடைப்பது இருக்கட்டும்; எங்கள் நாட்டிற்குப் பரிசு கிடைக்கும்'' என்று சொல்லி வந்தவரை குறுக்கிட்டு, ''உங்கள் நாட்டிற்கா?'' என்று கேட்டாள் மயில்விழி. ''ஆமாம், நீ மீண்டும் கங்கை கொண்ட சோழீசர் முன்பு நிருத்யாஞ்சலி செய்வது சோழ நாட்டிற்குக் கிடைக்கும் பெரும் பரிசல்லவா?'' குமாரவேலன் இவ்வாறு கூறும்போது மயில்விழியின் முகத் தாமரையின் செம்மை மேலும் அதிகமாகியது.

மறுநாள் அவள் என்ன முடிவு கூறப் போகிறாள் என்ற ஆவலுடன் மயில்விழி வீட்டை அவர்கள் நெருங்கினர்.

பரதேசிகள் வடிவில் வந்துள்ள சோழ நாட்டு ஒற்றர்களின் வருகையை மயில்விழியும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள்.

# 7

கொங்குச் சேர மன்னர் வீர சோமன் எதிரே, சோழ நாட்டிலிருந்து உளவறிய பரதேசிகள் வடிவில் வந்த குமாரவேலனும் மற்றவரும் நிறுத்தப்பட்டனர்.

குமாரவேலனைப் பார்த்தால், உளவுப் படையைச் சேர்ந்தவன் போல் தோன்றவில்லை. தவறான நீதியை வழங்கக் கூடாது என்பதற்காக மன்னர் வீர சோமனே அவனைப் பலவிதத்தில் குறுக்குக் கேள்விகள் கேட்டார்.

அவ்வளவு எளிதில், சேர மன்னரிடம் அகப்பட்டுக்கொள்வோம் என்று குமாரவேலன் எதிர்பார்க்கவில்லை, சோழ நாட்டினின்று வந்த தூதுவர்களைச் சந்திக்கச் சம்மதம் தெரிவித்து அவர்களை அழைத்து வருமாறு அவர் உத்தரவிட்ட மறுகணமே, சோழ நாட்டு உளவாளிகள் என்று இருவரை அழைத்து வந்து காவல் வீரர்கள் தம்முன் நிறுத்தியது மன்னருக்கு வியப்பை அளித்தது.

அரசரே அவர்களைக் கேள்வி கேட்டு உண்மை அறிய முற்பட்டார்.

''உன் பெயர் என்ன?'' என்று தன் பெயரை முதல் கேள்வி கேட்டபோதே குமாரவேலன் சற்றுத் தயங்கினான். உண்மைப் பெயரைச் சொல்வதா, புனைப் பெயர் கூறுவதா என்று ஒரு கணம் தயங்கினான். பொய் சொல்ல அவன் விரும்பவில்லை.

''குமாரவேலன்'' என்று கூறிய அவன் நடனமங்கை மயில்விழியைத்தான் சந்திக்க வந்ததாகக் கூறினான்.

''நாங்களிருவரும் இளம்பருவத்திலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள். காவிரிப் பூம்பட்டினம் அருகே எங்கள் ஊர். என் தந்தையும் அவள் தந்தையும் பிழைப்பைத்தேடி



கங்காபுரி வந்தார்கள். கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் என் தந்தைக்கு வேலை கிடைத்தது. அவர் பணியைப் பிறகு நான் மேற்கொண்டேன். நந்தவனத்து பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.''

''ஓ! பெரிய நந்தவனமா?'' அரசர் கேட்டார்.

''ஆமாம், பெரிய கோயிலைப் போல மலர் வனமும் பெரியதே.''

''உம்; பிறகு சொல்லு.''

''மயில்விழி நாட்டியம் பயின்றாள். அவளுடைய குருநாதர் அபிமானத்தை அவள் மிகக் குறைந்த கால அளவிலேயே பெற்றாள்...''

அரசர் குறுக்கிட்டார்... ''குருநாதரா! அவர் பெயர்?''

''கோயிலில் ஆடுவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மரகதம்.

''ஓ! பதியிலாதார் என்று பெயர் கொண்டவர்களா? ஒரு பெண்ணைக் குருநாதர் என்று உயர்வாகச் சொல்லக் காரணம்?''

''கங்காபுரியில் அவர்கள் மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறார்கள். அவர்களுக்குச் சோழ நாட்டில் பெரு மதிப்பு உண்டு. இறைவனுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணித்துக் கலைத் தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அவர்களுக்குச் சோழ அரசரிடம் நல்ல மதிப்பு. நாட்டியக் கலையைப் பரம்பரை பரம்பரையாகப் பேணிக் காத்து வரும் அவர்களுள் மரகதம் மிக உயர்ந்தவள், சிறந்தவள், அவர்களிடம் பயின்றுப் பெயர் பெற்றவள்தான் மயில்விழி...''

''எமக்குத் தெரியும். மயில்விழியின் திறமையை நாம் அறிந்ததால் தான், அவளுக்குச் சகல மரியாதையை இங்கே அளித்துள்ளோம்.''

''அந்தச் சிறப்புக்குக் காரணம் மரகதம் தானே. அதனால், மரகதத்தைக் குருநாதர் என்று கூறுவதால் என்ன பிழை?''

அரசர், குமார வேலனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நன்றாகப் பேசுகிறாய். நந்தவனத்தில் செடி கொடிகளை வளர்ப்பவனுக்கு இவ்வளவு பேச்சுத் திறமையா?''

''சோழ நாட்டில் ஒவ்வொரு பணியிலும், திறமை மிக்கவர்களாகப் பார்த்தேதான் நியமிக்கிறார்கள்...''

''வஞ்சி நகருக்கு எதற்காக வந்தாய்?''

''மயில்விழி என் பிள்ளைப் பிராயத் தோழி. அவளை சந்திக்க வந்தேன்,''

''இவ்வளவு நாட்களாக சந்திக்காமல், திடீரென இப்போது சந்திக்கும் ஆவலும் எண்ணமும் எவ்வாறு வந்தன?''

இந்தக் கேள்விக்கு உடனே மறுமொழி கூற அவனால் முடியவில்லை.

''மயில்விழி மீது உனக்குக் காதல் உண்டா?'' மன்னர் இவ்வாறு கேட்டவுடன் அவன் திடுக்கிட்டான்.

''காதலா? அவளுடைய காதல் வளர உதவி வந்தவனே நான் தானே! அவ்வப்போது மயில்விழியிட மிருந்துச் செய்தியை அவள் அன்பனிடம் நான் கொண்டு சென்றிராவிட்டால் அவர்கள் காதல் வளர்ந்திருக்காது!''

''அது சோழ மன்னருக்கு நீ செய்த துரோகம் தெரியுமா?''

சேர மன்னர் இவ்வாறு கேட்டவுடன் குமாரவேலன் அதிர்ச்சியடைத்தான்,



''துரோகமா? காதல் தூது ஒரு துரோகமா?''

மன்னரையே திருப்பிக் கேட்கும் சோழ நாட்டவனது துணிவைக் கண்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டனர். சரியான தண்டனை உடனே கிடைக்கப் போகிறது என்று அப்போதே முடிவு செய்துவிட்டனர்.

''ஆமாம்; துரோகச் செயல் தான் . மரகதத்தைப் போலவே மயில்விழி தன்னையும் கங்கை கொண்ட சோழீசருக்கு பணிசெய்ய அர்ப்பணித்துக் கொண்டிருந் தாள்தானே? சோழநாட்டு வழக்கப்படி அவள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது தானே? அப்படியிருக்க அவள் திருமணம் செய்து கொள்வதற்கு நீ உதவியது நாட்டுக் கட்டுப்பாட்டை மீறிய செயல்தானே? மயில்விழியின் காதல் கனிந்ததால் அவள் தன் காதலனுடன் வஞ்சி நகருக்கு வந்துவிட்டாள். இப்படி நடக்க உதவியது துரோகச் செயலில்லாது வேறு என்ன?''

சேர மன்னரின் இந்தக் கேள்விக் குற்றசாட்டிற்கு அவனால் மறுமொழி கூற முடியவில்லை.

''சரி; நீயும் வஞ்சி நகருக்கு வந்துவிடுகிறாயா? பசு பதி நாதர் கோயிலுக்குப் பெரும் நந்தவனம் ஒன்றை ஏற்படுத்த யோசனை. அந்த நந்தவனம் வளர்க்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன்...''

மன்னர் இவ்வாறு கேட்டவுடன், குமாரவேலன் திகைத்தான்.

அவனுடைய மௌனத்தைப் பயன்படுத்திக்கொண்ட மன்னர், ''குமாரவேலா! அவ்வாறு நீ ஒப்புக்கொண்டால் அது மாபெரும் துரோகச் செயல் என்று எனக்குத்தெரியும் வஞ்சி நகருக்கு வந்து, மயில்விழியைச் சந்தித்து, மீண்டும் அவளைக் கங்காபுரிக்கு அழைத்துச் செல்வதுதானே உன் திட்டம். அதற்காகத்தானே சோழ அரசர் உன்னை

அனுப்பினார். தூதுவர்களோடு சேர்ந்து நீர் வந்தாய் என்பது தானே உண்மை?'' என்று கேட்ட மன்னரின் குரலில் கடுமை இருந்தது.

குமாரவேலன் துணிவை வரவழைத்துக் கொண்டான் ''சோழ மன்னர் தூதுவர்களை அனுப்பியது எனக்குத் தெரியாது. நான் மயில்விழியைக் காண வந்தேன் என்பது தான் உண்மை'' என்றான்.

''மாறு வேடத்தில் வரக் காரணம்?''

''பரதேசிகள் போல் வந்தால்தான் நாங்கள் வஞ்சி கோட்டைக்குள் நுழைய முடிந்தது.''

சேர மன்னர் எல்லாம் அறிந்திருக்கிறார். மறைத்துப் பயனில்லை, மௌனமாய் இருந்தான்.

''நீ மயில்விழியின் பிள்ளைப் பிராய நண்பன் என்பது உண்மைதானா?'' என்று மன்னர் கேட்டார்.

''ஆமாம்'' என்று அழுத்தமாகக் கூறினான். குமாரவேலன்.

மன்னர் அவனையே கூர்ந்து நோக்கி, ''யாரங்கே? மயில்விழியை உடனே அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

குமாரவேலனுக்குத் துணிவு ஏற்பட்டது. மயில்விழியிடமே கேட்கட்டுமே. தன்னைத் தேடி வந்ததை அவள் உள்ளபடி கூறப்போகிறாள். மீண்டும் கங்காபுரிக்கு வருமாறு நான் அழைத்ததைக் கூறப்போகிறாள். கூறட்டுமே...

ஆனால் மயில்விழி கூறியவை, குமாரவேலனைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

குமாரவேலனைத் தனக்குத் தெரியாது என்றும், பிள்ளைப் பிராயத்து நண்பர் என்று அவர் சொல்வது பொய் என்றும் தன் வீட்டிற்கு வந்து பசிக்குச் சோறு



போடுங்கள் என்று கேட்டது மட்டும் உண்மை என்று அவள் கூறியது கேட்டு குமாரவேலனுக்கு, மயில்விழியின் மீது ஆத்திரம் பொங்கியது.

''மயில்விழி, இப்படிப் பொய் சொல்லலாமா?'' என்று அரசர் முன்தான் நிற்கிறோம் என்பதை மறந்து கூவினான்.

சேர மன்னர் மறுபேச்சுப் பேசவில்லை. குமாரவேலனையும், அவனுடன் வந்தவனையும் சிறையிலடைக்க உத்தரவிட்டார்.

''மயில்விழி! நீ சோழ நாட்டுக்குத் துரோகம் செய்தாய். உன்னை வளர்த்து ஆளாக்கிக் கலைப்புலமை நிறைந்தவளாகச் செய்த மரகதத்திற்குத் துரோகம் விளைவித்தாய்! உன் காதலனுக்கு உதவிய என்னைத் தெரியாது என்று கூறி எனக்குத் தண்டனையும் பெறச் செய்து விட்டாய். தெய்வம் உன்னைச் சும்மா விடாது'' என்று கூறினான், குமாரவேலன்.

மயில்விழி குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தாள். மன்னர் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பதுபோல் தோன்றியது.

விளக்கொளிகூட இல்லாத இருட்டுச் சிறையில் குமாரவேலன் அடைக்கப்பட்டான், மயில்விழி இவ்வாறு செய்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஒற்றர்களுக்கும், உளவாளிகளுக்கும் மரண தண்டனை கூட விதிக்கப்படலாம் உடனே தண்டனை அளிக்காமல் சிறையிலடையுங்கள் என்று அரசர் கட்டளையிட்டிருப்பதால், மீண்டும் தன்னை அழைத்து விசாரிக்கக்கூடும் என்று நினைத்தான். பகல் உணவு வந்தது. மாலையில் கஞ்சி கொண்டு கொடுத்த சிறைச்சாலைக் காவலனிடம் ஏதோ பேச்சுக் கொடுக்க முயன்றான். அவன் திரும்பிக் கூடப்பார்க்கவில்லை. ஏதாவது அற்புதம் நேர்ந்தால் தவிர தனக்கு விடுதலை இல்லை என்ற முடிவுக்கு வந்தான்.

சோழ மன்னருக்கு விவரம் தெரிந்தால், எப்படியும் அவர் தன்னைக் காப்பாற்றுவார் என்ற முடிவுக்கு வந்தவனாக கண்ணை மூடிக்கொண்டு அமைதியாக இருக்க முயன்றான். இறைவனை வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்பதை உணர்ந்தவனாக, கங்கை கொண்ட சோழீசரையும் தில்லை நடராசப் பெருமானையும் துதித்துக் கொண்டான்.

இரவு நடு ஜாமத்திற்குப் பிறகு அவனுக்கு நல்ல உறக்கம் வந்தது. கவலையும், பயமும் நிறைந்திருந்தும் அவனுடைய விழிகள் சோர்ந்து போயின.

அவனை யாரோ தட்டி எழுப்பியதை உணர்ந்துத் திடுக்கிட்டு எழுந்தான். இருளில் அவனுக்கு வந்தவரின் முகம் தெரியவில்லை. தொட்டு எழுப்பியதால் ஏற்பட்ட மெல்லிய ஸ்பரிசம் ஒரு பெண் என்பதை உணர்த்தியது.

பெண்ணா? யாராக இருக்கக்கூடும்?

''குமாரவேலா...'' என்ற மெல்லியகுரல் யாருடையது என்று அவனால் உணர முடியவில்லை.

''நான் தான் மயில்விழி... எழுந்திரு... எழுந்திரு...'' என்ற குரல் கேட்டது.

மயில்விழியா? கண்களைக் கசக்கிக்கொண்டு மீண்டும் ஒருமுறை இருளில் உற்று நோக்கினான்.

மிக அருகே அவள் அமர்ந்திருந்தாள். அவளுடைய மூச்சுக்காற்று அவன்மீது படர்ந்தது. மிக அருகே அவள் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

''குமாரவேலா, உடனே என்னுடன் புறப்படுங்கள். ஏன்—என்ன என்று கேட்காதீர்கள். நான் சேரமன்னருக்கு மிக நம்பிக்கை உடையவளாயிருக்க வேண்டியிருக்கிறது. அதே சமயம் என்னை வளர்த்து ஆளாக்கி, கலையில் சிறக்க செய்தவனுக்கும் நன்றி உடையவளாயிருக்க



வேண்டும். தங்களைச் சிறையிலிட்டது எனக்கு வருத்தமே நாங்கள் தப்பிச் செல்ல இதோ வழி கூறுகிறேன். என்னுடன் வாருங்கள்'' என்றாள்.

குமாரவேலன் ஏதோ பேசமுற்பட்ட போது, அவனுடைய வாயை அழுத்தமாகப் பொத்தி அவனது கரத்தைப் பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக அழைத்துச் சென்று, பல இருள் வளைவுகளுக்குள் நுழைந்துத் திரும்ப, கடைசியில் ஓர் படிக்கட்டுகளில் ஏறி, ஒரு கதவைப் பலமாக இழுத்துத் திறந்து, ''குமாரவேலா, இது அமராவதி ஆற்றங்கரை. இங்கிருந்து நீ எவ்வளவு விரைவாகத் தப்பிச் செல்ல முடியுமோ சென்று விடு'' என்றாள்.

# 8

குலோத்துங்க சோழ மன்னர் கவனமெல்லாம் அன்று வஞ்சி நகரத்தின் மீது இருந்தது. சேர மன்னன் வீரசோமன் வீம்பிற்காகவாவது மயில்விழியைக் கவர்ந்து சென்று சோழ நாட்டை அவமதிப்பது என்று முடிவு செய்துவிட்ட நிகழ்ச்சியைக் குலோத்துங்கன் மிக அழுத்தமாக மனத்தில் பதித்துக் கொண்டார்.

அமைச்சர் மண்டலத்தாரை அழைத்துப் பேச முடிவு செய்தார் குலோத்துங்கன். அமைச்சர் மண்டலத்தாரை அழைத்து மந்திராலோசனை நடத்த வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அதில் மறு கருத்து சொல்வதற்கென்று ஒருவருடைய யோசனையையும கேட்க வேண்டிய அவசியமுமில்லை. ஆனால் தான் எடுத்த முடிவை மற்றவரும் நியாயமானது என்று சொல்லவேண்டும் என்ற எண்ணம் கொங்கு சேரரை இதுவரையில் வளரவிட்டதே

தவறு சோழ நாட்டின் எல்லை அருகே சேரர்களின் தலைநகரை அமைக்கும் பொழுதே அவர்களைத் தடுத்திருக்க வேண்டும்.

மேற்குக் கடற்கரை ஓரமாக வஞ்சி மாநகர் என்று புகழ்பெற்று இருந்த அந்த நகரத்தைக் காலச் சுழற்சியில் பல ஆண்டுகளுக்கு பிறகு, அமராவதி நதிக்கரையில் இருந்த கரூர் நகரத்தை விரிவாக்கி அதற்கு வஞ்சி என்று பெயர் சூட்டிய போதே அவரைத் தடுத்திருக்க வேண்டும். சோழ நாட்டின் எல்லையருகே சேரர்களின் தலைநகரம்! அந்த நகரத்தைச் செழித்து விளங்கச் செய்ததற்காக என்னை நானே நொந்து கொள்ளவேண்டும்—அவர் எண்ணினார். அதனால் தனது தீர்மானமான ஒருமுடிவை மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டு அமைச்சர் மண்டலத்தாரின் கருத்தைக் கேட்பதற்காக சபை கூட்டுவார்.

படைத்தலைவர் சூரியன் சம்புவராயன், அந்தக் கூட்டத்திற்கு வந்து இருந்தார். ''நடனப் பெண்ணைக் கவர்ந்து சென்றுவிட்டது ஒன்றே சேரனைத் தட்டிக் கேட்கப் போதுமான காரணமாகும்'' என்றார் சம்புவராயர்.

''நடனப் பெண்ணைச் சேர அரசர் கவர்ந்துச்சென்றார் என்று எவ்வாறு கூறமுடியும்?'' என்று அமைச்சர் ஒருவர் கேட்டார். அவருடைய துணிவான கேள்வியை மற்றவர்கள் மனத்திற்குள்ளேயே பாராட்டிக் கொண்டனர்.

'ஒரு பெண்ணைக் கவர்ந்துச் செல்வதென்றால் அந்த நாட்டினின்று யாராவது ஒற்றர்கள் வந்திருக்கவேண்டும்; படை வீரர்கள் வந்திருக்கவேண்டும். ஒருவரும் அறியாமல் அந்தப் பெண்ணைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டும். தூக்கிச் செல்லும் பொழுது யாராவது பார்த்திருந்தால் சிறு போராவது தற்காப்புக்காக நடந்திருக்கும். அப்படி எல்லாம் இல்லாத நிலையில் சேரர் அந்தப் பெண்ணைக் கவர்ந்துச் சென்றார் என்று எப்படிக் கூற முடியும்?'' இது கேள்வி கேட்ட அமைச்சருடைய கேள்வியின் உள்ளடக்கம்.



''மயில்விழி என்ற அந்தப் பெண்ணை யார் அழைத்துச் சென்றிருப்பார்கள். அவளே விரும்பிச் சென்றிருக்கலாம்; இதையெல்லாம் நாம் பெரிது படுத்தக் கூடாது'' என்று அவர் இறுதியாகத் தன் கருத்தைக் கூறினார்.

''என்ன சொல்வீர்கள்? என் அருமை அமைச்சரே! மயில்விழியே விரும்பிச் சென்றாள் என்ற முடிவுக்கு தாங்கள் எவ்வாறு வந்தீர்கள்?'' என்று குலோத்துங்கன் கேட்டார். கேட்டார் என்பதைவிட அவர் சீறினார் என்று சொல்லலாம்.

''சேர மன்னன் வீரசோமனுக்குத் தெரியாதா, இப்படி ஒரு பெண்ணைக் கவர்ந்துச் சென்றால் விபரீத விளைவுகள் ஏற்படுமென்று. அதனால்தான் அவளே போயிருப்பாள் என்று நான் யூகித்தேன்'' என்று சமாதானப்படுத்த முயன்றார் அந்த அமைச்சர்.

''அமைச்சரே! அண்மையில் சில ஆண்டுகளாக வீரசோமன் நமக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். நமது ஒற்றர் படைகள் செய்திகளை அவ்வப்போது அறிவித்துத்தான் வந்தன. சேரனின் பலத்தையும் திறமையையும் நான் மிக எளிதாகக் கருதி விட்டேன். இவ்வளவு நாள் பொறுத்திருந்தேன். இப்பொழுது மாலை வேளையில் பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வந்த சந்தியா நடனம், நடைபெறவில்லை என்ற நிலை ஏற்பட்டவுடன் எனக்குண்டான கோபத்தைச் சொல்லி முடியாது. எனக்கு மட்டுமென்ன, சோழ நாட்டிற்கே அவமானம்'' என்றார் அரசர்.

''வஞ்சி நகர் சென்ற நமது தூதுவர்கள் சரிவர நடத்தப்படவில்லை என்ற செய்தி உண்மைதானா?'' மற்றொரு அமைச்சர் கேட்டார்.

''அது எதிர்பார்த்ததுதான். தூதுவர்களை அனுப்பித் தான் சேரன்மீது படையெடுக்க வேண்டும் என்பதில்லை. என்றாலும் தர்ம நெறியை நாம் மீறியதாக உலகம் பழிக்கக்கூடாதல்லவா'' என்றார் மன்னர்.

''நாம் இப்பொழுது படை திரட்டுவதைப்பற்றி ஆலோசிக்கத்தான் கூடியிருக்கிறோம். சேரன் செய்தது சரியா? தவறா? என்பது பற்றி விவாதித்து நாம்நேரத்தை வீணடிக்க வேண்டாம்'' என்று சம்புவராயர் கூறினார்.

''பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற போது நமக்கு உயிர்ச் சேதம் அதிகம். பலபிரிவுப் படை வீரர்கள் வீரத்தோடு போரிட வேண்டி இருந்தது. வஞ்சி நகர்ப் படையெடுப்பை எளிதில் முடித்து விடலாம்'' என்று ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

படைத்தலைவர் பலமாகத் தலையசைத்து, ''இல்லை இல்லை; நீங்கள் நினைப்பதுபோல் இல்லை. வஞ்சிநகர் கோட்டை மிகப் பலம் பொருந்தியது. வீரர்கள் எண்ணிக்கைக் குறைவுதான். ஆனால் திறமை மிகுந்த வல்லவர்கள் அதிகம். பழங்காலச் சேரநாட்டின் வீர மாபினைாயெல்லாம் அழைத்து வந்து கோட்டைக் குள்ளும் கோட்டையைச் சுற்றிலும் பரவலாக சிறு ஊர் களிலும், சேர மன்னர் குடியேற்றியிருக்கிறார். அவர் களுக்கு வெவ்வேறு பணிகளைத் தந்திருக்கிறார். தேவை பட்டவுடன் அவர்கள் ஒன்று சேர்ந்துத் தாக்குவர். எந்தப் பக்கத்திலிருந்துத் தாக்குதல் வரும் என்று நம்மால் அறிய முடியாது. ஆனால் அவர்கள் நம்மைத் தடுத்து நிறுத்த முடியும். நாம் மிகத் திறமை வாய்ந்த வீரர்களுடன்தான் செல்ல வேண்டும். அதற்கு ஏற்ற வீரர்களைத் திரட்ட வேண்டும்'' என்று படைத்தலைவர் சம்புவராயர்கருத்துத் தெரிவித்தார்.

''அப்படியென்றால் உங்களுடைய போர் திட்டம் தான் என்ன?'' என்று அரசர் கேட்டார்'



''வஞ்சிகோட்டை பலம் பொருந்தியது என்பதை நான் அறிந்திருக்கிறேன். சேர வீரர்களின் வில் திறமை யையும் நமதுஒற்றர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சரமாரி யாக அம்புகளை—அதிலும் விஷம் தோய்ந்த அம்புகளை —மதில் மீதிலிருந்து வீசவல்ல ஆயிரம் வீரர்கள் கோட்டைக்குள் இருப்பதையும் நான் அறிந்திருக்கிறேன். பலமான போர்க்கலங்களுடனும் வீரர்களுடனும் அவர் கள் நம்மை எதிர்த்தால் அதில் வியப்பில்லை. ஆனால் அதை முறியடிப்பதற்கான திட்டத்தை இன்னும் ஓரிரு நாட்களுக்குள் நான் முடிவு செய்து சமூகத்திடம் வந்துத் தெரிவிக்கிறேன்'' என்றார்.

ஃ ஃ ஃ

வஞ்சி சென்று வந்த தூதுவர்கள் என்ன தெரிவித் தார்கள் என்பதை அறிந்துகொள்ள மரகதம் காத் திருந்தாள். அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரிய நியாயமில்லை. மிக ரகசிய மாக தூதுவர்கள் கூறிய செய்திகள் அரண்மனைக்கு உள்ளேயே இருந்தன. வெளியே ஒருவரும் மூச்சுக் கூட விடவில்லை, யாரைப் போய் அவள் கேட்பாள்! மயில்விழி என்ன சொல்கிறாள் என்று புரியாமல் அவள் திகைத்த வண்ணம் இருந்தாள். அவளுக்குப் பசி எடுக்க வில்லை. இந்த ஒரு சிறு பெண்ணால் பெரிய போரே நிகழப் போகிறது என்று நினைத்தவுடன் அதற்குத் தானும் ஒரு காரணமாக இருந்துவிட்டோமே என்ற கவலை அவளை முட்டியது.

மரகதம் மெல்ல மெல்லத் துணைக்குத் தக்கவரை அழைத்துக் கொண்டு, அவளுடைய தோளைப் பிடித்துக் கொண்டு கைத்தாங்கலாக நடந்து மாளிகையை அடைந் தாள். மரகதம் வந்திருக்கிறாள். என்றவுடன் மிகப்பெரிய

மரியாதை கிடைக்கும் என்று அவள் முதலில் நினைத்தாள். ஆனால் அவளைக் கவனிக்க ஆள் இல்லை.

எப்பொழுதும் புன்முறுவலுடன் தன்னை வரவேற்கும் பணிப் பெண்கள் தன்னைக் கவனிக்காதவர்கள் போல் அங்குமிங்குமாகச் சென்று கொண்டிருந்தார்கள். மிகப் பெரிய செயல் ஒன்றை உருவாக்குவதற்கான பரபரப்பு அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது. ஒரு தோழியைப் பார்த்து அவள் கேட்டாள் : ''அம்மா, அரசியை நான் சந்திக்க முடியுமா?'' என்று.

மரகதத்தை அவள் வியப்புடன் நோக்கி, ''நீங்கள் கூட உத்தரவு கேட்டுத்தான் சொல்ல வேண்டுமா? அரசியார் அந்தப்புரத்தில் இருப்பார்கள். நீங்கள் போவதற்கு எந்தவிதத் தடையுமில்லை. ஆனால் நீங்கள் மட்டும் தானே போக முடியும். உங்களுடன் மற்றவரையும் அழைத்துச் செல்ல முடியாதே'' என்று அவள் கூறிவிட்டு போய்விட்டாள்.

படிக்கட்டுகளில் ஏறி மேல் மாடத்தை அடைய வேண்டும். படிக்கட்டுகளைக் கவனிக்காமல் இறங்கித் தானே காலை முறித்துக் கொண்டோம். இப்பொழுது ஏறி உருண்டு விழுந்து உயிரையும் மாய்த்துக் கொண்டால் என்னவாவது? அவள் ஒரு கணம் எண்ணினாள்; 'இப்படி ஊனமுற்று இருப்பதைவிட உயிரை விடுவதே மேலானது' என்று கூட அவளுக்குத் தோன்றிவிட்டது.

தன்னை மாளிகையில் அலட்சியப் படுத்துகிறார்கள் என்பதை அவள் புரிந்து கொண்டாள். நின்று மறுமொழி கூறமுடியாமல் பரபரப்புடன் அவர்கள் செல்வதும் அதனால் இருக்கலாம் என்பதை அவள் நினைத்தாள். அவள் பெருமூச்சுவிட்டு அங்கே முன் முற்றத்தில் அந்தப்புரத்திற்கு ஏறும் படிக்கட்டுகளின் அருகே மெல்ல உட்கார்ந்தாள். ஒரு பணிப் பெண் அங்கே வந்தாள்.

''அம்மா இங்கெயல்லாம் உட்காரக்கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா? இப்பொழுது மன்னர் வரும்



வேளை அதனால் தாங்கள் அந்தப் பக்கமாகச் சென்று அந்த நந்தவனப் பகுதியில் இளைப்பாறுங்கள்'' என்றாள்.

மரகதத்திற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. 'மன்னர் இங்கு வரப் போகிறாரா? வரட்டுமே, என்னைப் பார்த்தால் மன்னர் ஒரு நொடிகூட நின்று பேசாமல் போய்விடுவாரா? நாம் இங்கேயே இருப்போம்' என்று எண்ணியபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

வேறு ஒரு காவல் வீரன் அங்கே வந்தான். அவன் சற்று அழுத்தமான குரலில், ''நீங்கள் யார்? இங்கே ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று கேட்டான்.

மரகதத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது, தன்னை யார் என்று கேட்கக்கூடிய அளவிற்கு ஆகிவிட்டதா. 'சோழீசருக்கு மாலை நடனாஞ்சலி செய்யாமல் போன பாவத்தின் தண்டனையை நான் அனுபவிக்கிறேனா? அந்தப் பாவம் என்னால்தான் ஏற்பட்டது என்று இறைவன் கூடக் கருதிவிட்டாரா? இதற்கு என்ன வழி? மயில்விழி திரும்பி வந்தால் இந்தப் பாவத்திற்கெல்லாம் அவள் விமோசனம் செய்துவிடுவாள். அப்பொழுது மரகதத்தை எல்லோரும் போற்றுவார்கள், புகழ்வார்கள்' என்று நினைத்துக் கொண்டு காவல் வீரனை நோக்கி, ''ஐயா! என்னை தங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று கேட்டாள்.

அவன் தலையசைத்தான். ''எனக்கு யாரையும் தெரியாது. இப்பொழுது காவல் வீரர்களை எல்லா மாற்றியிருக்கிறார்கள். மிக பரபரப்பான சம்பவங்கள் எல்லாம் நடக்க இருக்கின்றன ஆங்காங்கே இருக்கும் வீரர்களை, எல்லாம் போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டு மற்றவர்களை இங்கே நிறுத்தி வைக்கப் போகிறார்கள். ஒருவேளை யாராவது துரோகி இங்கே இருந்து, பாது காவல் சரியாக இல்லாதபோது அரசருக்கும் அரசிக்கும்

ஏதாவது ஊறுசெய்ய முற்பட்டால் என்னாவது? அதனால்தான் என்னை இங்கே காவலுக்கு நியமித்திருக்கிறார்கள். அதனால் தங்களை யார் என்று தெரியவில்லை. அப்படித் தெரிந்தால்கூட இங்கே யாரும் நிற்கக் கூடாது. அதுதான் எங்களுடைய மாளிகைத் தலைவருடைய உத்தரவு. கருணை கூர்ந்து சற்று விலகிச் சென்று விடுகிறீர்களா? மன்னர் வரும் நேரம் நீங்கள் இங்கே நின்று கொண்டிருந்தால் எனக்கு வேலை போய்விடும்'' என்று அவன் மிகப் பணிவுடனும் அழுத்தத்துடனும் சொன்னான்.

'போர் வரப்போகிறதா? ஓஹோ! மிகப் பயங்கரமான விளைவுதான். இது எனக்குத் தெரியவில்லையே! யார் சொல்வார்கள். அவ்வளவு இரகசியமாக இந்தச் செய்தியை வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறதே' இருக்கட்டும் என்று அவள் ஏதோ சொல்ல முனைந்தவுடன் மீண்டும் அந்தக் காவல் வீரன் அவளருகே வந்து, ''அம்மா நான் மீண்டும் மீண்டும் சொல்லமாட்டேன். கருணை கூர்ந்து இங்கிருந்து நீங்கள் செல்கிறீர்களா?'' என்று அழுத்தமாகக் கேட்டான்.

இனி அவனோடு வாதாடிப்பயனில்லை என்று, மெல்ல இருவர் கை வாகு கொடுத்துத் தூக்க அவள் எழுந்தாள். அவளால் எழ முடியவில்லை. காலில் ஊனம் ஏற்பட்டிருக்கிறது என்று கண்டு கொண்ட வீரன், ''ஐயோ! தங்களுக்கு நடக்க முடியவில்லை என்பது தெரியாது. நீங்கள் வைத்தியரிடம் செல்லாமல் இங்கே மாளிகைக்கு வந்திருப்பதன் காரணமென்ன? நான் அழைத்துச் செல்லட்டுமா?'' என்று மிகவும் வாஞ்சையுடன் கேட்டான். மரகதம் தலையசைத்து மெல்ல மெல்ல நடந்து மாளிகைக்குச் சற்று வடக்கே இருக்கும் நந்தவனத்தில் ஒரு சிறிய மேடையில் அமர்ந்தாள். அவளுக்கு வியர்த்து இருந்தது. உள்ளமெல்லாம் வேதனையால் துடித்துக் கொண்டு இருந்தது. என்ன நேரப் போகிறதோ! என்று அவள் மிகவும் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தாள்.

# 9

''அக்கா'' என்ற குரல் கேட்டு மரகதம் திரும்பினாள். பசியும், களைப்பும், சோர்வும், ஏமாற்றமும், கவலையும் அவள் பார்வையை மறைத்தன.

நந்தவனத்தில் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க வேண்டுமோ? எதற்காக உட்கார்ந்திருக்கப் போகிறோம்? நந்தவனத்து மலர்களின் அழகைக் கண்டு ரசிக்கவா? விதவிதமான குரலெழுப்பும் புள்ளினங்களின் இசை கேட்டு மகிழவா? ஓய்வெடுக்கவா இங்கு வந்தோம். உடலுக்கு ஓய்வெடுக்கலாம்; உள்ளத்துக்கு அமைதி, ஓய்வு?

நந்தவனத்தில் தன்னை அன்புடன் அழைப்பது யார் என்று திரும்பிப் பார்த்தாள்.

''அக்கா! நான்தான் குமாரவேலன்'' என்றான்.

மரகதத்திற்குத்தான் கேட்கும் குரல் உண்மையானது தானா என்ற வியப்பு ஏற்பட்டது. குமாரவேலனை அவள் எதிர்பார்த்திருந்தாள். மயில்விழியைச் சந்தித்து அவனை, அவன் எப்படியும் அழைத்து வந்துவிடுவான் என்று முழு நம்பிக்கையில் இருந்தாள்.

''தம்பி, குமாரவேலா, எப்பொழுது வந்தாய். மயில்விழி எங்கே? இன்றிருந்தே சோழீசருக்கு நடனாஞ்சலி செய்யலாம் அல்லவா?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

''மயில்விழி சௌக்கியமாக இருக்கிறாள் அக்கா'' என்றான் குமாரவேலன்.

மரகதம் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். என்ன சொல்கிறான் இவன்; இவனுடைய முதல் வார்த்தையே

நமக்கு நம்பிக்கை அளிக்கவில்லையே. சௌக்யமாக இருக்கிறாளா?—

''என்ன தம்பி சொல்கிறாய்? மயில்விழி சௌக்யமாக இருக்கிறாளா? அவளுடைய நலனைக் கேட்டறிவதற்காகவா உன்னை அனுப்பினார்கள்? நீ கருவூருக்கு புறப்படும்போது உன்னை நான் ஒன்று வேண்டிக்கொண்டேனே அதை மறந்துவிட்டாயா?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''அக்கா, நீங்கள் கவலையுடன் இருப்பீர்கள் என்று தான் தங்களிடம் தெரிவிக்க ஓடோடிவந்தேன். மன்னரைச் சந்தித்து, ஒற்றர் தலைவரைச் சந்தித்துப் பிறகு தங்களைச் சந்திக்க தங்கள் வீடு சென்றேன். தாங்கள் இல்லை. மாளிகைக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். மாளிகையில் தேடினேன். மாளிகையில் இன்று கெடுபிடி அதிகம் என்று ஒரு பணிப்பெண் சொன்னாள்; தாங்கள் நந்தவனத்திலிருப்பதாக இங்கு வந்தேன். ஏன் அக்கா, நந்தவனத்தில் கவலையுடன் அமர்ந்திருக்கிறீர்கள்'' என்று குமாரவேலன் கேட்டான்.

''கவலைப்படுவது ஒன்றுதான் மிகஎளிதில் வருகிறது. ஒரு காரியத்திற்கு நாம்தான் பொறுப்பானவர் என்றால் அது நிறைவேறாதபோது உலகத்தைவிட்டே விலகிவிட வேண்டும் என்று தோன்றுவதில்லையே... என்ன நடக்கப் போகிறதோ எது நடக்கப் போகிறதோ, புரியவில்லையே. போர் தொடங்கப் போகிறதாம், பேசிக்கொள்கிறார்கள். கோயிலையும், வீட்டையும், நடனத்தையும் தவிர வேறு ஒன்றும் அறியாத எனக்கு போரைப்பற்றி என்ன தெரியப் போகிறது? ஒன்றும் மட்டும் நான் தெரிந்துகொண்டேன். கருவூரின்மீது படையெடுத்துச் செல்வதற்கு மயில்விழிதான் காரணம் என்பதை; மயில்விழி மட்டும் காரணமில்லை; நான்தான் முதல் காரணம். அவளை நான் என் வளர்த்தேன். அபூர்வ நடனமான சந்தியா நிருத்யத்தை



ஏன் கற்றுக் கொடுத்தேன். என் காலில் ஊனம் ஏன் ஏற்பட்டது. எனக்குப் பிறகு மயில்விழி தொடர்ந்து ஆடுவாள் என்று ஏற்பாடு ஏன் செய்து வைத்தேன்? என்னால் முடியாது போய், மயில்விழியும் காணாமல் போனதால் இறைவனுக்கு நடனாஞ்சலி நடைபெறவில்லை. சோழ அரசருக்கு அதனால் மிகக் கோபம். கருவூரில் மயில்விழி நடனமாடுகிறாள் என்பதை அறிந்தவுடன் அவருக்குச் சேர மன்னர்மீது சீற்றம் பொங்கியது; அதனால் போர் ஏற்பட்டது'' என்று கூறும்போது குமாரவேலன் குறுக்கிட்டு, ''அதுமட்டுமல்ல அக்கா; சேர அரசர் எங்களை நடத்திய விதமும்கூட'' என்றான்.

மரகதம் அவன் பேசுவதைக் கேட்க ஆயத்தமானாள். வஞ்சி நகருக்குச் சென்றதிலிருந்து ஒன்று விடாமல் கேட்டறிய அவள் ஆவல் கொண்டாள்.

''அக்கா, மயில்விழி வஞ்சி நகரில் சுக சௌக்யமாக இருக்கிறாள். வீட்டிலே பெண்களுக்கு நடன வகுப்பு நடத்துகிறாள்'' என்று கூறும்போது மரகதம் குறுக்கிட்டு, ''உம்? அவள் செய்வாள், இன்னமும் செய்வாள். என்னிடமிருந்து உயிருக்குயிராய்ப் பழகியதில் அவள் எல்லாம் கற்றிருப்பாள். மாணவிகளுக்கு நடனக் கலையை எவ்வாறு கற்றுக்கொடுக்கிறேன் என்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாள். நடனம் கற்றுத் தருவதைத் தவிர வேறு என்ன செய்கிறாள்'' என்று கேட்டாள். நிறைய அறிய வேண்டும் எனும் ஆவல் அவளிடமிருந்தது.

குமாரவேலன் மெல்லச் சிரித்தான். ''அவசரப்படுகிறீர்களே, அக்கா! ஒன்றுவிடாமல் தங்களிடம் சொல்லத்தானே வந்திருக்கிறேன்'' என்றபோது மரகதம் மீண்டும் குறுக்கிட்டு, ''கங்கை கொண்ட சோழீச்சரம் கோயிலைப் போல் மிகப் பெரிய கோயில் அங்கு இருக்கிறதா? மயில்விழி சந்தியா நிருத்யம் ஆடுகிறாளா? அங்குள்ள இறைவன் பெயரென்ன?'' என்று கேட்டாள்.

"அக்கா, எல்லாவற்றையும் சொல்கிறேன், பசுபதீச்வரர் கோயில் இருக்கிறது. கோயிலுக்குச் சென்றிருந்தேன். மயில்விழி அங்கே இறைவன் முன் ஆடினாள். ஆனால் இங்குள்ள தெய்வீகத் தன்மை அங்கில்லை. ஏதோ வேடிக்கை பார்ப்பது போல் பார்க்கிறார்கள். நடனமாடி முடிந்தவுடன், ஊரின் பெரிய தலைவர்கள் மயில்விழியிடம் பல்லைக் காட்டுகிறார்கள். மயில்விழிக்கு மன்னரிடம் மிகுந்த செல்வாக்கு. அதனால் ஒருவரும் அவளை நெருங்க முடியவில்லை. மயில்விழி முன்னைவிட மிக அழகாக இருக்கிறாள்..." என்று குமாரவேலன் கூறிவந்த போது, மரகதம் பெருமூச்சுவிட்டு, "தம்பி, மனம் உடல் இரண்டுக்கும் ஒரு சந்தோஷம் தேவை" என்று சொல்லத் தொடங்கியபோது குமாரவேலன், "மனத்திற்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் உடலுக்கு அது அமைந்து விடாதா?" என்று கேட்டான்.

"தம்பி! பெரிய விஷயம் அது. ஒரு கணத்தில் சொல்லி விட முடியாது. உடலுக்கு மகிழ்ச்சி தருவது என்று ஏன் சொன்னேன். உடல் வெறும் சதை, எலும்பு, இரத்தப் பிண்டம். அதற்குச் சந்தோஷம் அளிக்கக்கூடியனவற்றை மனமும் ஏற்க வேண்டும். மேனி மகிழ்வடையக் கூடியவற்றால், உடலும் மகிழ்வடையும். ஆனால் உடல் மகிழ்வடையக் கூடியவற்றால், மனம் மகிழ்வடையாது..."

குமாரவேலன் சிரித்தான். எனக்குப் புரியவில்லை அக்கா!" என்றான்.

"எளிதில் புரியக் கூடியதுதான். என்னை எடுத்துக் கொள். நான் மற்றப் பெண்களைப் போலத்தான். ஆனால் சற்று வித்தியாசமானவள். இந்த உலகத்தில் ஆசாபாசங்களுக்கிடையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான் மட்டும். என்னைப் போன்றும் பலர். எங்கள் வயிற்றுக்கு, மேனிக்கு வேண்டியவை எல்லாம் கிடைக்கின்றன. உள்ளத்திற்குத் திருப்தி தர ஒரு பெண்ணுக்கு,



இந்த உலகில் ஆண் துணை தேவை. நான் அதை மறுத்து, ஆண்டவன் நினைவை, ஏற்றுக் கொண்டேன். இறைவனுக்குத் தொண்டு செய்வதுதான் என் மனத்திற்குப் பிடித்தமான செயலாக ஏற்றேன். உடலும் உள்ளமும் ஒன்றுபட்டன. மயில்விழி அப்படியில்லை. அவள் ஆண் துணைக்காக ஏங்கியிருக்கிறாள். அவளுக்கு அது கிடைத்தவுடன் உடலும் மகிழ்ந்துவிட்டது. அதனால் தான் முன்னைவிட அழகாக இருப்பதாக நீ சொன்னாய். இதுதான் உண்மை" என்று நீண்ட விளக்கப் பிரசங்கம் செய்தான்.

"அப்புறம் நடந்ததைக் கேளுங்கள்" என்று குமாரவேலன் சொல்லத் தொடங்கினான்.

வஞ்சி நகர் மீது படையெடுத்துச் செல்வது என்று குலோத்துங்க சோழ தேவர் முடிவு செய்துவிட்டார். அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் குலோத்துங்கருடைய கருத்தை அனைவரும் ஒருமனதாக ஆமோதித்தனர்.

அதற்கு முன்பு வஞ்சிமீது படையெடுத்துச் செல்வது அன்றைய நிலைமையில் தேவையற்றதாகும் என்று கருதியவர்கள்கூட, முதல்நாள் கேள்விப்பட்ட ஒரு சம்பவத்தின் அடிப்படையில் உடனே வஞ்சி நகரை முற்றுகையிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். குமாரவேலனைக் கடத்திக் கொண்டு சென்றுவிட்ட செய்தியைக் கேட்டவர்கள் அந்த முடிவுக்கு வந்ததில் வியப்பில்லை.

நந்தவனத்தில் மரகதத்துடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு புறப்பட்ட குமாரவேலனை ஓர் அடர்ந்த மரத்தின் மறைவிலிருந்து இருவர் பின்புறத்திலிருந்துத் தாக்கி அவனை நினைவிழக்கச் செய்தனர். பிறகு நந்தவனத்தின் ஒரு பகுதிக்கு கொண்டு சென்று மதிளின் வழியாக கயிறு கட்டித் தூக்கி மறுபுறம் இறக்கி ஆயத்தமாக இருந்த ஓர் வண்டியில் அவனை ஏற்றினர். மயக்கம் தெளிந்த

குமாரவேலன் தானிருந்த இடத்தில் ஆளையுமில்லை என நினைத்து அங்கிருந்துத் தப்பியோட முயன்றபோது அவனை ஒரு முரடன் தோளைப் பிடித்து அமிழ்த்திச் சொன்னான்: "தம்பி நீ இங்கிருந்துத் தப்பிச் செல்ல முடியாது. வஞ்சி நகர் கோட்டையினின்றுத் தப்பி சென்றது போல உனக்கு உதவுவதற்கு யாரும் இங்கு வரமாட்டார்கள்."

அப்பொழுதுதான் குமாரவேலனுக்குத் தெரிந்தது. தன்னைச் சேர நாட்டு ஒற்றர்கள் சிறைப் பிடித்திருக்கின்றனர் என்பதை குமாரவேலன் அறிந்து கொண்டான். அதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பிய குமாரவேலன் "நீங்கள் என்னைத் தவறாக நினைத்து இங்கே பிடித்து வந்திருக்கிறீர்கள் வஞ்சி நகரமாவது-நான் சிறையிலிருந்ததாவது-என்ன கற்பனை ஏதாவது காண்கிறீர்களா? நான் கங்கைகொண்ட சோழீசர் கோவிலின் நந்தவனத்தைப் பாதுகாக்கும் ஒரு வேலைக்காரன்" என்றான்.

"தெரியுமே, தம்பி! நீ நந்தவனத்தைச் சேர்ந்தவன் என்பதைத் தெரிந்துதான் உன்னை நான் அழைத்துப் போக வந்திருக்கிறேன். எங்கள் விருந்தாளியாக வந்த நீங்கள் போய் வருகிறேன் என்று சொல்லிக் கொள்ளாமல் மீண்டும் சோழ நாட்டிற்கு திரும்பலாமா? அதனால் நீர் எங்கள் மன்னரிடம் முறையாக அனுமதி பெற்று வர வேண்டும் என்பதற்காகத்தான் உம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம்" என்றான்.

குமாரவேலன் ஒன்றும் மறுமொழி கூறவில்லை. தன்னை மீண்டும் வஞ்சி நகரத்துக்கு அழைத்துச் சென்று விடப் போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான். தன்னை ஏன் அவர்கள் அழைத்துச் செல்கிறார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை. சோழ நாட்டிற்குள் வந்து பகைவர்கள் சிறைபிடிக்கும் அளவிற்கு நகரம் பாது காவலில்லாமல் ஆகிவிட்டதா என்று கவலைப்பட்டான்.



அவர்களுடன் பேச்சுக் கொடுத்த பொழுது அவர்கள் சொன்னார்கள்; "தம்பி, நீ சிறையிலிருந்திருந்தால் மறுநாள் உன்னை எங்கள் அரசர் மன்னித்து விடுதலை செய்திருப்பார். நீ சிறையினின்று தப்பி இரகசிய வழியாக கோட்டைக்கு வெளியே வந்துத் தப்பிவிட்டாய். அந்த இரகசிய வழி ஒருவருக்கும் தெரியாது. நீ அதைத் தெரிந்து கொண்டு விட்டாய். இரகசிய வழியைத் தெரிந்தவனை வெளியே விட்டிருப்பது சரியன்று என்று உன்னை உடனே சோழ நாட்டினின்று அழைத்து வருமாறு கட்டளை எங்களுக்குக் கிடைத்தது. எங்களுக்கு செய்தி கிடைத்தவுடன் மிக எளிதில் உன்னைப் பிடிப்போமென்று நினைக்கவில்லை" என்றனர் விரோதி நாட்டு வாலிபர்கள்.

குமாரவேலன் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். "என்ன தம்பி பார்க்கிறாய்? வஞ்சி நகரத்திலிருந்து இவ்வளவு தூரம் நான் வந்து உன்னைச் சிறைப்பிடித்துச் செல்ல வேண்டி நேர்ந்து விட்டதே என்றா? இல்லை இல்லை நான் வஞ்சி நகரத்தினின்று வரவில்லை. செய்திதான் எனக்கு வஞ்சி நகரத்தினின்று வந்தது. நான் கங்கைகொண்ட சோழபுரத்திலேயே இருப்பவன் தான். சோழ நாட்டு வேவுப் படையைவிட எங்கள் நாட்டு வேவுப் படை எள்ளளவும் குறைந்ததில்லை என்பதை நிரூபிக்கத்தான் இந்தச் செய்கை" என்று இளைஞன் சொல்லும் பொழுது அதில் கர்வம் பொங்கி நின்றது.

இனி அவனுடன் பேசுவதில் பலனில்லை என்றுமுடிவு செய்த குமாரவேலன், தன்னை அவர்கள் கவர்ந்துச் சென்று விடுவார்கள் என்பதை எப்படித் தெரியப்படுத்துவது என்று புரியாமல் திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது மரகதத்திற்கு உதவி செய்யும் பணிப்பெண் அந்தப் பக்கம் சென்று கொண்டிருப்பதைக் கண்டான். அவளிடம் தன்னுடைய நிலையைப்புலப்படுத்துவதற்காக

"பெண்ணே, ஆபத்து, ஆபத்து! மரகதம் அம்மாளிடம் சொல், என்னை மீண்டும் சேரர்கள் சிறைப்பிடித்துச் செல்கிறார்கள்" என்று ஒரு பெருங் கூக்குரலை எழுப்பினான். அதை எதிர்பார்க்காத சேர ஒற்றர்கள் ஓடிவந்து அவன் சொல்லி முடித்த பிறகுதான் அவன் வாயை இறுக்க மூடினார்கள். பணிப் பெண்ணிடம் சொன்ன செய்தி வெளியே தெரிந்ததோ இல்லையா என்று ஐயப்பட்டுக் கொண்டிருந்தான் குமாரவேலன். ஆனால் அந்தச் செய்திதான் வஞ்சி நகர்மீது சோழர்கள் படையெடுப்பு உடனே நடைபெறச் செய்தது.

## 10

கங்கைகொண்ட சோழபுரத்திற்குள் சேர ஒற்றர் நுழைந்து நம் நாட்டிலிருந்து ஒருவரைக் கவர்ந்து செல்லும் அளவிற்குக் கங்கை கொண்ட சோழபுரம் பலம் குறைந்துக் காணப்படுகிறதா? என்று அவர் கவலைப் பட்டார். படை வீரர்களையும், மற்றவர்களையும் அவர் கூறிய சுடுசொற்கள் வஞ்சிநகர் மீது உடனே படையெடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஒரு வெறியை அனைவருக்கும் ஏற்படுத்தின.

படைகள் திரட்டப்பட்டன. படை வீரர்களுடன் குலோத்துங்க சோழர் புலவர்பெருமக்களையும் அழைத்து வருமாறு சொன்னார். திருமந்திர ஓலை நாயகத்தையும், பட்டையும் எழுதுபவரையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். படைகளுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை எல்லாம் ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார்.

"இங்கிருந்தே நாம் உணவுப் பண்டங்களை ஏன் கொண்டு செல்லவேண்டும்? அருகே உள்ள கிராமங்களிலிருந்து நமக்குப் போதுமான உணவைப் பெற்றுக்



கொள்ளலாம்" என்று ஒருவர் சொல்லவும், அரசர் தடுத்து நாம் மற்றவர் கரத்தை எதிர்பார்த்துச் செல்லக் கூடாது. பிறகு என்ன நேரக்கூடும் என்பதை நாம் முன்பே எதிர்பார்க்க வேண்டும். படை வீரர்களுக்கு உணவுதான் முக்கியம். கிராமத்திலிருந்தும் உணவு கிடைத்தால் உடன் கொண்டு செல்லும் உணவை இன்னும் சில நாட்களுக்கு அதிகமாக வைத்துக் கொள்வோம். கிடைக்காவிட்டால் என்ன செய்வது? பசியுடன் போரிட முடியுமா?" என்று அரசர் கேட்டார்.

படைத் தலைவர் தாமே சொல்லிக்கொண்டார்: "வஞ்சி முற்றுகை எவ்வளவு நாட்களுக்குத் தொடரும் என்று என்னால் திட்டமிட முடியவில்லை" என்றார்.

அரசர் சிரித்தார்: "படைத்தலைவரே! நீர்தான் முடிவு செய்ய வேண்டும். உம்முடைய அணிவகுப்பு முறை எப்படி இருக்கிறது? கோட்டையைத் தாக்குவதற்கு நீங்கள் இட்டிருக்கும் திட்டம் என்ன? இவையெல்லாம் உங்களுக்குத்தான் தெரியும். சம்புவராயர் திறமையைத் தான் நான் நம்பியிருக்கிறேன்" என்று அவரை உற்சாகப் படுத்துபவர்போல் பேசினார்.

பெரிய பெரிய வண்டிகளில் உணவுப் பண்டங்கள் ஏற்றப்பட்டன. வேல்களையும், ஈட்டிகளையும், வாள்களையும் கூர்மைப்படுத்த வேண்டிய கருமார்களும் தங்கள் தொழில் உபகரணங்களுடன் படை வீரர்களைத் தொடர்ந்தனர்.

இந்தத் திட்டத்தைப் பார்த்தால் வஞ்சிக் கோட்டையைப் பிடிக்கப் பல நாட்கள் ஆகும் என்றும் அங்கே எதிர்ப்புப் பலமாக இருக்குமென்றும் சோழ மன்னர் எதிர்பார்த்திருக்கிறார் என்று நினைக்கத்தோன்றுகிறது" என்று ஒவ்வொருவரும் பேசிக் கொண்டனர்.

சோழர் படைகள் திரண்டு வருகின்றன என்பதை வஞ்சி நகர் கோமான் வீரசோமன் முன்னரே தெரிந்து வைத்திருந்தார்.

படைவீரர் கோட்டைக்கு வெளியே ஒருவரையும் காணவில்லை. கோட்டை மதில்மீது மறைந்து நின்றனர் சேரவில்லவர்கள். கோட்டையைச் சோழர்ப் படைகள் நெருங்கினால் உடனே அம்புக் கணைகளை எய்யுமாறு சேர மன்னர் உத்தரவிட்டிருந்தார். தங்களுக்கு எதிர்ப்பே இல்லை எனும் எண்ணத்தில் கோட்டையின் எல்லா வாயில்களையும் சோழ வீரர்கள் நெருங்கினர். அப்போதும் கோட்டை மீது இருந்து எந்தவித எதிர்ப்பும் வராமல் இருக்கவே கோட்டையை மிக நெருங்கிக் கோட்டையின் நாற்புற வாசல்களைப் பெரிய இரும்பு உலக்கைகளால் தகர்ப்பதற்காக யானைகளைப் பயன்படுத்தினர். யானைகள் பின்புறமாக நகர்ந்து வேகமாக வந்து கோட்டைக் கதவை மோத எத்தனித்தபோது ஒரு கணத்தில் பல நூறு அம்புகள் சோழ வீரர்கள் மீதும், யானைகள் மீதும் பாய்ந்தன.

''ஐயோ'' என்ற பெரும் ஓலம் எழ தாக்க வந்த வீரர்கள் பின்னோக்கி ஓடத் தொடங்கினர். அம்பு பட்டவர்கள் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து மாண்டனர்.

அன்று இரவு பாசறையில் அமர்ந்த குலோத்துங்கனும் படைத் தலைவரும் தீவிரமாக யோசித்தவாறிருந்தனர்.

''அம்புகளில் விஷம் தோய்த்து வீசுவார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் நம் மீதே அவ்வாறு தாக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் நம்மை எதிர்க்காமல் அடிபணிந்து விடுவார்கள் என்றுதான் நான் நினைத்திருந்தேன்; கோட்டைக்குள் சென்ற பிறகுதான் அவர்கள் நம்மைப் பலமாக எதிர்ப்பார்கள் என்ற ஓர் எண்ணம் எனக்கு இருந்தது'' என்றார் படைத்தலைவர்.

குலோத்துங்கன் ஒன்றும் பேசவில்லை. விஷ முறிவு பச்சிலைகளை நாம் உடனே கண்டுபிடித்தாக வேண்டும்.



நாளைப் படையெடுப்பை நாம் நிறுத்துவோம். பாசறையில் அமர்ந்து அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்தித்து முடிவு செய்வோம்'' என்று குலோத்துங்கன் தன்னுடைய படை வீரர்களுக்கு நேர்ந்த இழப்பை எண்ணி வருத்தமுற்று அன்றைய பொழுதைக் கழித்தார்.

நடுநிசியில் திடீரென்று அரசரிடம் விரைந்து வந்த சம்புவராயர் அரசரிடம் மெல்லிய குரலில் ''மன்னர் பிரானே! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. மதில் மீதிருந்து அவர்கள் அம்பை வீசுவதுபோல் நாமும் மிக வேகமாக நான்குக் கோட்டை வாசல்களுக்கு அருகே பெரிய மரக்கோபுரத்தை அமைத்து அதன் மீது பாதுகாப்பாக நமது வீரர்களை நிறுத்தித் தீப்பந்தங்கள் நிறைந்த அம்புகளை நாம் வீசலாம்'' என்று கருத்துத் தெரிவித்தார்.

குலோத்துங்கன் ஒரு கணம் சிந்தித்தார். கோட்டையைத் தாக்குவதற்கு வேறுவழி? அவரும் சிந்தித்துப் பார்த்தும், அவருக்குத் தோன்றவில்லை. வெளியே இருப்பவர்கள் மீது உள்ளே இருப்பவர்கள் மிக எளிதில் தாக்கலாம். கோட்டைக்கு இரகசிய வழி ஒன்று தெரிந்து வைத்திருந்தான் நமது குமாரவேலன். அவனையும் சிறைபிடித்துச் சென்று விட்டார்கள். அமராவதி கரை ஓரமாக எங்காவது இரகசிய வழி இருக்கிறதா என்று ஆராயுமாறு நமது வீரர்களுக்கு உத்தரவிட்டார். ''இரகசிய வழி தெரிந்தால் அதன் வழியாகக் கூடச் செல்லலாம்'' என்று கூறிய குலோத்துங்கன், ஒரு கணம் மௌனமானார்.

''இந்த யோசனை சேரனுக்குத் தெரிந்திருக்காதா? இரகசிய வழியின் அருகே தன்னுடைய வீரர்களை நிறுத்திவைத்து நம் வீரர்கள் அந்த வழியே வரும்பொழுது தாக்குவதென்பது அவ்வளவு கடினமானதல்லவே! அதனால் இரகசிய வழியாகச் செல்வது என்பது சரியான திட்டமாகாது. நீங்கள் சொல்வது போல் மரக்

கோபுரத்தை அமைப்போம். மரக் கோபுரத்தின் மீது மரப்பரணை அமைக்கலாம். பரணின் மீது எவ்வளவு வீரர்கள் நிற்க முடியும் என்று நீங்கள் சிந்தித்தீர்களா?'' என்று குலோத்துங்கன் கேட்டார்.

அதற்குச் சம்புவராயன் மறுமொழி கூறினார். ''நாம் மரத்தினால் பரணைக் கட்டுவது சேரனுக்குத் தெரிந்து விடும். அதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை அவர்கள் உடனே தயாரித்து விடுவார்கள். என்றாலும் இந்த அணுகு முறையை விட்டால் வேறு முறை நமக்கு இருக்கு மென்று எனக்குத் தோன்றவில்லை. அல்லது நமது வீரர்கள் அனைவரையும், அம்பு துளைக்காத கவசங்களை அணியச் செய்ய வேண்டியதுதான். கவசங்கள் தயாராவ தற்குச் சில காலம் பிடிக்கும்'' என்று பணிவுடன் அரசரை நோக்கிக் கேட்டார்.

தளபதி, மன்னர் என்ற வேற்றுமைப் பாராட்டாமல் இருவரும் ஒன்றாக அமர்ந்து கலந்தாலோசித்தனர். குலோத்துங்க சோழர் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''விஷ அம்புகள் பட்டாலும் உடலில் பாயாத கவசங் களை அணிந்து ஒரு சில வீரர்களாவது துணிந்துக் கோட்டை மதிலின் மீது ஏறுவதற்கு நாம் வழி செய்தால் பிறகு கவலையில்லை'' என்று அரசர் சொன்னார்.

ஆக அன்றைய பொழுதுவிடியும்வரை அவர்களுடைய மந்திராலோசனை முடியவில்லை. என்ன செய்வது என்று புரியாமலும் கோட்டையைப் பிடிக்க முடியாமல் பின் வாங்கிவிட்டோமே என்ற கவலையிலும் உறக்கம் வராமல் இருந்தபோது, வைகறை வேளையை அறிவிக்கும் பூபாளம் இசைத்து அரசரைத் துயில் எழுப்பவரும் இசைக் கலைஞர் களின் வரவு கண்ட பிறகுதான் பொழுது விடிந்துவிட்டது என்று அரசர் தெரிந்து கொண்டார். அவர் தம் கவலையை மறப்பதற்காக தன்னுடன் அழைத்து வந்து இருந்த புலவர்களை அழைத்துப் பழம் பாடல்



களைப் பாடி தக்க நயம் பொருந்திய உரையை எடுத்துச் சொல்லச் சொன்னார். இராமாயணத்திலிருந்து கம்பர் எழுதிய பாடல்கள் சிலவற்றை எடுத்துக் கூறி ஒரு புலவர் அழகான குரலோடு உரை கூற முன் வந்தார். குலோத் துங்க சோழருக்கு இராமாயண பாடலைக் கேட்டவுடன் ஒரு புதிய உற்சாகம் எழுந்தது.

வஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றாமல் விடுவதில்லை என்று உறுதி செய்து அதற்குத் தன்னுடைய பலம் மட்டும் இல்லாமல் இறைவனுடைய ஆதரவும் துணையும் இருந் தால் தான் வெற்றி அடையமுடியும் என்று அவருக்குத் தோன்றிவிட்டது. அதனால் மனத்திற்குள்ளேயே கங்கை கொண்ட சோழீசரை நினைத்துத் தனக்குத் தக்க வெற்றி யைத் தருமாறு வேண்டிக் கொண்டார். அரசருடைய கவலையைப் போக்க வழி தெரியாமல் புலவர்கள் பல பாடல்களை பாடினர். அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் போது, ''படை வீரர்களை உற்சாகப் படுத்துவதற்கு நாம் தகுந்த நடனப்பெண்களை அழைத்து வர மறந்து விட்டோம்'' என்று குலோத்துங்க சோழர் கூறினார்.

''படை வீரர்களும் உற்சாகத்துடன் இருந்தால்தான் நாம் எளிதில் கோட்டையைப் பிடிக்கமுடியும். அதனால் அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுவதற்கான செயலை நாம் உடனே செய்யவேண்டும்'' என்ற கருத்துத் தெரிவித் தார்.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அனுப்பி நடனப் பெண்களை அழைத்து வருமாறு முடிவு செய்யப்பட்டது.

# 11

வெளியே சோழ வீரர்கள் சூழ்ந்துக் கொண்டிருந்த சமயத்தில் வஞ்சி நகர மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை. கோட்டைத் தாக்குதலையும் படையெடுப்பையும் பல ஆண்டுகளாக அறியாதவர்கள். தங்கள் நாட்டிற்கு எந்த விதமான படையெடுப்பும் எதிர்ப்பும் வராது என்ற எண்ணத்தில் தங்களது வாழ்நாளை ஓட்டிக் கொண்டிருப்பவர்கள். அண்மைக் காலத்தில் சோழ நாட்டிலிருந்து வந்த ஒரு பெண்ணால் பெரிய பகை மூளப் போகிறது என்ற பேச்சு நகர முழுவதிலும் பரவியிருந்தது.

மயில்விழியைக் கோயிலிலே பார்க்கும் சிலர் 'இவளால் என்ன அனர்த்தம் வரப் போகிறதோ' என்று கவலை கொள்வார்கள்.

ஆனால் அவளது அழகிய நடனத்தில் மயங்கியும் அரசர்க்கு மிகவும் வேண்டியவள் என்ற எண்ணத்தினாலும் எதும் வாய் திறவாமல் அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் உண்மையாகவே படைகள் சூழ்ந்து விட்டன என்று கேள்விப்பட்ட மக்கள் ஒருவரோடு ஒருவர் மெல்ல பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

''குலோத்துங்கன் நமது கோட்டையை மிகவும் எளிதில் பிடித்துவிடலாம் என்று எண்ணி வந்தான். நன்றாக மூக்குடைப்பட்டுப் போய்விட்டான்'' என்று ஒருவர் கூறினார். குலோத்துங்கன் தோற்று ஓடுவது உறுதி என்று மற்றொருவர் மிக உற்சாகத்துடன் கூறினார்.

கும்பல் கும்பலாகப் பேசிக் கொண்டிருந்தவர்களிடமிருந்து பலவாறுசெய்திகள் வெளிப்பட்டன. ''அதெப்படி





சொல்கிறாய் தம்பி! பாண்டியர்களையே நடுநடுங்க அடித்து விரட்டியவராயிற்றே குலோத்துங்கன். தனது பெயருடைய பாட்டனார், முப்பாட்டனார்களான முதல் இரண்டு குலோத்துங்கரையும்விட இந்தக் குலோத்துங்கன் மிகவும் பலம் பொருந்தியவன். இவனைப் பயிற்றுவித்தவர் பெரும் புலவர் ஒட்டக்கூத்தர். அவர் இவனுக்கு எல்லாவிதக் கலைகளையும் சொல்லிக் கொடுத்து இருக்கிறார். அத்துடன் மிக கோபத்துடனும், வெஞ்சினத்துடனும் படையெடுத்து வந்திருக்கிறான் சோழன். இரத்த ருசி கண்ட புலி ஒரு நாளும் சும்மா விடாது என்பார்கள்; வஞ்சிக் கோட்டையை அவன் கைப்பற்றாமல் விடமாட்டான். நமது வீரர்கள் சோழ வீரர்கள் மீது விஷ அம்புகளை வீசியதனால் அவன் மிகக் கோபங் கொண்டிருக்கிறான்'' என்று ஒரு பெரியவர், அனுபவம் மிக்கவர் கூறினார். அவர் கூறியவுடன் அவருடைய பேச்சைக் கேட்டு அனைவருக்கும் ஆத்திரமேற்பட்டது.

''என்ன சொல்லிவிட்டீர்கள் பெரியவரே? நமது பலத்தை மிகக் குறைவாக மதிப்பிடுகிறீர்களா? உங்கள் காலம் என்று நினைத்து விட்டீர்களா? நாங்கள் இளையவர்கள். வேற்று அரசர்களுடைய காலடியைக் கோட்டைக்குள்ளே எடுத்து வைக்க அனுமதிக்க மாட்டோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? எங்களுடைய கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் சோழ அரசனின் ஒரு சிறு பணியாள்கூட வஞ்சி மண்ணில் காலை எடுத்துவைக்க அனுமதிக்க மாட்டோம்'' என்று வீரமுழக்கம் செய்தான் ஓர் இளைஞன்.

முதியவர் அதற்குமேல் பேசவில்லை. அவர்களுடன் பேசினால் எதுவும் எடுபடாது என்பது அவருக்குத் தெரியும்.

முதல் நாள் குலோத்துங்கன் தோற்று ஓடிப்போனதாக வீரசோமன் மனப்பால் குடித்து மகிழ்ச்சியுடன்

இருப்பதைக் கற்றறிந்தவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. சோழர் தோற்று ஓடியதாக நாம் கொள்ளக்கூடாது. தாக்க முயன்றான்; முடியவில்லை. பின்வாங்கி ஓடிவிட்டான். அமராவதி ஆற்றின் அக்கரையிலே அவர்கள் பாடிவீடு அமைத்துத் தங்கியிருக்கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி ஓடியிருந்தால் தோற்றோடிவிட்டார் என்று நாம் சொல்லலாம். அவர்களைப் பின்தொடர்ந்து நாம் தாக்கி, அவர்கள் ஓடி இருந்தால் தோற்றோடிவிட்டார் என்று சொல்லலாம். அவர்கள் சற்று ஓய்வு எடுத்துக் காத்திருக்கிறார்கள். புதுபலம் பெற விரும்புகிறார்கள். பெரும் திட்டம் தீட்டுகிறார்கள். எந்தக் கணமும் அவர்கள் மிகவும் ஆக்ரோஷத்துடன் நமது கோட்டை மீது பாய்ந்து விடுவார்கள்'' என்று வீரசோமனுக்கு அவர்கள் யோசனை சொன்னார்கள். வீரசோமன் சற்று நேரம் சிந்தித்தார்.

''சோழர்கள் படைப்பலம் எந்த நிலையிலிருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார் சேர மன்னர். கூடியிருந்தவர்கள் உடனடியாக மறுமொழி கூறவில்லை.

''இங்கிருந்து நமது ஒற்றர்களை அனுப்பினால் அவர்கள் ஒரு வேளை சோழர்களிடம் சிக்குண்டு விட்டால் பெரிய ஆபத்து தான். அல்லது நம் கோட்டைக்கு வெளியே செல்ல எத்தனிக்கும் பொழுது, கண்காணித்துக் கொண்டிருக்கும் சோழர்கள் அந்த வழியாக நம்மீது தாக்குதலை நடத்த முயலலாம்'' என்றும் சொன்னார்கள். அவர்கள் சொல்வது சரி எனத் தோன்றியது. அதனால் வீரசோமன் மிகக் கவனமாகத் திட்டத்தைத் தயாரிக்க விரும்பினான்.

இரவு கடைசி ஜாம பூசையை முடித்து கொண்டு, கோயில் பிரசாதத்தைக் கொடுப்பதற்காக மயில்விழி அரசரைக் காண வந்திருந்தாள். நாள்தோறும் அவள் பிரசாதத்தைக் கொண்டு கொடுப்பதில்லை என்றாலும்,



இந்தப் போர் தன்னால் நிகழ்ந்திருக்கிறது என்று மக்கள் பரவலாகப் பேசுவதைக் கேட்டுத் தன் கவலையைத் தெரிவிப்பதற்காக அவள் அரசரை அணுகினாள். அவள் வந்தவுடன் வீரசோமனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

மரகதம் தன் வீட்டிற்கு மனநிம்மதியுடன் சென்றாள். குமாரவேலனுடன் அவள் பேசியதனின்று மயில்விழியைப் பற்றி அறிந்து கொண்டாள். குமாரவேலனுடைய உதவியுடன் வஞ்சிக் கோட்டையைச் சோழமன்னர் கைப்பற்றப் போகிறார் என்ற மகிழ்ச்சியுடனிருந்தாள்.

குமாரவேலன் துணிவுடையவன். தான் வீட்டிற்கு வந்த பிறகு, குமாரவேலனுடன் பேசியவற்றை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்திக் கொண்டாள்.

''தம்பி! மயில்விழியை மயக்கி அழைத்துச் சென்றவனை வஞ்சியில் சந்தித்தாயா? அவன் அவளைப் பிரியமுடன் நடத்துகிறான் என்றே தெரிகிறது. முன்பை விட மினுமினுப்புடன் ஒரு பெண் விளங்குகிறாள் என்றால் அவள் மகிழ்வுடனிருக்கிறாள் என்றுதான் அர்த்தம், ஹும். அப்புறம் சொல்லு'' என்று மரகதம் குமாரவேலனிடம் செய்தியைக் கேட்பதில் மிகுந்த ஆவல் கொண்டாள்.

''அக்கா மயில்விழியை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுடைய வீட்டில் அவளைச் சந்தித்தேன். என்னை அவள் மறக்கவில்லை. பாரிஜாத மலரைத் தன்னால் மறக்க முடியுமா என்று சொன்னாள்'' என்ற போது மரகதம் சற்றுக் கோபத்தை வரவழைத்துக் கொண்டு, மயில்விழி இந்த நாட்டைவிட்டு வெளியேற நீயும் தான் காரணம், அவளுடைய காதலுக்கு நீ தூது சென்றிருக்கிறாய். அவர்கள் இருவரும் சந்திக்க நீ உதவியிருக்கிறாய்'' என்றாள்.

''ஓர் தூய காதல் வளர்வதற்கு நான் உதவினேன். பறவைகள் பறந்துச் சென்றுவிடுமென்பது எனக்குத்

தெரியுமா? மயில்விழி அந்த நன்றியை மறக்கவில்லை. கங்காபுரியையும், தன்னை வளர்த்து உருவாக்கிய மரகதம்மாளையும் தன்னால் மறக்க முடியாது என்று கூறினாள். அவள் ஒரு வார்த்தை சொன்னாள்; அது என்னைப் பெரிதும் கலங்கச் செய்து விட்டது."

'மரகதம்மாள் வயிற்றில் நான் பிறக்கவில்லையே தவிர, தாயினும் சாலப் பரிந்து என்னைக் காப்பாற்றிக் கலையில் சிறக்கச் செய்த தெய்வம் அவர்கள்' என்றாள். நான் உடனே அவளைக் கேட்டேன். 'கலைத் தாய் என்று கூறுகிறாயே! அந்தத் தாய் கால் ஊனமுற்று மனவேதனையுடன் ஓர் நடைப்பிணம் போல் உலவி வருகிறாள்' என்றேன். மயில்விழி துடிதுடித்து விட்டாள்; அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவளை நான் கேட்டேன்: 'நீ உன் வளர்ப்புத் தாயிடம் அன்பாக இருப்பது மெய்யானால் அம்மாவுக்கு ஏற்பட்ட சீர்குலைவிற்கு வேதனைப்படுவது சத்தியமானால் நான் சொல்வதுபோல் செய்வாயா?'

குமாரவேலன் இவ்வாறு கூறிச் சற்று நிறுத்தியவுடன் மரகதம் ஆவலுடன், "அப்படியா, தம்பி! நீ அப்படிக் கேட்டாயா? அவள் என்ன சொன்னாள்? தம்பி, பிறகு என்ன நேர்ந்தது தம்பி" என்று கேட்டாள்.

"மறுநாள் தனது முடிவைச் சொல்கிறேன்" என்று சொன்னாள். அது நியாயம்தானே; திடீரென்றுபுறப்பட்டு வருமாறு நான் அவளைக் கேட்டது நியாயமில்லைதான். எனக்கு ஒரு ஆசை; சோழ நாட்டினின்று ஒற்றர்களாக வந்தவர்கள் திரும்பும்போது மயில்விழியையும் அழைத்துக் கொண்டு வந்தால், அரசர் மிகவும் பாராட்டுவாரே என்று எண்ணினேன். எங்களுக்கும் பரிசு கிடைப்பதோடு, நாட்டிற்கும் நல்லது நடந்ததாக இருக்கட்டுமே என்று நினைத்தேன். மயில்விழி திரும்பி வந்துவிட்டால் சோழ அரசர் கருரின் மீது படை எடுப்பதை நிறுத்தி விடுவா



ரல்லவா!"—குமாரவேலன் சற்றுப் பேச்சை நிறுத்தினான். மரகதத்திற்கு ஆவல் அதிகமாகியது "மறுநாள் நீ அவள் வீடு சென்றாயா?" என்று கேட்டாள்.

"நான் செல்லவில்லை. சேரநாட்டு வீரர்கள் எங்களைப் பிடித்துச் சேரமன்னர் எதிரே நிறுத்தி விட்டனர். எங்களைச் சிறையிலடைக்குமாறு சேரமன்னர் உத்தரவிட்டார். சபையில் வேதனைத் தரக்கூடிய நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது. மயில்விழியின் பிள்ளைப் பிராய நண்பர் என்று நான் சேரமன்னரிடம் தெரிவித்திருந்தேன். அந்த உண்மையை அறிய மயில்விழியை அழைத்து வரச் செய்து, நான் கூறியது உண்மைதானா என்று கேட்டார். என்னை யாரென்று தெரியாது என்று மயில்விழி அப்பட்டமான பொய்யைக் கூறிவிட்டாள். என்னால் மயில்விழியைப் புரிந்து கொள்ள முடியவில்லை—என்று சொன்னேனே அதற்குத்தான்" என்றான்.

மரகதம் பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள். "பிறகு, சிறையினின்று எப்படித் தப்பி வந்தாய்? புலிக் குகைக்குள் சென்று மீண்டது போலத்தான்..." என்று கவலையுடன் கேட்டாள் மரகதம்.

"அக்கா! உளவு பார்க்க வந்த ஒற்றருக்குக் கடுந் தண்டனை தரலாம். எனக்கு என்ன தண்டனை விதிக்கப் போகிறாரோ என்ற கவலையுடன் இருந்தேன். நடுநிசி, மயில்விழி சிறைச் சாலைக்கு வந்து மறுபேச்சுப் பேசாமல் தன்னுடன் வருமாறு என்னை அழைத்து, கோட்டைக்கு வெளியே கொண்டு விட்டுவிட்டாள். என்னைத் தப்பிப் போகுமாறு கூறினாள்" என்றவுடன் மரகதம் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"மயில்விழி நல்லவள் என்று எனக்குத்தெரியும். ஏதோ ஒரு மாய சக்தியின் பிடியால் அவள் தாக்கப்பட்டுச் சென்றிருக்கிறாள். அந்தச் சக்தியினின்று விடுபட அவளால் முடியவில்லை. சோழ நாட்டின் மீதும், கங்கை

கொண்ட சோழீசர் மீதும் அவனுக்குள்ள பற்று—பாசம் குறையாமல் இருக்கிறது என்பதைப் புலப்படுத்திக் கொண்டுவிட்டாள்?" என்று கூறும்போது உணர்ச்சி வயப்பட்டாள். விழிகளில் மெல்ல நீர் ததும்பியது. அதைத் துடைத்துக் கொண்டு "தம்பி! அடுத்து இனி என்ன நேரப்போகிறது? போர் உறுதி தானே?" என்று கேட்டாள்.

"ஆமாம் அக்கா! நடந்த செய்தியைச் சொன்னவுடன் சோழ அரசர் கோபமாகச் சிரித்தார். "அடமடையா! சேரமன்னரிடம் சிக்கித் திரும்பி வந்த உனக்குக் கசையடி தண்டனை கொடுக்க வேண்டும். அவ்வளவு கவனமில்லாமல் திட்டமிடாமல் நீ இயங்கியிருக்கிறாய். என்றாலும் கோட்டைக்கு வெளியே வர ஓர் இரகசிய வழி இருப்பதை நீ அறிந்து வந்திருப்பதால் நீ உயிர் தப்பினாய். இன்னும் சில நாட்களில் நமது படைகள் வஞ்சிக்கோட்டையைச் சூழப்போகின்றன. அப்போது உன் உதவி நமக்கு மிகவும் தேவை என்று கூறினர். அக்கா! என்ன நேரப் போகிறதோ புரியவில்லை" என்று கவலையுடன் சொன்னார் குமாரவேலன்.

இனி நந்தவனத்தில் உட்கார்ந்திருப்பதில் பலனில்லை என்று மரகதமும் அங்கிருந்துப் புறப்பட்டாள்.

மரகதம் சென்ற பிறகு தன் வீடுசெல்ல முற்பட்டு நந்தவனத்தின் மற்றொரு வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான், குமாரவேலன். அப்போதுதான் அவன் சேர நாட்டு ஒற்றர்களால் சிறைப்படுத்தப்பட்டான்.

வஞ்சிநகரின் மீது படை எடுத்துச் செல்ல சோழர்ப் படைகள் புறப்படுவதற்கு முன்பே அவனுக்குக் கிடைத்த செய்தி அவனை மயக்கமடையச் செய்தது.



குமாரவேலன் வஞ்சி நகரில் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறான்; இந்த முறை மயில்விழி அவனுக்கு உதவுவாளா?

மரகதம் போர்க்களச் செய்தியை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

## 12

அமராவதி ஆற்றின் மறுகரையில் சோழர்ப் படைகள் பாடி வீடமைத்துத் தங்கியிருந்தனர். கோட்டைக்கு வெளியே செல்ல கரூர் மக்கள் ஒருவரும் முன்வரவில்லை. கோட்டையின் இரகசிய வழிகளுக்குக் கடுமையான காவலை ஏற்படுத்தியிருந்தார்கள்.

கோட்டையைச் சுற்றியிருந்த கிராம மக்கள் உயிருக்கு அஞ்சி மேற்கிலும் வடக்கிலும் காவிரிக்கரை ஓரமாக ஓடி ஒளிந்து கொண்டனர்.

மக்கள் விட்டுச் சென்ற களஞ்சியங்களிலிருந்து தானியங்களை வண்டிகளில் பாடி வீட்டிற்குக் கொண்டு சேர்த்தனர்.

பல நாட்கள் போர் நடப்பதற்கான அடித்தளம் போடப்படுகிறது என்ற பரவலான உணர்வு இருதரப்பிலும் இருந்தது.

சோழப் படைகளின் பலத்தை அறியும் முயற்சியில் வீரசோமன் ஈடுபட்டிருந்தார். எண்ணிக்கையிலும் பலத்திலும் சேரர்ப் படைகள், சோழர்ப் படைகளுக்கு ஒரு நாளும் ஈடாகாது என்பது அவருக்குத் தெரியும். அதனால், எவ்வாறேனும் சோழர் முகாமிற்குள் நுழைந்து அறிந்து வருவதற்குத் தகுதியானவரைத் தேடலானார்.

மயில்விழி—

வீரசோமன் மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. மயில்விழியின் ஆசைபக்தியை அவர் எள்ளளவும் சந்தேகிக்க வில்லை.

குமாரவேலனைச் சபை மண்டபத்தில் விசாரிக்க அழைத்து வரும் முன்பே, மயில்விழியிடம், குமார வேலைத் தெரியுமா என்று சபையில் கேட்டால் தெரியாது என்று சொல்லவேண்டும் என்று சொல்லவேண்டும் என்ற கண்டிப்பான கட்டளை அவளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதைப் போலவே அவள் தெரிவித்தாள். மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசுவது அவளுக்கு வேதனையாகத் தானிருந்தது. குமாரவேலனுக்குத் தண்டனையைத் தரக் காரணமாக இருக்கிறோமே என்று வருந்தினாள். துணி வுடன் அவள் ஒரு காரியம் செய்தாள்.

குமாரவேலன் அடைக்கப்பட்டிருந்த கொட்டடிக்குச் சென்றாள். அதன் தலைவனை அவள் அறிவாள். அவனிடம் சொல்லிவிட்டு, சிறைக்கூடத்திற்குச் சென்று, குமார வேலனை எழுப்பி கோட்டைக்கு வெளியே செல்லும் வழி யில் கொண்டு சேர்த்தாள்.

தான் செய்தது பெருந் தவறென்று அவள் அறிவாள். சேர மன்னரைச் சந்திக்கும்போது தக்க முறையில் சமா தானப்படுத்தலாம் என்ற துணிவும் அவளுக்கிருந்தது.

ஆனால், மீண்டும் குமாரவேலன் சிறைப்படுத்தப் பட்டான் என்பதையும் சோழர்ப் படைகள் வஞ்சியைச் சூழ்ந்துவிட்டன என்பதையும் அறிந்த மயில்விழி, பெரிய விபரீதம் நடைபெறப் போகிறது என்பதை உணர்ந் தாள்.

'வஞ்சிக்கோட்டைக்கு ஏற்படப் போகும் ஆபத்திற்கு நான் காரணம் என்று நகரத்திலுள்ளவர்கள் பேசிக்கொள் கிறார்களே' என்று வருத்தம் நிறைந்த குரலில் மன்ன ரிடம் கூறினாள் மயில்விழி.



1858

வீரசோமன் சிரித்தார். "அப்படி [illegible] சொல்கிறார்கள். சோழ நாட்டிலிருந்து நீ வந்த [illegible] சோழர்களுடன் நமக்குப் பகை [illegible]" வீரசோமன் கூறிவிட்டு, அவளை நோக்கினார்.

மன்னரும் அப்படித்தான் நினைக்கிறார். மயில்விழி யின் விழிகளில் நீர் நிறைந்தது.

"என்னை மீண்டும் சோழ நாட்டுக்கே அனுப்பி விடுங்கள். என் பொருட்டு வஞ்சி மக்கள் உயிரிழக்க வேண்டாம்" என்று விம்மலுக்கிடையே கூறினாள்.

வீரசோமன் பெரிதாகச் சிரித்தார். "வஞ்சி மக்கள் மட்டுமா உயிரிழப்பர்; சோழ வீரர்கள் பலரும் மேலுலகம் போய்ச் சேர்ந்து விடுவார்கள்" என்றார்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"நான் செய்த மாபெரும் பிழைக்கு நான் தண்டனை அனுபவித்துத்தானாக வேண்டும்" என்று மீண்டும் நெஞ்சு தழுதழுக்கக் கூறினாள் மயில்விழி.

"மாபெரும் பிழை என்ன செய்தாய் மயில்விழி?" என்று சேரமன்னர் கேட்டார்.

"ஒரு பிழை மட்டுமா? பல பிழைகள்! கங்கை கொண்ட சோழபுரத்தில் பதியிலாதார் நோன்பினை ஏற்று இருந்த நான், ஓர் அழகனின் தோள்களைக் கண்டு ஆசைப்பட்டேன். இறைவனிடம் மட்டுமே சிந்தையைச் செலுத்த வேண்டிய நான் மனிதனிடம் மனத்தைப் பறி கொடுத்தேன்" என்றாள் மயில்விழி.

"ஓ! அதனால் என்ன தவறு? மனத்தை இயற்கைக்கு விரோதமாக அடக்கக்கூடாது. உங்கள் சோழ நாட்டில் பெண்ணை இவ்வாறு அடிமைப்படுத்தியதால்தான் பெண் சாபத்தை நாடு பெற்றிருக்கிறது."

மன்னர் இவ்வாறு கூறியவுடன், மயில்விழி விழிநீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, "பெண்ணடிமை என்று அர்த்தப் பொருளன்று மன்னவா! இறைவனிடம் மனத்தைப் பறிகொடுக்கப் புலனடக்கம் தேவை...!" என்று மயில்விழி கூறும்போது, வீரசோமன் கேலிச் சிரிப்புடன், "இப்படி நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் புலனடக்கம் கொள்ள முற்பட்டால் என்னாவது? அதிலும் பெண்கள் சந்நியாசினியாக மாறினால் ஆண்கள் கதி?" என்றார்.

"அரசரவர்களே! என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களிடம் நான் வாதிடுவது முறையன்று. என்றாலும், பெண்கள் தங்கள் சித்தத்தை ஓரிடத்தில் செலுத்துவதால் மற்றவர்களுக்கு என்ன நஷ்டம்? பாட்டும், பரதமும், இறைவன் முன்பு நிகழ்த்தும்போது ஏற்படும் சுகமிருக்கிறதே, ஆகா! அதை விவரிக்க முடியாது..." என்றாள்.

"சுகமா!"—மன்னர் கண் சிமிட்டினார். "அந்தப் பரம சுகத்தைவிட்டு ஆண் சுகத்தை நாடி நீ ஏன் வந்தாய்?"

மயில்விழியின் முகத்தில் மெல்லிய நாணக் கோடுகள் பரவின.

"நான் செய்த பிழை என்று முன்பே சொன்னேனே; இரண்டாவது பிழை, மோகம் என் கண்களை மறைத்து விட்டது. நான் செய்த பிழையால் என் தாய்க்குப் பெரும் இடர் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. என்னை நம்பியிருந்த என் தாய், தனக்குப் பிறகு தன்னிடத்தில் என்னை நியமிக்கவிருந்தார்கள். அந்த நல்ல வாய்ப்பை இழந்தேன். என் காதலருடன், கங்கைகொண்ட சோழபுரத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன். என் உயிருக்கு உயிரான தாயையும், தோன்றாத் துணையிருக்கும் சோழீசனையும் மறந்துப் புறப்பட்டேன். அதுவும் பிழைதான்."



சேர மன்னர் குறுக்கிட்டு, "வஞ்சி நகருக்குச் செல்கிறோமென்று உனக்கு முதலில் தெரியாதா?" என்று கேட்டார்.

மயில்விழி தலையை அசைத்தாள்.

"வஞ்சி நகருக்குப் போகப் போகிறோம் என்று அறிந்திருந்தால் நீ உன் காதலரைத் துறந்திருப்பாய் அப்படித் தானே?" சேர மன்னர் கேட்டார்.

"இல்லை, இல்லை. எனக்கு வஞ்சி என்றும், மதுரை என்றும், காஞ்சி என்றும் வேற்றுமை கிடையாது. சேர மன்னருக்கும், சோழ மன்னருக்கும் உள்ள விரோதமும் எனக்குத் தெரியாது" என்றாள்.

"ஓ!" என்று பெரிதாகச் சிரித்த அவர் "அப்பா! காதல் உன் கண்களை எப்படி மறைத்துவிட்டது. ஹூம்! எனக்குச் சோழ நாட்டவர் மீது தனிப்பட்ட பகை கிடையாது. குலோத்துங்கர் தமது படை பலத்தால் செருக்குற்றிருக்கிறார். பாண்டியர்களை விழுங்கிய போதே சேரர்கள் என்று ஒருவர் இருக்கக்கூடாது என்று அவர் நினைத்தார். அவருடைய கர்வத்தை அடக்க வேண்டும். அவருடைய கொற்றத்தை அடக்கவேண்டும். அவருக்குள்ள மமதை சொல்லி முடியாது. தனக்கு நிகராக ஒருவரும் வாழக்கூடாது என்ற மனப்பித்துப் பிடித்தவர்.

"தன்னுடைய நாட்டில் தான் சிற்பக் கூடங்கள் இருக்கின்றன. தன்னுடைய நாட்டில் தான் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. கோயில்களிலே சிற்ப அற்புதங்களைத்தன் முன்னோர்கள் செதுக்கி வைத்திருக்கின்றனர். தன்னுடைய நாட்டில்தான் சிற்பமும், சித்திரமும், நாட்டியமும் வளர்கின்றன என்ற மமதை. தன்னுடைய நாட்டிலுள்ள வளப்பத்தை வைத்துக் கொண்டு, தனக்குள்ள செல்வத்தையும், படைப் பலத்தையும், அடங்கி

வாழும் சிற்றரசர்களின் பக்கத் துணையையும் வைத்துக் கொண்டு அவர் தன் அருகே உள்ள நாடுகள் தனக்கு நிகராக வாழக்கூடாது என்ற எண்ணம் படைத்தவர். அதனால் தான் ஒரு காரணமுமில்லாமல் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்துச் சென்று மக்களை அழித்து பாண்டிய மகுடத்தை அணிந்து, அரியணையில் அமர்ந்து தன் போர் வெறியைத் தணித்துக் கொண்டவர். ஆனால் அவர் போர் வெறி தணியவில்லை என்பது இப்போது தெரிந்துவிட்டது.

''நீண்ட நாட்களாக அவருக்கு வஞ்சியின் மீது ஒரு கண். சேரர்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்துகிறார்கள். சேரர்கள் புகழ் சிறிது சிறிதாகப் பரவி வருகிறது என்ற எண்ணம் அவர் மனத்தில் பொறாமைத் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்துவிட்டது. அவர் நம்மிடம் திரைப் பணத்தைப் பெற்று, நம்மை அவருக்கு அடங்கிய ஓர் சிற்றரசர் என்று நினைத்துக் கொண்ட போது கூட நாம் அவருடைய எண்ணத்தை எதிர்க்கவில்லை. திரைப் பணத்தை ஆண்டு தோறும் பெற்று விடுவார். நான் காலம் கனியட்டும் என்று காத்திருந்தேன். பலம் மிக்க சோழ நாட்டோடு மோதுவதால் நமக்குத்தான் இழப்பு அதிகம் என்று நான் என்னையே அடக்கிக் கொண்டேன்.

''ஆனால், என் மனதுக்குள்ளே நீண்ட நாட்களாக ஓர் புழுக்கம் உண்டு. அவருடைய செருக்கை எப்படியாவது ஒடுக்க வேண்டும்; என்று துடித்துக் கொண்டிருந்தேன். தன் நாட்டில்தான் கலை இருக்கிறது; வளர்கிறது என்று கர்வங் கொண்டிருந்தாரே அதை எப்படியாவது ஒழிக்கவேண்டும் என்று மனதில் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். அதனால்தான் மேற்குக் கடற்கரைப்பட்டினங்களிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக வில்லவர்களை வரவழைத்து ஆங்காங்கே குடியமர்த்தினேன்.

''இவை எல்லாம் போர்முறை இரகசியம். இவற்றை எனது அமைச்சர்கள் ஓரிருவரே அறிவர். இந்த இரகசியங்



களை உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை; ஏன் சொல்கிறேன் என்றால், சோழர்களின் எதிர்ப்பை, படை எடுப்பை நான் முன்பாகவே எதிர்பார்த்தேன். முன்பாகவே திட்டமிட்டு, எதிர்ப்பைத் தாங்கி நிற்கும் வலிமையைச் சேகரித்துக் கொண்ட பிறகுதான், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கலைஞர்களைக் கலைப்பதற்கான திட்டத்தைத் தீட்டினேன். சேர நாட்டு வேவுக்காரர்கள் உளவறிய சோழ நாட்டிற்குள்ளே பரவலாகச்சென்று கலந்தனர். சோழ நாட்டு ஒற்றர்படை மிகச் சிறந்தது என்றாலும், சேர நாட்டு ஒற்றர்கள் சோழ நாட்டிற்குள் ஊடுருவுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை, கனவிலும் நினைக்கவில்லை.

''நான் ஒருமுறை கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலுக்குச் சென்றிருந்தேன். மாறுவேடமில்லாமல் நேரே சென்றிருந்தால்கூட எனக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்திருக்கும். ஆனால், மிக நுணுக்கமாக நான் அந்த நகரத்தை ஆராய்ந்து, கலை வளர்ச்சியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலே நான் சென்றிருந்ததால் என்னை அடையாளம் தெரிவித்துக் கொள்ள விரும்பவில்லை,''

''நான் கங்கை கொண்ட சோழீசர் கோயிலைப் பார்த்தேன். அந்தக் கோயிலில் உள்ள தெய்வீகச் சிற்பங்களைக் கண்டு நான் பெருமூச்சுவிட்டேன். இப்படியொரு கோயிலைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுதே எழுந்தது. அந்த எண்ணத்தின் அடித்தளத்தில்தான் நான் அந்தக் கோயிலில் நடைபெறும் ஆறுவேளை பூசையைப் பார்த்தேன். பூசை வேளைகளில் வீணை முதலான கருவிகள் ஒலிப்பதையும், பதிகங்கள் பாடப்படுவதையும், தொடர்ந்து நடன மாதர்கள் ஆடுவதையும் கண்டேன். சந்தியா வேளையில் நடைபெற்ற சிறப்புப் பூசையைக் கண்டேன். சந்தியாநிருத்யம் பற்றிப் பலர் புகழ்ந்துப் பேசக் கேட்டிருக்கிறேன்.

''உன் வளர்ப்புத் தாய் என்று நீ சொன்னாயே மரகதத்தின் சந்தியா நிருத்யத்தைக் கண்டு நான் பெருமூச்சு விட்டேன். என் மேனி சிலிர்த்தது. இப்படியொரு அற்புதமான நடனத்தை ஆடக்கூடிய நாட்டிய மணிகளைச் சோழநாடு பெற்றிருக்கிறதே என்று உள்ளத்தில் ஒருவிதப் பொறாமையை வளர்த்துக் கொண்டேன். அப்படிப் பொறாமையை வளர்த்தால்தான், நம் நாடும் அதுபோன்று முன்னேற வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். அவ்வாறு எண்ணம் உதித்தால்தான் அத்தகைய முன்னேற்றத்தை அடைவதற்கு உள்ள தடையை நீக்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும்.

''முக்கியமாக சந்தியா நிருத்யத்தை வஞ்சிநகரக் கோயிலில் ஆடச்செய்யவேண்டும். மற்றும் நடனமணிகள் சிலரையாவது வஞ்சி நகருக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று உறுதி பூண்டேன். ஆனால்,கேட்டறிந்ததில் சந்தியா நிருத்யம் ஆடத் தெரிந்தவர்கள் மரகதமும், நீயும்தான் என அறிந்தேன். மரகதத்தை அழைத்துச் செல்வது என்பது இயலாத செயல் என்பதையும் தெரிந்து கொண்டேன். அதற்கு அடுத்து, சந்தியா நிருத்யம் ஆட வல்லவர் நீ தான் என்பதை அறிந்து. உன்னை எப்படியாவது வஞ்சிநகரத்துக்கு வரச் செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

''உன்னை வஞ்சி நகரத்திற்கு வரச்செய்யும் திட்டத்தை நான்தான் திட்டினேன். உன்னைக் காதலிக்குமாறு அழகிய வாலிபனை ஏற்பாடு செய்தேன்'' மன்னர் இவ்வாறு சொல்லி வரும்போது, மயில்விழி 'ஆ' என்று கூவிவிட்டாள்.

சேரமன்னர் கேட்டார்: ''ஆ'' என்று வியப்புக் குரல் எழுப்புகிறாயே!'' என்று கூறி மெல்ல நகைத்து, ''மயில்விழி! உனக்கு வியப்பாக இருக்கலாம். சோழ மன்னரைப் போன்ற படைப்பலம், செல்வச் செழிப்பு எனக்கு இல்லாமலிருக்கலாம் ஆனால் நான் இப்பொழுது சொல்கிறேன், மயில்விழி! சோழ மன்னரின் கொற்றத்தைஅடக்குவதற்கு



போதுமான திறமை எனக்கிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு சில உதவி தேவை. நம் கோட்டையைச் சுற்றிச் சோழர்கள் சூழ்ந்து விட்டார்கள். முதல்நாள் தாக்குதலில் எதிர்பார்த்த வெற்றிஅவர்களுக்குக் கிடைக்கவில்லை. ''நம் வில்லவ வீரர்கள் அஞ்சா நெஞ்சினர்கள். எத்தகைய தியாகம் புரிவதற்கும் தயங்காதவர்கள். அவர்களுடைய தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சரமாரியாக அவர்கள் பொழிந்த அம்புகளின் வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல், கோட்டையைச் சூழ்ந்து கொண்ட சோழ வீரர்கள் பின் வாங்கி ஓடினர். பலர் உயிரிழந்து வீழ்ந்தனர். களத்தில் நேர்ந்த படைவீரர்கள் இழப்பைக் கண்டு அஞ்சிய சோழ வீரர்கள் உடனே பின்வாங்கி ஓடினர். அமராவதி ஆற்றையும் கடந்து பாடி வீடமைத்துக் கொண்டு தங்கியுள்ளனர். அவர்களுக்குப் பயம் சூழ்ந்து கொண்டது. நமது வீரர்களிடமிருந்து எந்த முறையில் தாக்குதல் வரும் என்று கணிக்க அவர்களால் முடியவில்லை அதற்கு மிகப் பெரிய காரணம் ஒன்றிருக்கிறது.

''உன்னிடம் இவற்றையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று நீ நினைக்கலாம். பிறகு புரிந்து கொள்வாய். நமது வில்லவர்கள் பயன்படுத்திய அம்புகளில் விஷம் தோய்க்கப்பட்டிருந்தது. அம்பு பட்டவுடனேயே வீரர்கள் இறந்துவிடுகிறார்கள். அந்த விஷ பயம் சோழர்களிடையே மிகுந்த கிலியை அளித்திருந்ததால் மீண்டும் கோட்டையை நெருங்கத் துணியவில்லை. வேறுவிதமான யுக்திகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் திட்டம் ஒன்றைத் தீட்டி விடுவார்கள். முன்பைவிட மிகஆக்ரோஷமாகத் தாக்குவார்கள்.

''அடிபட்ட வேங்கை நம்மைப் பழிவாங்காமல் போகாது. இரத்த ருசி கண்ட அந்தச் சோழப்புலி எப்படியாவது நம்மை 'ஹதா ஹதம்' செய்துவிடும் என்று எனக்குத் தெரியும். இதற்குள் அவர்கள் ஏராளமான படை வீரர்களைச் சேர்த்திருப்பார்கள். அவர்களைக்

கொண்டு மீண்டும் கோட்டையைத் தாக்க முற்படுவார்கள், இவற்றை எல்லாம் அறிந்துதான் தான் பொறுமையுடனும் மிகுந்த கவனத்துடனும் திட்டங்களை வகுத்துள்ளேன்.

''நம்மிடமுள்ள வீரர்கள் எண்ணிக்கை மிகக் குறைவுதான். ஆனால் நம்பிக்கை மிக்கவர், நாட்டுப்பற்று மிக்கவர்கள் ஆபத்துக் காலத்தில் அஞ்சாநெஞ்சத்துடன் போர் புரியக் கூடியவர்கள். கோட்டைக்குள்ளிருக்கும் வஞ்சி நகர மக்கள் நாட்டுப் பற்று மிக்கவர்கள். மாற்றாருக்கு அடிபணிய மாட்டார்கள். நீ அதை அறிந்து கொள்ள வேண்டும்.

''மயில்விழி! உன் உள்ளத்திற்குள்ளே சோழ நாட்டின் மீது பாசமும், பற்றும் உண்டு என்பது எனக்குத் தெரியும். அதற்கும் மேலாக உன் கை பிடித்த காதலன் மீது தணியாத அன்புப் பிணைப்பு உண்டென்று எனக்குத் தெரியும். அத்துடன் உன்னை வளர்த்தவளும், உனக்குக் குருவாக அமைந்தவருமான மரகதம்மாளிடம் மிக்க மரியாதை உனக்கு உண்டென்பதையும் நான் அறிவேன் உன்னால் அவர்களுக்கு ஏற்பட்ட அலப் பெயரை எப்படியாவது துடைக்க வேண்டும் என்ற எண்ணமும் உனக்கு இருப்பதும் எனக்குத் தெரியும். இவ்வளவும் அறிந்துந் தான், மனதில் கொண்டுதான் உன்னைக் கொண்டு சோழர்களை அழிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். என் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற உதவுவாயா'' என்று சேர அரசர் உணர்ச்சிகரமாகப் பேசி ஒரு கேள்வியைக் கேட்டவுடன் மயில்விழி உடல் சிலிர்க்க, கண்ணீர்ப் பொங்க அரசரின் காலடியில் வீழ்ந்தாள்.

அடக்கி வைத்திருந்த துக்கத்தை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. விம்மினாள், பிறகு கதறினாள்.

''அரசே கட்டளை இடுங்கள். சொல்லுங்கள்—என்ன செய்ய வேண்டும் என்று உத்தரவு விடுகிறீர்களோ அதைச் செய்யக் காத்திருக்கிறேன். இப்பொழுது புரிந்துவிட்டது' சோழ மன்னர் வஞ்சினம் கொண்டு நம்மை அழித்து



விடுவார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். முன்பே என்னைப் பற்றி மிக அலப்பெயர் நிலவுகிறது. நான் வந்ததனால்தான் வஞ்சிக் கோட்டைக்கு ஆபத்து நேர்ந்துவிட்டது என்று குற்றம் சாட்டுகிறார்கள். என் அழகைக் கண்டு மோகித்து, என்னை அடையத் துடித்த, அந்த ஆசை நிறைவேறாதவர்கள் பலர் என்னைப் பற்றித் தவறான கருத்துக்களைப் பரவ விடுகிறார்கள். என்னைத் தக்க சமயத்தில் வீழ்த்தவேண்டும் என்றஎண்ணமுடையவர்களும், நான் தங்களின் அதிகமான அபிமானம் பெற்றவளாக விளங்குவதால் என்மீது பொறாமை கொண்டவர்களுமாகச் சேர்ந்து, இந்தச் சமயம் பார்த்து என் குற்றங்களை அடுக்கடுக்காகச் சுமத்தி என்னை முச்சந்தியில் நிற்க வைத்துச் சாட்டையடி அடிக்க வேண்டும் என்று துடிதுடிக்கிறார்கள்.

''சேர மாமன்னரே! என் கலைமீது பற்றுக் கொண்டவரே! கட்டளையிடுங்கள்; நான் செய்ய வேண்டியதைச் சொல்லுங்கள், நான் நிறைவேற்றுகிறேன்'' என்று உணர்ச்சி மிகுதியாக மேற்கொண்டு பேச்சு வராமல், கண்ணீர் மாலைகள் கன்னத்தின் வழியே மார்புக் கச்சைகளை நனைப்பதைக்கூடப் பாராமல் நின்று கொண்டிருந்தாள்.

மயில்விழியின் உணர்ச்சி மிகுந்த, உள்ளத்தினின்று பொங்கிவந்த வார்த்தைகளைக் கேட்டு, சேர மன்னர் மெல்லிய முறுவலுடன், ''மயில்விழி, விழிநீரைத் துடைத்துக் கொள். உன்னைப் பற்றிப் பலர் தவறாக எடுத்துக் கூறினாலுங்கூட நான் நம்பவில்லை. நீ சிறைச் சாலையினின்று சோழ ஒற்றன் குமாரவேலனைத் தப்பிப் போகுமாறு செய்தாய். அதையும் நான் அறிவேன். நான் உன்னை அதைப்பற்றிக் கேட்கவில்லை. நீ செய்தது உன் வரையில் நியாயமானதுதான். உனக்குள்ள சேர நாட்டின் மீதுள்ள பற்றைச் சந்தேகிக்க இடமில்லை. அதேபோல நீ குருவாகக் கருதும் மரகதத்தின் மீதும் உனக்குப் பற்று...

அதனால் நீ, அந்தச் செயலைப் புரிந்தாய். நீ செய்த அந்தச் செயலில் ஓர் ஆபத்து இருந்ததை நீ உணரவில்லை. இரகசியப் பாதையின் வழியே நீ அவனைக் கோட்டைக்கு வெளியே அழைத்துச் சென்றாய். அப்படி ஒரு வழி இருப்பதை அவன் சோழர்களிடம் சொல்லிவிடப் போகிறானே என்ற கவலையினால்தான் நமது ஒற்றர்களைக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அனுப்பி, அவனை மீண்டும் வஞ்சிக்கோட்டைக்குக் கடத்தி வந்தார்கள்.

''என்னுடைய சக்தி என்னவென்பதை அந்த நிகழ்ச்சி ஒன்றிலிருந்தும் குலோத்துங்கன் அறிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் தன்னிடமுள்ள அளவு கடந்த படைப் பலத்தை வைத்துக் கொண்டு வஞ்சிக்கோட்டையை ஒரு நொடியில் தான் தூளாக்கிவிடலாம் என்ற மனப்பால் குடித்து அவன் பெரும் படைவீரர்களுடன் தாக்குலதற்காக வந்து சேர்ந்தான்.

''முதல் கட்டத்திலேயே தோல்வி கண்டான். அமராவதி ஆற்றைத் தாண்டி மறுகரையிலே தண்டிறங்கியிருக்கிறான். இழப்புப்போக சோழர்களிடம் எவ்வளவு படை வீரர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அதை அறிந்துகொள்ள வேண்டும் என்பது தான் இப்பொழுது என்னுடைய எண்ணம்.

''ஏனெனில் நம்முடைய திறமையாலும் போர் உத்தியாலும் அவர்களை முதல் கட்டத்தில் தோற்றோடச் செய்தோம். மறு கட்டத்தில் அதைவிட அதிகத் தந்திரங்களைக் கொண்டு அவர்கள் மீண்டும் தாக்க முற்படலாம். ஏராளமான வீரர்களை வைத்துக் கொண்டு தாக்கும் போது, பலநூறு பேர் களத்திலே மாண்டாலும் தாங்கிக் கொண்டு உயிர்ப்பலி கண்டு அஞ்சாது கோட்டை மதிலைத் தூளாக்கலாம். அதற்கு முன் எச்சரிக்கையாக நாம் ஏதாவது செய்ய வேண்டும். அவர்களுடைய படைப் பலத்தை அறிய நமது ஒற்றர்களை அனுப்பலாம். ஆனால் கோட்டைக்குள்ளிருந்து வெளியே யாராவது வரு



கிறார்களா, எந்த வழியே வருகிறார்கள் என்பதைக் கண்ணும் கருத்துமாக சோழர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய படைப் பலத்தை அறிந்து வரவேண்டிய பெரிய பொறுப்பை உன்னிடம் அளிக்கிறேன். நீ கோட்டைக்கு வெளியே செல்ல வேண்டும்'' என்று கூறிச் சேர மன்னர் சற்று நிறுத்தினார்.

மன்னர் கூறிவந்தவற்றை வைத்தவிழி வாங்காமல் கூர்மையாகக் கவனித்து வந்த மயில்விழியின் மெய் சிலிர்த்தது.

''மாமன்னரே! என்னிடமா இந்த மாபெரும் பொறுப்பை ஒப்படைக்கிறீர்கள். அதற்கு நான் தகுதியானவளா? அதற்கான ஆற்றல் என்னிடம் இருக்கிறதா! அதைத் தாங்கள் கண்டறிந்து அதற்கான சக்தி என்னிடமிருக்கிறது என்று உறுதியாகச் சொன்னீர்களானால், நான் அதை நிறைவேற்ற என் உயிரையும் தியாகம் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றாள்.

சேர மன்னர் மெல்ல நகைத்தார். ''பெண்ணே! உன்னுடைய உறுதியைக் கேட்டு மெச்சுகிறேன்; மகிழ்கிறேன். நீ உயிர்த் தியாகம் செய்துவிட்டால், உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான காரியத்தின் பலனை எவ்வாறு என்னிடம் வந்து சொல்ல முடியும், உன் உயிரைச் சோழர்களிடம் பலி கொடுப்பதற்காகவா உன்னை கங்காபுரியினின்று, வஞ்சிக்கு அழைத்து வந்தேன்?

''உணர்ச்சி வயப்பட்டு தியாகம், உயிர் நீத்தல் என்றெல்லாம் பேசக்கூடாது. உனது புத்திக் கூர்மையை இப்பொழுது பயன்படுத்த வேண்டும். உற்றார் எதிர்ப் புறத்தே இருக்கிறார்கள் என்பதற்காக நீ மயங்கியோ மலைத்தோ விடக்கூடாது.

''உன்னை வளர்த்த சோழ நாட்டரசர் எதிர்ப் புறத்தே இருக்கிறானே என்பதற்காகத் தளர்ந்துவிடக்

கூடாது. அதனால்தான் நான் உனக்கு எச்சரிக்கையுடன் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நீ அதைக் கவனமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும். என் திட்டத்தைத் தாமதப்படுத்தவும் நேரமில்லை, எந்த ஒரு கணத்திலும், சோழர்கள் நம் கோட்டை மீது பாய்ந்து, தவிடு பொடியாக்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. அதனால் நீ உனக்குள் நீ ஒரு திட்டத்தை உருவாக்கி கோட்டைக்கு வெளியே சென்று, சோழர்கள் படைப் பலத்தை எவ்வாறு அறிய முடியும் என்பதற்கான வழிவகைகளை நீ சிந்தித்து எனக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்கு உனக்கு ஒரு நாழிகை அவகாசம் தருகிறேன்'' என்று கூறினார்.

மயில்விழி மிகுந்த உற்சாகத்துடனும் அதே போது சிறிது கலக்கத்துடனும் தன்னை நம்பி தம்மீது சுமத்தப்பட்டுள்ள அரசகட்டளையை எவ்வளவு நிறைவேற்றுவது என்ற குழப்பத்துடன் மாளிகையை விட்டு வெளியே வந்து, மாளிகைக்கு அருகேயிருந்த நந்தவனத்தில் சிறிது அமர்ந்தாள்.

மாலை நேரத்து செஞ்சூரியன் மரங்களிடையே நுழைந்துத் தன் பொற்கரங்களை ஆங்காங்கே தவழ விட்டுக் கொண்டிருந்தான். கூடு சென்றடைய விரைந்து வரும் பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்து வந்தன. அருகேயுள்ள மரங்களிலுள்ள கூடுகளை வந்தடைய உற்சாகமாக அவைவிடும் ஒலி, அந்த அமைதியான வேளையில் தனி உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அவள் மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சுதந்திரமான பறவைகள் போல் தான் வாழ வேண்டும் என்று எண்ணியிருந்த தன் இலட்சியம், தன் சிறு கவனக் குறைவால், காதல் போதையால் மாறி விட்டது; இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் நாம் சிக்கிக்கொண்டு விட்டோமே என்று எண்ணும்போது அவளுக்கு வருத்தமாக இருந்தது.



அவள் எண்ணிப் பார்க்கிறாள். அமராவதி ஆற்றின் மறு கரையில் தண்டிறங்கியிருக்கும் சோழர் படைகளை அவள் எப்படிச் சந்திப்பாள். தன்னை அடையாளம் கண்டு கொண்டால், சிறைபிடித்து வைத்துக் கொண்டு விடமாட்டார்களா? தன்னை மீட்பதற்காகத்தானே இந்தப் போர். மிக எளிதிலே, சோழர்களிடம் சென்று தான் சிக்கிக் கொள்ள வேண்டுமென்பது சேர மன்னர் எண்ணமா? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சோழர்களின் படை எண்ணிக்கையை அறிவதற்கு, வஞ்சிக்கோட்டைக்குள்ளே பெரிய தந்திரிகளும், அறிவாளிகளும், ஒற்றர்களும் இருக்கும்போது தன்னை எவ்வாறு தேர்ந்தெடுத்தார் என்பது அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. இருந்தாலும் அவள் சிந்தித்தாள். அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

மாளிகைக்குள்ளிருந்து காவல் வீரர்கள் அவளை வந்து அழைத்தனர். மன்னர் பிரான் தங்களை உடனடியாக அழைக்கிறார் என்று பணிவுடன் கூறினர்.

அரசர் அளித்த அவகாசம் ஒரு நாழிகை கழிந்து விட்டதா? அவ்வளவு நேரமா நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்துடன் மயில்விழி சேர மன்னர் முன் வணங்கி நின்றாள்.

''மயில்விழி! சிந்தித்தாயா? திட்டம் ஏதாவது தோன்றியதா? நீ இன்று இரவே வஞ்சிக் கோட்டையை விட்டு வெளியேறவேண்டும், எப்படி வெளியேறப் போகிறாய் என்பதைப் பற்றி உனக்கு ஏதாவது யோசனை தோன்றியதா?'' என்று மன்னர் கேட்டார்.

கையைப் பிசைந்து கொண்டு நின்ற மயில் விழி தலையை அசைத்து, ''நான் அவ்வளவு பெரிய புத்திசாலியாக, தந்திரம் அறிந்தவளாக இருந்திருந்தால் மாபெரும் தவறுகளை நான் இழைத்திருக்கமாட்டேன். என்ன இருந்தாலும் நான் ஒரு பெண். பெண்புத்தியைப் பின்புத்தி

என்று சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும் கலையை ஜீவ னற்றாக கொண்டு எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நான் குழம்பிப் போயிருக்கிறேன். ஆனால் என்முன்னே அரச கட்டளை மிகப் பிரம்மாண்டமாக நின்று கொண்டிருக்கிறது. நான் அரச கட்டளையை ஏற்று நிறைவேற்றியாக வேண்டும். என்ன செய்யவேண்டும்; எப்படிச் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுங்கள். திட்டம் வகுத்துக் கொடுங்கள். அதன்படி நான் நடக்கிறேன்'' என்று மயில்விழிஉணர்ச்சி மிகுந்த குரலில் தழுதழுக்கக் கூறினாள்.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. சேர அரசர் சொன்னார்: ''மயில்விழி, நடுநிசிக்குப் பிறகு நீ கோட்டைக்கு வெளியே செல்கிறாய். கோட்டைக்கு வெளியே சென்று அமராவதி ஆற்றைக் கடந்து அதன் கரையோரமாகச் சென்றால் சோழர்கள் தண்டு இறங்கிய இடத்தை அடையலாம் என்று சொன்வார்.

ஒரு கணம் மயில்விழிக்குப் பேசுவதற்கு நா எழவில்லை. அரசர் சொல்வது போல்செய்தால் நான் எளிதில் சோழ வீரர்களிடம் சிக்கிக் கொண்டு விடுவோமென்பது சேர மன்னருக்குத் தெரியாதா?

''அரசே, நான் ஒன்று விண்ணப்பித்துக் கொள்ளலாமா? தங்களுக்குத் தெரியாததை நான் சொல்லிவிட்டதாகத் தாங்கள் நினைக்கக்கூடாது? கோட்டைக்கு வெளியே எப்படிச் செல்வது என்பது எனக்குத் தெரியவில்லை. முன்பு நான் சென்ற அதே வழியாக இப்போது நான் சென்றால், கோட்டைக்குச் செல்ல வழி எங்கேயிருக்கிறது என்று மிக உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் தான் சொன்னீர்கள். அந்த வழியே செல்வதும் முடியாது, மேலும் அவர்கள் என்னை எளிதில் அடையாளம் கண்டு கொண்டு விடுவார்கள்.



''அவர்களுடைய இந்தப் படையெடுப்பின் நோக்கம், வஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றுவது மட்டுமன்று, என்னை மீண்டும் கங்கைகொண்ட சோழபுரத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதுமாகும். மிக எளிதில் புலிக்குகைக்குள்ளே சென்று இந்தமானைச்சிக்கிக்கொள்ள அனுப்புகிறீர்களா? இந்தப் பேதைக்கு ஒன்றுமே விளங்கவில்லை அரசே! நான் இவ்வாறு பேசுவதற்கு என் அறியாமையால் கேட்பதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள்'' என்றாள்.

மெல்ல தலையை அசைத்த சேரமன்னர் சொன்னார்: ''மயில்விழி! அரச தந்திரங்களை உனக்குச் சொல்லித் தருகிறேன். ஒரு வேளை நீ சோழ முகாமிற்குச் சென்று குலோத்துங்கனைச் சந்தித்து, என் திட்டத்தைச் சொல்லிவிடக் கூடும் என்றும் நான் எதிர்பார்க்கலாம். ஆனால் உன்மீது எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில், உன்னால்தான் இந்த வஞ்சிக் கோட்டையைக் காப்பற்ற முடியும் என்ற அசைக்க முடியா நம்பிக்கையில்—அந்த நம்பிக்கை எப்படி ஏற்பட்டது என்று என்னாலேயே சொல்லமுடியாது. நான் சொல்கிறேன்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிய மன்னரின் பேச்சைக் கேட்டுப் பிரமித்துப்போய் நின்ற மயில்விழி அதன்படி நடக்க ஆயத்தமானாள்.

# 13

நடுநிசி. மயில்விழியும், சற்று வயதான ஒருவரும் மேற்குக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

மேற்குக் கோட்டை வாயிலை அதிகம் பயன்படுத்துவது கிடையாது. மிக முக்கியமான அலுவல்களுக்கு மட்டுமே அந்தக் கோட்டை வாயிலைத் திறப்பதுவழக்கம்

என்று சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும் கலையை நிலை நன்றாக கொண்டு எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நான் குழம்பிப் போயிருக்கிறேன். ஆனால் என்முன்னே அரச கட்டளை மிகப் பிரம்மாண்டமாக நின்று கொண்டிருக்கிறது. நான் அரச கட்டளையை ஏற்று நிறைவேற்றியாக வேண்டும். என்ன செய்யவேண்டும்; எப்படிச் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுங்கள். திட்டம் வகுத்துக் கொடுங்கள். அதன்படி நான் நடக்கிறேன்'' என்று மயில்விழி உணர்ச்சி மிகுந்த குரலில் தழுதழுக்கக் கூறினாள்.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. சேர அரசர் சொன்னார்: ''மயில்விழி, நடுநிசிக்குப் பிறகு நீ கோட்டைக்கு வெளியே செல்கிறாய். கோட்டைக்கு வெளியே சென்று அமராவதி ஆற்றைக் கடந்து அதன் கரையோரமாகச் சென்றால் சோழர்கள் தண்டு இறங்கிய இடத்தை அடையலாம் என்று சொன்னார்.

ஒரு கணம் மயில்விழிக்குப் பேசுவதற்கு நா எழவில்லை. அரசர் சொல்வது போல்செய்தால் நான் எளிதில் சோழ வீரர்களிடம் சிக்கிக் கொண்டு விடுவோமென்பது சேர மன்னருக்குத் தெரியாதா?

''அரசே, நான் ஒன்று விண்ணப்பித்துக் கொள்ளலாமா? தங்களுக்குத் தெரியாததை நான் சொல்லிவிட்டதாகத் தாங்கள் நினைக்கக்கூடாது? கோட்டைக்கு வெளியே எப்படிச் செல்வது என்பது எனக்குத் தெரியவில்லை. முன்பு நான் சென்ற அதே வழியாக இப்போது நான் சென்றால், கோட்டைக்குச் செல்ல வழி எங்கேயிருக்கிறது என்று மிக உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் தான் சொன்னீர்கள். அந்த வழியே செல்வதும் முடியாது. மேலும் அவர்கள் என்னை எளிதில் அடையாளம் கண்டு கொண்டு விடுவார்கள்.



''அவர்களுடைய இந்தப் படையெடுப்பின் நோக்கம், வஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றுவது மட்டுமன்று; என்னை மீண்டும் கங்கைகொண்ட சோழபுரத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதுமாகும். மிக எளிதில் புலிக்குகைக்குள்ளே சென்று இந்தமானைச்சிக்கிக்கொள்ள அனுப்புகிறீர்களா? இந்தப் பேதைக்கு ஒன்றுமே விளங்கவில்லை அரசே! நான் இவ்வாறு பேசுவதற்கு என் அறியாமையால் கேட்பதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள்'' என்றாள்.

மெல்ல தலையை அசைத்த சேரமன்னர் சொன்னார்: ''மயில்விழி! அரச தந்திரங்களை உனக்குச் சொல்லித் தருகிறேன். ஒரு வேளை நீ சோழ முகாமிற்குச் சென்று குலோத்துங்கனைச் சந்தித்து, என் திட்டத்தைச் சொல்லி விடக் கூடும் என்றும் நான் எதிர்பார்க்கலாம். ஆனால் உன்மீது எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில், உன்னால்தான் இந்த வஞ்சிக் கோட்டையைக் காப்பற்ற முடியும் என்ற அசைக்க முடியா நம்பிக்கையில்—அந்த நம்பிக்கை எப்படி ஏற்பட்டது என்று என்னாலேயே சொல்லமுடியாது, நான் சொல்கிறேன்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிய மன்னரின் பேச்சைக் கேட்டுப் பிரமித்துப்போய் நின்ற மயில்விழி அதன்படி நடக்க ஆயத்தமானாள்.

# 13

நடுநிசி. மயில்விழியும், சற்று வயதான ஒருவரும் மேற்குக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

மேற்குக் கோட்டை வாயிலை அதிகம் பயன்படுத்துவது கிடையாது. மிக முக்கியமான அலுவல்களுக்கு மட்டுமே அந்தக் கோட்டை வாயிலைத் திறப்பதுவழக்கம்

மலைநாட்டிலிருந்து வரும் யானைகளையும், உணவுப் பண்டங்களையும் முக்கியமானவர்களையும் அனுமதிப்பதற்காக மட்டுமே மேற்குக் கோட்டை வாயிலைப் பயன்படுத்துவது வழக்கம். அந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டமே குறைவுதான்.

மேற்குக் கோட்டை வாயிலருகே, வஞ்சிநகருக்கு வரும் வாய்க்கால் ஒன்று வந்து கொண்டிருந்தது. அமராவதி ஆற்றிலிருந்து வெட்டப்பட்ட அந்தக் கால்வாய் கோட்டைக்குக் குடிநீரை வழங்கிக் கொண்டிருந்தது.

அமராவதி ஆற்றில் வெள்ளம் அதிகம் வருங்காலத்தில் கால்வாய் வழியே அதிக நீர் கோட்டைக்குள்ளே வந்து விடாமல் சரிசமன் செய்வதற்காகக் கோட்டைக்கு வெளியே, மேற்கு வாயிலருகே சிறு மதகு ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. வெளியே இருந்துப் பார்ப்பவர்களுக்கு அந்த மதகு சட்டென்று புலப்படாது. அங்கு சிறிய நீர்த்தேக்கம் ஒன்று இருப்பதுபோலவே தோன்றும். தேவையானபோது அதிக நீரை வெளியிடவும், தேக்கி நிறுத்தவும் நுட்பமான கருவிகளை ஏற்படுத்தியிருந்தார்கள்.

அந்த இடத்தில் சேர வீரர்களின் தனிப்பட்ட பாதுகாவலும் உண்டு. அதையும் சோழ வீரர்கள் கண்டிருக்கிறார்கள். கோட்டை மதிளை ஒரு சுற்றுச் சுற்றி மிக நுட்பமாக ஆராய்ந்திருக்கிறார்கள். மதகு இருந்த இடத்திற்கு மட்டும் அவர்களால் செல்ல இயலவில்லை. அதை அவர்கள் முக்கியமானதென்று பொருட்படுத்தவில்லை. அப்படியும் சில வீரர்கள், அந்த இடத்தில் நுழையும் போது சேரவில்லவர்களின் விஷ அம்பிற்கு இரையாகி நீர்த்தேக்கத்தில் விழ்ந்து இறந்தனர். அதனால் அந்தப் பக்கமே சோழவீரர்கள் செல்லத் துணியவில்லை.

மயில் விழியோடு வந்திருந்தவர் சேர நாட்டு ஒற்றர்களுள் மிகத் திறமை வாய்ந்தவர். மயில்விழிக்கு எந்த விதத்திலும் உதவி செய்ய வேண்டும் என்ற, மன்னரின்



கட்டளையை உறுதியாக ஏற்று மயில்விழியுடன் வந்திருந்தார்.

மயில்விழி இப்போது முற்றிலும் மாறுபட்ட தோற்றத்துடன் காட்சியளித்தாள்.

அவள் ஒரு மலை நாட்டுப் பெண்ணாக மாறியிருந்தாள். அவள் கூந்தலை அள்ளிச் செருகியிருந்தாள். சற்றுப் பழுப்பு நிறமாகவும் காட்சியளித்தது. கழுத்திலே மணி மாலைகள் நிறைந்திருந்தன. அவள் பாதங்களில் கனமான வெள்ளிச் சிலம்பு அணிந்திருந்தாள். கையில் தந்த வளையல்களும், கழுத்தில் சங்கு மாலைகளும் அணிந்திருந்தாள்.

அவளுடைய இளமை வனப்பை எடுத்துக் காட்டும் கச்சையின் மீது மேல் துகில் இல்லை. நாபிக் கமலச் சு… பார்ப்பவர் கவனத்தைச் சுண்டியிழுக்கும் வண்… மிருந்தது இயற்கையிலேயே வாளிப்பு மிகுந்த அ… மலைநாட்டு மங்கையைப் போன்று திண்மை பெற்றுத் திகழ்ந்தாள். காதில் குண்டலம் அசைந்தாடியது. கண்ணுக்கு மை தீட்டியிருந்தாள். மைக்கோடுகள் காது வரை நீண்டு வரையப்பட்டிருந்தன.

அவளைப் பார்ப்பவர்கள் அவள் மயில்விழிதானா என்று வியப்படையும் வண்ணம் அவள் தோற்றம் மாறியிருந்தது.

அவளுடன் வந்திருந்த அவள் உதவியாளர் கையில் ஒரு மத்தளம் இருந்தது. தோளிலே துணிமூட்டை ஒன்று தொங்கியது. அவர் பெரும் முண்டாசு கட்டியிருந்தார். அடர்ந்த மீசையை அவர் ஒட்டியிருந்தார். அவர்கள் இருவரும், கால்வாய் வழியே சிறு தோணியில் ஏறி, கோட்டைக்கு வெளியே சென்றார்கள். தோணி மெல்லச் சென்றது.

முன் ஏற்பாட்டின்படி, மதகுக் கருவிகள் தூக்கப்பட்டு இருந்தன. கால்வாயில் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக ஓடிக் கொண்டிருந்தது. தோணியை மெல்லச் செலுத்திக் கொண்டு, அமராவதி ஆற்றிலிருந்து வாய்க்கால் பிரியும் இடம் வரை சென்றார்கள். கரை இருபுறமும் உயர்ந்திருந்ததால் தோணி செல்வதை ஒருவரும் அறிய முடியாது.

அமராவதி ஆற்றில் வாய்க்கால் செல்லும் இடம்வரை அடைந்தவுடன், தோணியை கரை ஓரமாக நிறுத்திவிட்டு ஆற்றில் ஆழமில்லாத பகுதியாகப் பார்த்து, ஆற்றைக் கடந்து மறுகரை ஓரமாக நடக்கலானார்கள்.

பின் நிலவுக் காலமாதலால், மதியின் மங்கிய ஒளியில் அவர்கள் தடம் பார்த்து மிகவேகமாக நடக்கலானார்கள். மயில்விழிக்கு அந்தப் பாதை பழக்கமில்லை என்றாலும், அவளுடன் வந்தவருக்கு அந்த இடம் ஒவ்வொரு அணுவாகத் தெரியும்.

இலேசாகக் குளிர் எடுத்தது. மயில்விழியின் உள்ளத்துக்குள்ளே சற்று நடுக்கம்தான். என்றாலும் வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல், உடன் வருபவரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

சோழ வீரர்களை வழியில் சந்தித்தால் அவர்களிடம் என்ன பேசுவது என்பதைப் பற்றி ஒத்திகை நடத்திக் கொண்டனர். சிலம்பு ஓசை மெல்ல ஒலித்தது. கை வளையல் குலுங்கின. தன் உடை மாற்றத்தைக் கண்டு அவளே வியந்து கொண்டாள்.

உடன் வந்தவரைப் பார்த்து, ''ஐயா, என் உருமாற்றம் சரியாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''நானே வியப்படைந்தேன். உன்னுடன் நெருங்கிப் பழகுபவர்கள் கூட உன்னை அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள். மலை நாட்டுப் பெண் என்றால் சரியான வேடப் பொருத்தம்'' என்றார்.



''மலை நாட்டுப் பெண் மட்டுமா? நான் ஒரு நாட்டியக்காரி'' என்றாள் மயில்விழி.

''ஆமாம்; உண்மையிலேயே நீ ஒரு நடன மங்கை தானே!'' என்றார் அவர்.

''உச்... அந்த நடனமங்கை மயில்விழி வேறு இப்போது நான் மலை நாட்டுக் குறப்பெண். வஞ்சி என் பெயர். நான் ஆடும் நடனமே வேறு. நீங்கள் தாளம் தட்ட வேண்டும்'' என்றாள் மயில்விழி.

''ஓ! எனக்குத் தாளம் தட்டிப் பழக்கமில்லையே'' என்றார் அவர்.

''அதனால் என்ன, விருப்பப்படி தட்டுங்கள். அதற்கேற்றபடி நான் ஆடுகிறேன். ஆனால் ஒன்று; என்னை அவர்கள் மயில்விழி என்று அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது. அடையாளம் கண்டு கொண்டுவிட்டால் போச்சு...'' என்றாள்.

சிறிது தூரம் சென்றிருப்பார்கள். விடிவெள்ளி முளைத்து விட்டது. அங்குமிங்கும் சிலபறவைகள் கூவின. திடீரென்று அருகிலிருந்த நாணல் புதர்கள் சலசலத்தது. புதர் மறைவிலிருந்து நான்கு வீரர்கள் பாய்ந்து வந்து அவர்கள் எதிரே நின்று, ''நில்லுங்கள்'' என்று குரல் கொடுத்தனர்.

அவர்களுள் ஒருவன், ''யார் நீங்கள்? இந்த வேளையில் நீங்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

மயில்விழி கலுக்கென்று சிரித்தாள். பெரியவர் பக்கம் திரும்பி, ''மாமா, இது என்ன கூத்து? நம்மைப் பார்த்து நீங்கள் யார் என்று கேளுங்கள்'' என்றாள். அவள் பேச்சு மலை நாட்டுத் தமிழில் இருந்தது.

தாளம் தட்டும் வேடத்தில் இருந்தவரோ அந்த வீரர்களைப் பார்த்துப் பயப்பட்டவர் போல மயில்விழியின்

பக்கம் போய் நின்று கொண்டு, "வஞ்சி, இவங்க யாருன்னு தெரியலே" என்று மெல்லக் கூறினார்.

வீரர்கள் ஒரு சேர நகைத்தனர்.

"ஓ! பெண் பிள்ளைக்குப் பின்னர் ஒளிந்துகொள்ளும் கிழம்" என்றனர்.

"பெரியவரே! ஒரு பெண் பின்னால் போய் நிற்கிறீரே! நீர் அவளுக்குத் துணையாக வந்தீர்களா? அல்லது அவள் உமக்குக் காவலா! நீங்கள் யார் என்ற கேள்விக்கு அவளாவது சொல்லட்டும்; அல்லது நீராவது சொல்லும்?" என்றனர்.

பெரியவர் மயில்விழியை நோக்கினார். மயில்விழி மேலும் தாமதப்படுத்த விரும்பாமல், "துணையா? சேர நாட்டில் பெண் எங்கு வேண்டுமானாலும் அச்சமின்றிப் பயணப்படலாம். நாங்கள் இந்த நாட்டவர்கள். சேர நாட்டின் எல்லையில் தான் இருக்கிறோம். என் பெயர் வஞ்சி. நான் வஞ்சிக்கோட்டைக்கு என் தந்தையைப் பார்க்கச் செல்கிறேன். வஞ்சியை தெரியாத சேர வீரர்கள் ஒருவரும் இருக்க முடியாது. அதனால் உங்களைத் தான் நான் யார் என்று கேட்கவேண்டும்; எங்கு வந்தீர்கள்? இந்தப் பின்னிரவில் நாணற்காட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று அச்சம் சிறிதுமில்லாதவள் போல் கேட்டாள்.

அந்தச் சோழ வீரர்களுக்குக் கோபம் பொங்கியது. நம்மையே இவள் கேள்வி கேட்கிறாள்! நமக்கு இவள் சரியான மறுமொழி கூறமாட்டாள். படைத் தலைவர் எதிரே இவர்களைக் கொண்டு நிறுத்துவோம். அவரிடமே இவள் பேசிக் கொள்ளட்டும். மேலும் இவள் பேசும் தமிழ் நமக்குப் புரியவில்லை" என்றுகூறிமயில்விழியின் கையைப் பற்றி அவளை இழுத்துச் செல்ல முற்பட்டவரை எரித்து விடுபவள் போல் பார்த்து, கையை உதறி, "ஏய்! ஓர் பெண்ணைத் தொடுமளவுக்கு உங்களுக்குச் சுதந்திரம்



வந்துவிட்டதா? நீங்கள் யார், சொல்லிவிட்டுப் பிறகு பேசுங்கள். படைத்தலைவரா? எந்தப் படைத் தலைவர்? அவரிடம் பேசவேண்டுமாம்—யாரய்யா நீங்கள்? புதுமைக் கள்ளர்களா?" என்று சீறினாள்.

சோழ வீரர்கள் கோபம் மறைந்துச் சிரிப்புப் பொங்கியது. பாவம்! விவரம் தெரியாமல் பேசுகிறாள். சரியான மலை நாட்டுப் பெண். அழகாக இருக்கிறாள். நமது படைவீரர்கள் பார்த்தாலே மகிழ்ச்சி அடைவார்கள். இவளிடம் கோபமாகப் பேசாமல் நயமாகப் பேசுவோம் என்று தங்களுக்குள் மெல்லப் பேசிக்கொண்டு, "பெண்ணே! உனக்கு உலக நடப்பே தெரியாது போலிருக்கிறது. வஞ்சிக் கோட்டைக்கா நீ செல்லப்போகிறாய்? வஞ்சிக் கோட்டைக்கு இப்பொழுது செல்ல முடியாது என்று உனக்குத் தெரியாதா?" என்று, அமைதியான அன்பு நிறைந்த குரலில் கூறினார் ஓர் வீரர்.

ஒன்றும் புரியாதவள் போல் நடித்தாள் மயில்விழி. "ஏன் வஞ்சிக் கோட்டைக்குப் போக முடியாது? இன்னும் சிறிது தொலைவு சென்றால் அமராவதி ஆறு சற்று வடக்குப் புறமாகத் திரும்பும். அங்கே ஆற்றைக்கடந்தால் வஞ்சிக் கோட்டைக்குச் செல்லும் குறுக்குவழி இருக்கிறது. நீங்கள் புதியவர்கள் என்று நன்றாகப் புரிகிறது; வழியை விடுங்கள். பொழுது புலர்வதற்கு முன்பு நாங்கள் கோட்டைக்குள் சென்றுவிடவேண்டும். வழியைவிடுங்கள். நீங்கள் யார் என்று சொல்லாவிட்டாலும் கவலையில்லை. ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்கு வழிப்பறி செய்ய வந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது" என்றாள்.

வீரர்களுள் ஒருவன் பெரிதாகச் சிரித்து, "பெண்ணே! நீ தான் இந்தப்பக்கத்துக்குப் புதியவள் என்று தெரிகிறது. உனக்கு நாட்டு நடப்பே தெரியவில்லை. இப்பொழுது வஞ்சிக் கோட்டைக்குள் யாரும் செல்ல முடியாது" என்றான்.

''ஏன்?''

''இப்பொழுது போர் நடந்து கொண்டிருக்கிறது.''

''போரா? சண்டையா? யாருக்கும் யாருக்கும் சண்டை?'' மயில்விழி ஒன்றும் தெரியாதவள் போல் மலைநாட்டுத் தமிழில் கேட்டாள்.

''ஆமாம்; போர்தான். நாங்கள் எல்லாம் யார் தெரியுமா?''

''தெரியாதே! நீங்கள் இந்தப் பகுதிக்குப் புதியவர்கள் என்று தோன்றுகிறது. இன்னும் எங்கள் யூகம் சரியாக இருக்குமானால், நீங்கள் புதிதாக வந்துள்ள வழிப்பறி திருடர்கள் என்று தோன்றுகிறது. வடக்கே இருந்து வந்திருப்பவர்கள் போலும் எண்ணத் தோன்றுகிறது.''

''நாங்கள் புதியவர்கள் அல்லர்; கள்ளர்கள் அல்லர். வஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றச் சோழநாட்டிலிருந்து வந்திருக்கும் வீரர்கள். இன்னும் சற்றுத் தொலைவு சென்றால், 'ஆற்றைக் கடக்கும் இடம்' என்று சொன்னாயே அந்த இடத்திற்குச் சென்று பார்த்தால் புரியும்'' என்றனர்.

மயில்விழி அதிர்ச்சியுற்றவள் போலும், வியப்புற்றவள் போலும், அந்தப் பகுதியில் என்ன நடக்கிறது என்று தெரியாதவள் போலும், குரலை வரவழைத்துக்கொண்டு, ''ஐயோ! என்ன புதிதாகச் சொல்கிறீர்களே! சோழ நாட்டவர்கள் வஞ்சிக் கோட்டையைப் பிடிக்கப்போகிறார்களா! சேரர்கள் என்ன தவறு செய்து விட்டார்கள்? உங்கள் சோழ அரசரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாட்டை எல்லாம் கைப்பற்றி வருகிறாராமே? சேர நாட்டவர்கள் என்ன தவறு செய்து விட்டார்கள் ஐயா?'' என்று மயில்விழி ஒன்றும் அறியாதவள்போல் கேட்டாள்.

''இந்தக் கேள்வியை எல்லாம் எங்கள் படைத் தலைவரிடம் நீ கேட்டுத் தகவலைத் தெரிந்துகொள். இங்கேயே



நின்று பேச வேண்டாம்'' என்று மீண்டும் அவள் கரத்தைப் பிடித்து அழைக்க முயன்றவனைப் பார்த்து ஓர் உறுமலுடன், ''கையைத் தொடாதே என்று முன்பே எச்சரித்தேன். பெண்களைப் பார்க்காத ஜென்மங்களா நீங்கள்? ஒரு பெண்ணின் கையைத் தொட்டால், தொட்ட கரத்தை வெட்டிப் போட்டு விடுவோம் சேர நாட்டில். எங்கே போக வேண்டும்; யாரிடம் பேச வேண்டுமோ சொல்லுங்கள் வருகிறேன். வஞ்சிக் கோட்டைத் தலைவருக்கு இந்தச் செய்தி தெரிந்தால் நீங்கள் படும்பாடு— அதை நினைத்தாலே சிலிர்க்க வைக்கிறது''— குரலில் மிகக் கடுமையை வரவழைத்துக் கொண்டு பேசினாள்.

மீண்டும் சோழ வீரருள் ஒருவன் சிரித்தான். ''உங்கள் படைத்தலைவரா? அதுதான் பயந்து கொண்டு கோட்டைக்குள்ளே பதுங்கியிருக்கிறாரே! சுத்த வீரர் என்றால் கோட்டைக்கு வெளியே வந்து எங்களுடன் நேருக்கு நேர் போரிட்டுப் பார்க்கட்டுமே?'' என்றான். ''சரி, சரி. பேசிக்கொண்டே இருந்தால் நேரம் வீணாகிறது. உங்கள் படைத் தலைவரைப் பார்க்கச் செல்வோம்'' என்று அவள் முன்னே நடக்கலானாள்.

நடந்து கொண்டே அவள் கேட்டாள்: ''நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். நீங்கள் இரவு வேளையில் புதர் மறைவில் பதுங்கியிருக்கக் காரணம் என்ன?''

''நாங்கள் இந்தப் பகுதி முழுவதையும் கண்காணித்து வருகிறோம், வஞ்சிக் கோட்டைக்குள் யாராவது செல்கிறார்களா? அல்லது அங்கிருந்து யாராவது வருகிறார்களா? என்று. கோட்டைக்குள் செல்ல இரகசிய வழி ஏதாவது இருக்கிறதா? கோட்டைக்குள் செல்ல வீரர்கள் அந்த வழியைப் பயன்படுத்துகிறார்களா? என்று கண்காணித்து வருகிறோம். போர் தொடங்கிய உடனேயே சுற்றியிருந்த கிராம மக்கள் எல்லோரும் வீடுகளை விட்டுக் காட்டிற்குள் ஓடிவிட்டார்கள். அப்படியும்,

கோட்டைக்குள் சென்றாக வேண்டும் என்ற கட்டாயமுள்ளவர்கள் யாராவது வருவார்கள் என்று எதிர்பார்த்து நாங்கள் இங்கே நின்று கண்காணித்து வருகிறோம். நாங்கள் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. நீ வந்துவிட்டாய். கோட்டைக்குள் சென்றாக வேண்டும் என்ற கட்டாயம் உனக்கிருப்பது நீ வேகமாகச் செல்ல முற்பட்டதிலிருந்து தெரிகிறது. உனக்குக் கோட்டைக்குள் செல்ல வழி தெரியுமா?'' என்று கேட்டனர்.

''கோட்டைக்குள் செல்வதற்கு வழியா? நான் வந்திருக்கிறேன் என்றால், உடனே கோட்டைக் கதவைத் திறந்து என்னை ராஜ மரியாதையுடன் அரசரிடம் அழைத்துச் செல்வார்கள். வஞ்சி என்றால் அவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வஞ்சிக் கோட்டைக்கு வருவேன். என் வயதான தந்தை கோட்டைக்குள் இருக்கிறார். அவரையும் பார்த்துவிட்டு, அரசர் முன்னால் நடனமாடி விட்டு வேண்டிய வெகுமதிகளையெல்லாம் அரசரிடமிருந்து பெற்றுக் கொண்டு, மீண்டும் என் ஊரான பழமை வாய்ந்த திருவஞ்சைக் களத்திற்குச் சென்று விடுவேன். என்னுடன் வந்திருக்கும் இவர் தாளம் தட்ட, நான் ஆடுவேன்'' என்று கூறி நிறுத்தினாள்.

''ஓ? நீயும் நடனமாடுவாயா? முன்பே ஓர் நடனப் பெண்ணால் தான் இந்தப் போரே ஏற்பட்டிருக்கிறது. அவளை இங்கிருந்து எப்படியாவது அழைத்துச் சென்று விடவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அமராவதி ஆற்றங்கரையில் நாட்கணக்காகக் காத்திருக்கிறோம். நீ இப்போது ஒரு நாட்டியப் பெண் என்று வருகிறாயா! வா, வா... இவற்றை எல்லாம் எங்கள் படைத் தலைவரிடம் வந்து ஒன்று விடாமல் சொல்லு'' என்று கூறி விரைந்துச் செல்ல முற்பட்டார்கள்.



''அது சரி; ஒரு சிறிய கோட்டையைப் பிடிப்பதற்கு இவ்வளவு படை வீரர்கள் ஏன் வந்திருக்கிறீர்கள்?'' என்று மயில்விழி கேட்டாள்.

''சின்னக்கோட்டை என்று தான் நினைத்தோம். சேரர்களை நொடியில் வென்றுவிடலாம் என்ற எண்ணத்தில் முதலில் ஐநூறு பேர்களே வந்தோம். ஆனால் மதில் மீதிருந்து சீறிவரும் விஷ அம்பை எப்படித் தடுப்பது என்றே எங்களுக்குப் புரியவில்லை. மாவீரரான எங்கள் அரசர் குலோத்துங்க தேவருக்கும் புரியவில்லை. மேலும் ஐநூறு போர் வீரர்கள் சோழ நாட்டிலிருந்து வந்து சேர்ந்துள்ளார்கள். எவ்வளவு நாட்கள் ஆற்றங்கரையிலேயே தங்கியிருக்கப் போகிறோமோ தெரியாது. எங்கள் வீடு வாசல்களை, பெண்டு பிள்ளைகளை எப்போது பார்க்கப் போகிறோமோ? பார்க்காமலே போய்விடப் போகிறோமோ தெரியவில்லை. நாங்கள் சோர்வுற்றிருக்கிறோம். தோளிலே வலிமை இருந்தாலும் மனத்திலே சோர்வு மெல்ல மெல்லச் சூழ்கிறது. வஞ்சி! உன்னைப் பார்த்தவுடன் எங்களுக்கே புதுஉற்சாகம் பிறந்துவிட்டது. இந்த மங்கிய நிலவொளியில் நீ தேவதைபோல் தோன்றியிருக்கிறாய். உன்னுடன் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதனால்தான் இவ்வளவு செய்திகளை விவரித்தோம். உன்னை அழைத்து வந்ததற்காகப் 'படைத்தலைவர் எங்களை மிகவும் பாராட்டுவார்கள்'' என்று கூறி சிறிது தொலைவு நடந்து படைவீரர்கள் தங்கியிருக்கும் முகப்பு வாயிலை அடைந்தார்கள்.

சோழ வீரர்கள், வஞ்சியை, வீரர்கள் தங்கியிருந்த இடத்தின் வழியாக அழைத்துச் சென்றனர்.

வஞ்சி கேட்டாள்: ''என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?''

''எங்கள படைத்தலைவரைச் சந்திப்பதற்குத்தான்.''

''ஏன் அவரிடம் செல்லாமல், அவருக்கு உதவியாக இருப்பவரை—துணைப் படைத்தலைவரைச் சந்திக்கக்

கூடாதா? மிக விரைவில் நான் கோட்டைக்குத் திரும்ப வழி செய்யுங்கள் அண்ணன் மார்களே!'' என்று மிகவும் கெஞ்சிக் கேட்பது போன்ற குரலில் கேட்டாள்.

''ஹும் ஹும்... படைத்தலைவரிடம் உன்னை அழைத்துச் செல்லாமல் நாமதப்படுத்தினால், எங்கள் தலை உருளும். மிகக் கவனமாக இரவு முழுமையும் விழித்துக் கொண்டிருந்த நாங்கள் உன்னைக் கண்டதை அவரிடம் சொல்லாமலிருந்தால் அவ்வளவுதான்...?'' என்று வீரர்களுள் ஒருவர் கூறினர்.

சோழ வீரர்கள் தங்கியிருந்த இடத்தின் வழியாக வஞ்சி செல்ல வேண்டியிருந்தது. காலை நேரம் படை வீரர்கள் சுறுசுறுப்பாக எழுந்துவிட்டனர். இரவெல்லாம் விழித்துக் காவல் புரிந்து கொண்டிருந்து வீரர்கள் மட்டும் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர்.

சில வீரர்கள் வாள் சுழற்றிக் காலைப் பயிற்சியைச் செய்து கொண்டிருந்தனர். சிலம்பம் சுழற்றினர் சிலர். சிலர் வில்லை வளைத்துச் 'சரக் சரக்' என்று குறி பார்த்து அம்பை எய்து கொண்டிருந்தனர். சிலர் வேலெடுத்துப் பலங்கொண்ட மட்டும் வீசினர். அவர்களது போர்ப் பயிற்சியையும் சுறுசுறுப்பையும் பார்த்த வண்ணம், அவர்கள் எண்ணிக்கையை மனத்திலே கணித்துக் கொண்டு வஞ்சி ஒயிலாக நடந்துச் சென்றாள்.

வஞ்சியின் பாதச் சிலம்பொலி அவர்களைக் கலர்ந்தது. திடீரென வானத்தில் வட்ட மதி உதித்ததுபோல் உணர்ந்தனர். பெண்கள் முகத்தைப் பார்த்துச் சிலருக்குப் பல நாட்கள் ஆகியிருந்ததால், அழகான வஞ்சியின் எழிலால் கவரப்பட்டுத் தங்களை மறந்தனர்.

படை முகாமில் ஒரு பெண்ணா! சிலர் வியப்புடன் நோக்கினர்.



வஞ்சியுடன் சென்ற வீரர்களை நோக்கி, வாளைச் சுழற்றுவதைவிட்டு ஒருவன் கேட்டான்: ''ஏனப்பா! உன்னுடன் ஒரு தேவதையை அழைத்து வந்திருக்கிறாயே! இந்தப் பக்கமும் அவளை அழைத்து வா!''

வஞ்சி மெல்ல நகைத்தவாறு, அவர்களை நோக்கி கையை அசைத்தாள். பயிற்சியை நடத்திக் கொண்டிருந்த சோழ வீரர்கள், வாளையும் சிலம்பையும், வேலையும் கீழே வீசிவிட்டு, 'ஹா' 'ஹா' என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பினர்.

''சகோதரர்களே! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்; தளபதியைச் சந்தித்த பிறகு நாமிருக்குமிடத்திற்கும் வஞ்சி வருவாள்'' என்றான் வஞ்சியை அழைத்து வந்த வீரன். சோழ வீரர்கள் மகிழ்ச்சிக் குரல் எழுப்பினர்.

ஒரு வீரன் மிகத் துணிவுடனும், உற்சாகத்துடனும் கேட்டான்! ''அழகிய பெண்ணை அழைத்து வந்ததற்கு நன்றி. ஆனால் அவளுடன் ஒரு கிழவனையும் ஏன் அழைத்து வந்திருக்கிறாய்?'' வஞ்சி அவன் பக்கம் திரும்பி அவனைச் சுட்டு எரித்து விடுபவள் போல் பார்த்தாள். ''ஏன் உங்களுக்கு அழகிய பெண்ணைத்தான் பிடிக்குமா? அவளுடைய ஆட்டத்தை ரசிக்க மட்டும் ஆசை. ஆனால் தாளம் சரியாகத் தட்டப்பட்டால்தான் அழகிய பெண்ணால் ஆடமுடியும் என்பது என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள். மற்ற வீரர்கள் அதை ரசித்துப் பெரிதாக நகைத்தனர்.

அவளுடைய அழுத்தமான பேச்சையும் மற்றவர்கள் நகைத்ததையும் கேட்ட அந்த வீரனுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

வஞ்சி ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கு இருந்த வீரர்களின் எண்ணிக்கையை மனத்திலே கணக்கெடுத்துக் கொண்டாள். 'அப்பா! எல்லளவு வீரர்கள்!

வஞ்சிக் கோட்டைக்குள்ளிருக்கும் மக்கள் தொகையில் பாதிப்பேர் அளவுக்கு இருக்கும் போல் தோன்றுகிறதே என்று எண்ணினாள்.

வஞ்சியை அழைத்துச் சென்று ஒரு கூடாரத்தின் முன் சற்று நின்றார்கள். அந்தக் கூடாரத்தின் முன்னே வேல் ஏந்தி ஓர் வீரன் காவல் காத்து நின்று கொண்டிருந்தான்.

"ஒரு கணம் இங்கே இரு வஞ்சி. இதோ வந்து விடுகிறேன்" என்று பெயரிட்டு உரிமையுடன் பேசினான் அழைத்து வந்தவர்களுள் ஒருவன்.

வஞ்சி சலிப்புற்றவள் போல், "ஏனய்யா! இப்படி ஒவ்வொரு இடமாக என்னை நிறுத்தி நிறுத்தி எல்லோருக்கும் வேடிக்கைக் காட்ட விரும்புகிறீர்களா? நூறு இருநூறு வீரர்கள்—ஒவ்வொருவருக்கும் என்னை அறிமுகப் படுத்திவிட்டு மறு வேலை பார்ப்பீர்கள் போலிருக்கிறது" என்றாள்.

வீரன் சிரித்தான். "உன் கோபங்கூட ஓர் அழகாகத் தானிருக்கிறது. நூறு இருநூறு பேர்கள் என்றா சொன்னாய். ஆயிரம் வீரர்கள் காத்திருக்கிறோம். அத்தனை பேரிடமும் உன்னை அழைத்துச் சென்றால் உன்னை அணுஅணுவாகப் பிய்த்து ரசித்து விடுவார்கள். அப்படியெல்லாம் செய்ய எனக்கு அதிகாரமில்லை. இது தான் படைத் தளபதி தங்கியிருக்குமிடம். நொடியில் உள்ளே சென்று அவர் அனுமதிபெற்று உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

வீரன் உள்ளே சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்து, காளர் தட்டுபவரை மட்டும் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, வஞ்சியைப் படைத்தளபதியிடம் அழைத்துச் சென்றான்.



உள்ளே ஒரு மஞ்சத்தில், ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்த கண்டர் சூரியன் சம்புவராயர் வஞ்சியைப் பார்த்தவுடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

அவர் எதிரே வஞ்சி குனிந்த தலையுடன் நின்றிருந்தாள். சம்புவராயர் அவளை ஒரு முறை பாதாதி கேசம் பார்த்தார். அந்தப் பார்வை, வஞ்சியின் உள்ளத்தில் உள்ளதை ஒரு நொடியில் அறிய முற்படுவது போல் இருந்தது.

மற்ற வீரர்களை கண் ஜாடையாலேயே அங்கிருந்துப் போகுமாறு சொல்லிவிட்டார்.

"பெண்ணே, நீ யார்?" என்று கேட்டார் சோழர்ப் படைகளின் தலைவர் சூரியன் சம்புவராயர். அவர் வஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிச் சேரர்களை வெல்லும் பொறுப்பை ஏற்று வந்தவர். மிக எளிதில் வஞ்சிக் கோட்டையை வீழ்த்தி விடலாம் என்ற எண்ணத்தில் வந்தவர். முதல் நாளே பல வீரர்களைப் பலி கொடுத்ததுடன் அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. பல போர்க் களங்களில் மிக எளிதாக எதிரிகளை வென்று வெற்றிக் கொடி நாட்டிய அவருக்கு முதல் தோல்வி பெரும் அதிர்ச்சியை அளித்தது. சோழ வீரர்களைப் பின்னடையச் செய்து அமராவதி ஆற்றைக் கடந்து தங்கியிருக்குமாறு செய்த அவருக்கு இரவு பகல் உறக்கமில்லை.

குலோத்துங்க சோழருடன் நேரம் போவது தெரியாமல் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றிக் கலந்தாலோசித்தவாறு இருந்தார்.

பல திட்டங்கள், சிந்தனைகள், யோசனைகள். தேர் போல் செய்து அதில் பரண் அமைத்து அதில் தேர்ந்தெடுத்த வீரர்களை அமரச் செய்து, வஞ்சிக் கோட்டை அருகே சென்று தாக்குவது என்பது ஒரு யோசனை.

அந்த யோசனை கிட்டத்தட்ட ஏற்கப்படும் நிலையில், கூயரமான அந்தத் தேர்களை ஆற்றைக் கடந்து எப்படி இழுத்துச்செல்வது என்று ஒரு சாதாரண வீரன்கேட்கவும் சம்புவராயர் உட்பட அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். அந்தத் திட்டம் நிறைவேறாது என்று அறிந்த பிறகு சம்புவராயருக்கு உறக்கமே வரவில்லை. சிந்தனை சிந்தனை ஒரே சிந்தனைதான்!

இரவெல்லாம் சிந்தித்து, அதிகாலையில் துயிலரசி அவர் விழிகளைத் தழுவும் சமயத்தில்தான் வஞ்சி அவர் முன்பு நிறுத்தப்பட்டாள்.

வஞ்சியின் மூலம் வஞ்சிக் கோட்டையைப்பற்றி மேலும் அறிய முடியும் என்ற எண்ணம் பளிச்சென்று தோன்றியது. வஞ்சியை உடனே சோழ சக்கரவர்த்தியிடம் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற பரபரப்பும் ஏற்பட்டது.

''பெண்ணே, நீ யார்'' என்று மீண்டும் கேட்டார், சம்புவராயர்.

வஞ்சி நாணமும் அச்சமும் அடைந்தவள் போல் தலையை நிமிர்த்தவில்லை. ஆனால், கடைக் கண்ணால் அவன் சம்புவராயரை நோக்கினாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் அவரை ஒரு முறை பார்த்த நினைவு.

தன்னை அவர் அடையாளங் கண்டுகொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு மெல்ல நிமிர்ந்தாள்.

அந்தக் கம்பீரமான தோற்றம்; முறுக்கிய மீசை; இயற்கையாகச் சிவந்த விழிகள் உறக்கமில்லாததால் மேலும் செஞ்சூரியனாய் வீரத்தைக் கொப்பளித்துக் காட்சியளித்தன.



அந்தத் தோற்றத்தை ஒரு முறை பார்த்தவுடன் அச்சம் ஏற்படாமலிருக்காது.

வஞ்சி மெல்லப் பேசினாள்: ''நான் மலைநாட்டி லின்று வருகிறேன்.''

''மலை நாடா! சேர நாடே மலைநாடுதானே! மலை நாட்டைவிட்டுச் சேர அரசர் இங்கே வந்துக் கோட்டை யைக் கட்டிக் கொண்டு எங்களுக்கெல்லாம் தொல்லை யைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்'' என்று கூறி அவளைக் கூர்ந்து நோக்கினார்.

''தளபதி அவர்களே! அதெல்லாம் எனக்குத் தெரி யாது. நான் திரு வஞ்சிக் களத்திலிருந்து வருகிறேன்'' என்றாள்.

சம்புவராயர் கேட்டார்: ''திருவஞ்சிக்களமா! மேற்குக் கடற்கரை ஓரத்திலல்லவா அந்த ஊர் இருக் கிறது?''

''ஆமாம்; நான் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வஞ்சிக்கு வருவது வழக்கம். என் தந்தை வஞ்சிக்கோட்டை யில் பல ஆண்டுகளாக வாழ்கிறார், தந்தையைக் கண்டு சேர மன்னர் முன்னிலையில் நான் கற்றறிந்த நடனங் களை ஆடிக் காட்டுவேன். அவர் என்னைப் பாராட்டிப் பரிசுகளை அளிப்பார். சில நாட்கள் வஞ்சியில் இருந்து விட்டுப் பிறகு என் ஊருக்குச் சென்று விடுவேன்'' என்று வஞ்சி கூறிவரும்போது,

''நீ ஏன் வஞ்சி மாநகரத்திலேயே தந்தையுடன் தங்கி யிருக்கக்கூடாது?'' என்று சம்புவராயர் கேட்டார்.

''நான் மலை நாட்டுப் பெண். காடும் மலையும் கடலும் அருவியும் சுற்றி அலையும் எனக்கு வஞ்சிநகர் பிடிக்கவில்லை. என் தந்தையை நான் வற்புறுத்தி அழைக் கிறேன், சொந்த ஊர் வந்துத் தங்கியிருக்குமாறு. வஞ்சிக் கோட்டையைவிட்டு வர அவருக்கு மனமில்லை?'' என்றாள்.

"வஞ்சி, முதலில் அமைதியாக ஒன்றும் அறியாதவள் போல் இருந்தாய். தனி உலகமே உனக்குத் தெரியாது என்று நான் நினைத்தேன். ஆனால்...'' என்று சம்புவராயர் கூறுவதற்குள், வஞ்சி இடுக்கிட்டு அஞ்சியவள் போல்; "தளபதி அவர்களே! நான் அதிகம் பேசிவிட்டதால் எல்லாம் தெரிந்தவள் என்று என்னை நீங்கள் நினைத்துவிட்டீர்கள். காடு தெரியும், மலை தெரியும். தேன் சேகரிப்பேன். யானைத் தந்தங்களை வெட்டி எடுப்பவருக்கு உதவுவேன். பாடுவேன். ஆடுவேன். காடும் மலையும் சுற்றுவதால், அச்ச உணர்வு குறைவு. அதனால் எல்லாம் அறிந்தவள் நானென்று நினைத்துவிட்டீர்கள்'' என்றாள்.

அவள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்வதா என்ற யோசனையில் இருந்தார் சம்புவராயர். ஆனால், மலைநாட்டுப் பெண்ணுக்குரிய கபடமற்ற பேச்சு அவளிடமிருந்து வருவதாகவே அவர் முடிவுக்கு வந்தார்.

"வஞ்சி உனக்கு நாட்டியம் தெரியுமா?''

"ஏதோ சிறிது அறிவேன். நடனத்துக்குத் தாளம் தட்டுபவருடன்தான் நான் வஞ்சிக்கு வந்து கொண்டிருந்தேன். தாளங்களுக்கு ஏற்ப ஆடவல்லவள் என்று என்னை எங்கள் நாட்டில் பாராட்டுவார்கள். வஞ்சிக்கோட்டைக்கு வரும் வழியில், உங்கள் வீரர்கள் எங்களை வழிமறித்து இங்கே அழைத்து வந்துவிட்டார்கள். எதற்காக அழைத்து வந்தார்கள்; ஏன் எங்களைச் சந்தேகப்பட்டார்கள் என்று எனக்கே புரியவில்லை'' என்றாள்.

"வஞ்சிக்கோட்டை இப்போது பெரும் ஆபத்திலிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?'' என்று சம்புவராயர் கேட்டார்.

தெரியாது என்பதன் அடையாளமாகத் தலையை அசைத்தாள் வஞ்சி. "எனக்கு நாட்டு வளப்பம் தெரியாது; காட்டு வளப்பம்தான் தெரியும். வழக்கம்



போல் பொழுது விடியும்போது நான் வஞ்சிக்கோட்டைக்குள் நுழைந்துவிடுவேன். என்னைக் கண்டவுடனே கோட்டைக் கதவுகளைத் திறந்துவிடுவார்கள். என்னை மிக மரியாதையுடன், மன்னரிடம் அழைத்துச் செல்வார்கள்...'' என்று அவள் கூறி, "இப்போது வஞ்சிக்கோட்டைக்கு ஆபத்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். என்ன ஆபத்து? ஏன் வந்தது. இங்கிருப்பவர்கள் சோழ வீரர்கள் என்று இப்போதுதான் தெரிந்தது. தாங்கள் சோழர் படைகளின் தளபதி என்பதையும் தெரிந்து கொண்டேன்'' என்று, இதற்குமுன் ஒன்றும் அறியாதவள் போலும், இப்போதுதான் அறிந்து கொண்டவள்போலும் பேசினாள்.

சம்புவராயர் பெரிதாகச் சிரித்தார். "பெண்ணே! என் எதிரே நின்று பேசுவதற்கே அஞ்சுவார்கள். கபடமறியாது பேசும் நீ, எங்களது விரோதியான சேரநாட்டுக் கோட்டைக்குள் செல்ல வந்திருக்கும் நீ, இவ்வளவு துணிவுடன் என்முன் நின்று பேசுகிறாய்'' என்று குறிப்பிடும்போது வஞ்சி குறுக்கிட்டு, "என்னைப் பொறுத்தருளுங்கள் தளபதி அவர்களே! நான் அப்பொழுதே சொல்லிவிட்டேன், எனக்கு நட்பு என்ற சொல்தான் தெரியும். பகைமை என்ற பேச்சே தெரியாது. இங்கே என்ன நடக்கிறது என்றே தெரியாது. சோழர்ப் படைத் தளபதியிடம் உன்னை அழைத்துச் செல்லப் போகிறோம் என்று வீரர்கள் கூறினார்கள். வரும் வழியில் இருந்த படை வீரர்களிடம் உங்களை எல்லாம் மகிழ்விக்கத்தான் இவளை அழைத்து வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். என்னால் ஆகக்கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்'' என்று மிகப் பணிவு நிறைந்த குரலில் கூறினாள் வஞ்சி.

அவள் கேட்பதற்கு மறுமொழி கூறவும், அடுத்து அவளை அரசரிடம் அழைத்துச் செல்வதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்த சம்புவராயர், அங்கே அதிக

மௌனம் நிலைக்கூடாது என்பதற்காக, அவளை பாதாதி கேசம் ஒரு முறை மீண்டும் விழிகளால் அளவெடுத்து "பெண்ணே! உன் பெயர் என்னவென்று சொன்னாய்!" என்று கேட்டார்.

"என்னை வஞ்சி என்று அழைப்பார்கள்" என்றாள்.

சம்புவராயர் மெல்ல நகைத்து, "வஞ்சி நல்ல பெயர் தான். வஞ்சிக்கோட்டை வஞ்சிநகர் வஞ்சி—எல்லாம் நல்ல பெயர்கள்" என்றார்.

"வஞ்சி என்ற பெயரை எனக்குச் சூட்டியதே எங்கள் அரசர்தான்" என்றாள். பெருமை அவள் முகத்தில் படர்ந்ததையும் படைத்தளபதி கவனிக்கத் தவறவில்லை.

"ஓ! உனக்கு அரசரிடம் அவ்வளவு செல்வாக்கா!" என்று கேட்டார்.

"ஆமாம். தளபதியாரே! நம்பிக்கைக்கு மிகவும் உரிய என் தந்தையால் ஏற்பட்டது. வஞ்சிக்கோட்டையிலேயே என்னைத் தங்கிவிடுமாறு அரசர் பல்முறை வற்புறுத்தியிருக்கிறார். நான் இணங்கவில்லை. எனக்கு நகர சந்தடியே பிடிக்காது. மலைகளிலும் மலைக்கருகே உள்ள காடுகளிலும் நான் சுதந்திரமாகத் திரிபவள். மலைச் சிகரங்களைத் தழுவும் மேகங்கள், பளிச்சிடும் மின்னல்கள். கருமேகம் பார்த்து ஆடும் மயில்கள். ஆளை பெற விழித்துத் துள்ளி ஓடும் மான்கள், கீதமிசைக்கும் குயில்கள் பாடிவரும் அலைகள் அமைதியாக கழிமுகங்கள், தோணிகள்,படகுகள் தாவும் மந்திகள்,அழகாக அசைந்து வரும் யானைகள், தளால் விழு வேங்கைகள்—இவற்றைப் பார்த்ததும் நான் நடனம் பயின்றேன். நான் உயிருக்குயிராய் நேசிப்பது நாட்டியக் கலையைத்தான்" என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் போது சம்புவராயர் குறுக்கிட்டு "நீ நன்றாக ஆடுவாயா?" என்று கேட்டார்.



"நன்றாக - சிறப்பாக என்று எனக்குச் சொல்லத் தெரியாது. என் நடனத்தை மெய் மறந்து ரசிப்பார் மன்னர். நடனம் முடிந்தவுடன் எனக்கு வெகுமதியும் அளிப்பார். பரிசின் மதிப்புக் கூடத் தெரியாது. என் ஊருக்குச் சென்று, ஊருக்கு அருகிலுள்ள நகரத்தில் வாழும் வணிகர்களிடம் பரிசுப் பொருள்களைக்கொடுத்து எனக்கு வேண்டிய உணவுப் பொருள், ஆடை இவற்றை மட்டும் பெற்றுக் கொள்வேன். மகிழ்ச்சியாகக் காலந் தள்ளுவேன்" என்று அவள் கூறினாள்.

அவள் கூறியவற்றை மிகக் கவனமாக அமைதியாகக் கேட்டுக் கொண்ட அவர் ஒரு கேள்வியைக் கேட்டார் "இப்போது நீ வஞ்சிக்கோட்டைக்குச் செல்லமுடியாதே. என்ன செய்வாய்?"

இந்தக் கேள்விக்கு நேரிடையாக மறுமொழி கூற வஞ்சியால் இயலவில்லை. ஒரு கணம் சிந்தித்தாள். மறு கணம்,

"வஞ்சிக் கோட்டைக்குள் செல்ல முடியாவிட்டால் நான் உடனே திரும்பிப் போய் விடுவேன்" என்றாள்.

சம்புவராயர் அவளை மிகவும் கூர்ந்துக் கவனித்து, "காடு மலையெல்லாம் கடந்து வந்திருக்கிறாய். பல மாதங்களுக்கு ஒரு முறை தான் வருவதாய்ச் சொல்லியிருக்கிறாய். உன் மதிப்புமிகு மன்னர் ஆபத்தில் சிக்கியிருக்கும்போது, இந்த ஆபத்தான நேரத்தில் உன் தந்தையைக் கோட்டைக்குள் விட்டுச் செல்வதும் சரிதானா என்று யோசித்தாயா?" என்று கேட்டார்.

சம்புவராயருடைய கூர்மையான அறிவைப் பார்த்து வஞ்சி வியந்தாள். "சாதுர்யமாகப் பேசுகிறார். நம்மை வலையில் சிக்க வைக்கும் அளவிற்கு அவரது பேச்சு இருக்கிறது. படைத் தலைவர் இப்படிப் பேச வேண்டிய அவசியமேயில்லை. தோள் வலிமையும், அறிவுக் கூர்மையும்

இருப்பதால்தான் அவர் பெரிய சாம்ராஜ்யத்தின் தளபதியாக இருக்கிறார்'' என்று அவன் சிந்தனை செய்தான்.

வஞ்சி ஒருமுறை அவருடைய விழிகளை நேருக்கு நேர் சந்தித்து, ''படைத்தலைவர் அவர்களே, நான் ஒரு பெண் ஆராய்ந்தும் ஆழ்ந்தும் அறிந்தும் பேசக் கூடிய சக்தியற்றவள். காதல், கனிவு, பாசம் எல்லாம் எனக்குத் தெரியும். அமைதி நிலவிய சேர நாட்டிற்கு எந்த விதத் தடையும் பயமுமில்லாமல் இதுவரை வந்து கொண்டிருக்கிறேன். இத்தகைய ஆபத்து வஞ்சிக் கோட்டைக்கு ஏற்படுமென்று நான் கனவுகூடக் காணவில்லை. திடீரென்று சேர நாட்டினர், சோழர்களுக்கு இழைத்த தீங்கு யாது? எல்லைப் புறத்துக் கிராமங்களில் ஊடுருவினார்களா? பசுக் கூட்டங்களைக் கவர்ந்தனரா? தூதுவரைச் சிறைப் படுத்தினார்களா? சோழர்களின் மேலதிகாரத்தை ஏற்றுத் திறைப் பணம் செலுத்தி வந்ததையும் நானறிவேன். சோழர்களுக்கும், சேரர்களுக்கும் பகை என்பதை நான் அறிந்திருந்தால், வஞ்சிக் கோட்டையை நோக்கி வந்திருக்கமாட்டேன். போர்க் காலத்தில் எதிரிகளிடம் வலிய வந்து ஒரு பெண் சிக்கிக் கொள்ள ஆசைப்படுவாளா?'' என்று குரலைத் தாழ்த்தி, பணிவுடன் அறியாமையும் அதில் கலந்திருக்கப் பேசினாள்.

மீண்டும் அவள் அதே குரலில், ''கோட்டைக்கு வெளியே முற்றுகையிட்டுச் சோழர்ப் படைகள் காத்திருக்கிறார்கள் என்றால் நேற்று இரவு வழியில் ஓரிடத்தில் தங்கி, கொண்டு வந்திருந்த தேனையும் தினைமாவையும் உண்டு தீர்த்திருக்க மாட்டேன். காலையிலேயே கோட்டைக்குள் நுழைந்து விடுவோம், அறுசுவை உண்டி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அப்படிச் செய்தேன். பாவம், தாளம் தட்டுபவர் தான் பசியால் மிகவும் களைத்துப் போயிருப்பார். அவருக்கு அதிர்ச்சி வேறு'' என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.



அஞ்சாநெஞ்சமுடைய சம்புவராயர் பரிதாப உணர்ச்சி கொண்டார். ''வஞ்சி, நீ கபடமற்றவள். வஞ்சிக்கோட்டைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து உண்மையிலேயே உனக்குத் தெரியாது என்பதைத் தெரிந்து கொண்டேன். நாங்கள் அநியாயமாக சேர நாட்டின் மீது படை எடுத்து வரவில்லை. நீ கேட்டாயே எல்லைப் புறத்துக் கிராமங்களைக் கவர்ந்தார்களா? பசு மாடுகளை அபகரித்தார்களா என்று; சேரர்கள் ஆண்மையுடன் அவ்வாறு செய்திருந்தால் அந்த இடத்திலேயே அவர்களை முறியடித்திருப்போம்.

''சோழ நாட்டுடன் பகைகொள்ள வேண்டும் என்று திட்டமிட்டே சேரர்கள் திறைப் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டனர். இரகசியமாக படைகளைச் சேர்க்கத் தொடங்கிவிட்டனர். நாங்கள் அவற்றைக் கவனித்துத் தான் வந்தோம். கடைசியாக எங்கள் மன்னரை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கங்காபுரியிலிருந்து நடனப் பெண்ணை அபகரித்து வந்து விட்டனர்.

''சோழ நாட்டின் மானப் பிரச்னையாகிவிட்டது. சக்கரவர்த்தி அடங்கா சினங் கொண்டார். சோழநாட்டு தூதரை அவர் சிறைப்படுத்தினர். அவமானப்படுத்தினர். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. வஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. எனக்கே என்னிடம் ஏற்பட்டுள்ள பொறுமையைக் கண்டு வியப்பு ஏற்பட்டுள்ளது. உன்னை நான் இதற்கு முன்பு அறியேன். உன்னிடம் இவ்வளவும் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்படி ஏற்பட்டதென்றே தெரியவில்லை. உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. விரோதி நாட்டிற்கு வேண்டியவள் என்பதைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. உன்னைப் போன்ற ஓர் பெண் சோழ நாட்டிற்கு மிகவும் தேவை என்பதை உணர்ந்து கொண்டேன். வாள் முனையில் பிரச்னையைத் தீர்ப்பது

ஒன்றைத்தவிர வேறு அறியாத நான் என்னிடம் இவ்வளவு அமைதியாகப் பேசுவது எனக்கே வியப்பாக இருக்கிறது. இவ்வளவு நேரம் உன்னுடன் பேசிக் கொண்டிருக்காமல் உடனே உன்னை சக்கரவர்த்திகளிடம் அழைத்துச் சென்றிருக்க வேண்டும். உம்; நாம் உடனே சக்கரவர்த்திகளைச் சந்திப்போம்'' என்றார்.

வஞ்சி திடுக்கிட்டாள். 'சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டுமா? ஆபத்து நெருங்குகிறது' என்று ஒரு கணம் நினைத்தாள். பிறகு தளபதியை நோக்கி, ''என்னைப் பொறுத்தருளுங்கள்; தங்களிடம் நான் ஒன்று விண்ணப்பிக்கலாமா?'' என்று கேட்டாள்.

''நன்றாகக் கேள் வஞ்சி'' என்றார் சம்புவராயர்.

''சோழ நாட்டுப் படைத் தலைவர் அவர்களே! இந்தப் போர் எதற்கு என்பதைப் புரிந்து கொண்டேன். கங்காபுரியிலிருந்து நாட்டியப் பெண் ஒருத்தியைச் சேர மன்னர் ஏன் அபகரித்து வந்தார் என்று தெரியவில்லை. பசுபதீச்வரர் கோயிலில் நடனமாடும் பெண்ணைப் பற்றிச் சமீபத்தில் கேள்விப்பட்டேன். என்னைவிட நாட்டியக் கலையில் திறமை மிகுந்தவள்; அதனால் அவளைக் கங்காபுரியிலிருந்து எங்கள் அரசர் அழைத்து வந்திருக்கிறார் என்று நினைத்தேன், நான் அதைப் பற்றி அறிய அதிகம் ஈடுபாடு கொள்ளவில்லை. சோழ நாட்டிற்குச் சென்று நாட்டியக் கலையை முறையாகக் கற்க வேண்டும் என்று நான் பலமுறை நினைத்ததுண்டு. தளபதி அவர்களே! எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்தப் போரை நிறுத்த என்னால் ஆன உதவியைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். என்னைக் கோட்டைக்குள் அனுப்புங்கள், சேர மன்னரிடம் தக்கபடி எடுத்துரைக்க ஆயத்தமாக இருக்கிறேன்'' என்றாள்.

சம்புவராயர் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தார். 'இவளைப் புரிந்து கொள்ள முடியவில்லையே! ஒரு சமயம் தனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறாள், ஆனால் எல்லாம்



தெரிந்தவள் போல் பிரச்சினையைத் தீர்க்க முன் நிற்கிறேன் என்கிறாள். கள்ளம் கபடமற்றவள் போல் தோன்றுகிறாள். ஆனால் உள்ளுக்குள் ஏதோ ஒன்றை மறைத்துப் பேசுவதுபோலும் தோன்றுகிறது. இவளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கு இல்லாமல் போய் விட்டதா? இனியும் இவளுடன் நாம் தொடர்ந்துப் பேசக் கூடாது' என்ற எண்ணத்துடன், ''வஞ்சி நீ கேட்பது எல்லாம் பெரியபெரிய செய்தியே. உடனே அதற்கு முடிவு எடுக்கும் அதிகாரம் என்னிடமில்லை. நீ வெகுதூரம் நடந்து வந்திருக்கிறாய். களைத்துப் போய் வந்திருக்கிறாய். பசியுடன் இருக்கிறாய். நீ சென்று நீராடிவிட்டு, காலை உணவு அருந்திச் சற்று இளைப்பாறு. நான் சக்கரவர்த்திகளிடம் சென்று உன்னைப்பற்றித் தெரிந்து அவரிடம உன்னை அழைத்துவர அனுமதி பெற்று வருகிறேன். எனக்கு ஒன்று தோன்றுகிறது. உன்னைப் பார்த்தாலே எங்கள் வீரர்கள் மிக உற்சாகம் கொள்வார்கள்'' என்று சொல்லி நிறுத்தியபோது, வஞ்சி துணிவுடன் குறுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள் தளபதி அவர்களே! நான் பெண் என்பதால் என்னைப் பார்த்த உடனே சோழ வீரர்கள் உற்சாகம் கொள்வார்கள் என்கிறீர்களா? அல்லது என்னை அவர்கள்முன் நடனமாடச் செய்து அவர்களை மேலும் உற்சாகமடையச் செய்வது உங்கள் எண்ணமா? என் தொழில் நடனமாடுவது அன்று. சேரமன்னர் எதிரே அன்றி மற்றவர்கள் முன் நகரத்தில் ஆடியது கிடையாது. சோழ நாட்டுக் கண்ணகி எங்கள் நாட்டில்தான் தெய்வமானாள். உங்கள் ஊரில் அந்தக் கற்புக்கரசிக்குக் கோயில் இல்லை. எங்கள் நாட்டில் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடுகிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்'' என்றாள்.

''வஞ்சி! நீ தவறாக நினைத்துவிட்டாய். அழகான பெண் என்பதால் உன்னைத் தவறாகப் பயன்படுத்தும் கீழ்த்தர எண்ணம் எங்களுக்கில்லை. சோர்வுற்றிருக்கும் எல்லா வீரர்களுக்கும் உனது நடனத்தின் மூலம் புத்துயிர்

அளிக்கவேண்டும் என்பதுதான் என் எண்ணம். பெண்ணே! நீ சற்று ஓய்வு எடுத்துக்கொள்'' என்று கூறி, கையைத்தட்டி காவல் வீரர்களை, அழைத்து ''வஞ்சிக்குத் தனியாக ஓரிடம் தந்து, அவளுக்கு வேண்டியவற்றை அளித்து மிகக் கவனமாக உபசரித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நமது வீரர்கள் இருக்குமிடத்திலிருந்து மிகவும் தள்ளித் தனியிடம் தாருங்கள். அவளுடன் வந்துள்ள தாளம் தட்டுபவரையும் தங்கியிருக்கச் செய்யுங்கள். எந்தவிதமான குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இது என் கண்டிப்பான கட்டளை. பிறகு நான் சொல்லி அனுப்பியவுடன் சக்கரவர்த்தியிடம் அவளை அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

வஞ்சிக்கு ஒருபுறம் மகிழ்ச்சியும், மற்றொரு புறம் அடுத்து என்ன நேரப் போகிறதோ என்ற கவலையும் சூழ்ந்திருந்தது.

# 14

இரண்டு வீரர்கள் முன்னே செல்ல இரண்டு வீரர்கள் பின்னே தொடர, வஞ்சியும் தாளம் தட்டுபவரும், சோழ சக்கரவர்த்தி குலோத்துங்க சோழர் வீற்றிருக்கும் இடம் நோக்கிச் சென்றனர்.

'புலிக் குகைக்குள்ளே செல்லும் ஆடுபோன்ற மன நிலை வஞ்சிக்கு. நாமே வலியச் சென்று சிக்கிக் கொள்கிறோமோ, என்றும் தோன்றியது.

'எந்த ஒரு பெண்ணிற்காக, சோழமன்னர் வஞ்சிக் கோட்டை மீது படை எடுத்து வந்தாரோ அந்தப் பெண்ணே நேரே வந்துவிட்டாள் என்றால்...?

'கோட்டை முற்றுகையை நிறுத்திவிட்டு என்னை அழைத்துக் கொண்டு கங்காபுரிக்கே திரும்பிவிடலாம்.



அப்படிச் செய்தால் ஒருவிதத்தில் மகிழ்ச்சியே. நம்முடைய தியாகத்தினால் வஞ்சிக்கோட்டைக்குச் சேதம் ஏற்படுவதையும், சேர வீரர்கள் மடிவதையும் தடுக்கலாம்.

'ஆனால் மிகத் தந்திரத்துடன் ஒருபுறம் என்னையும் கங்காபுரிக்கு அழைத்துச் சென்று போரையும் நிறுத்தாமல் தொடர்ந்து, வஞ்சிக்கோட்டையைச் சிதைக்க முற்பட்டால்...சோழ மன்னருக்கு இரட்டிப்பு வெற்றியல்லவா?'

வஞ்சியால் அதற்குமேல் நினைக்கத் தோன்றவில்லை

மற்றொரு யோசனை பளிச்சிட்டது. 'சோழ மன்னர் என்னை அடையாளங் கண்டு கொண்டுவிட்டார் என்று தோன்றியவுடனேயே, அவரது காலடியில் வீழ்ந்து நமது சாகசங்களை, கண்ணீரை விம்மலைப் பயன்படுத்தி ஓர் வேண்டுகோளை விடுத்தால்...? 'நான் வேண்டுமென்றால் வஞ்சிக்கோட்டையைத் தாக்கக் கூடாது' என்று கேட்டுப் பார்ப்போம், சோழ மன்னர் கொடுத்த வாக்கை மீறமாட்டார். அப்படி ஒருவேளை மீறும் எண்ணம் அவருக்கு இருந்தால் முதலிலேயே அவருக்கு நமது தியாக எண்ணத்தைச் சொல்லிவிடுவோம்—உயிரற்ற உடலைத் தான் கங்காபுரிக்கு நீங்கள் எடுத்துச் செல்ல முடியும்என்று எச்சரித்து விடுவோம். அவர் நமது கோரிக்கையை ஏற்காமல் என்ன செய்ய முடியும்?'

அதுபோல் எண்ணியவுடன் வஞ்சிக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

புறப்படும் முன்பு தாளம் தட்டுபவரிடம் தன் உருவ மாற்றத்தைப் பற்றி உறுதி செய்து கொண்டாள்.

''பழைய மயில்விழி நீதானா என்று எனக்கே வியப்பாக இருக்கிறது'' என்று தாளம் தட்டுபவர் உறுதி அத்தாட்சி கொடுத்துவிட்டார்.

* * *

சோழ சக்கரவர்த்திகள் எதிரே வஞ்சி சென்று நின்றாள். நாகம் கட்டுப்பவர் வெளியே நிறுத்தப்பட்டார்.

சற்றுத் தொலைவிலேயே வஞ்சி நிறுத்தப்பட்டாள்.

சோழ மன்னரைத் தொலைவிலிருந்துப் பார்க்கும் போதே வஞ்சிக்கு நடுக்கம் ஏற்பட்டது.

கங்காபுரியில், அவள், சோழ அரசரைத் தினமும் பார்த்திருக்கிறாள். ஆனால் அவர் எப்போதோ ஒரு முறைதான் மரகதத்துடன் தன்னைப் பார்த்திருக்கிறார். நடனத்தைப் பாராட்டியிருக்கிறார்: இப்பொழுது நெருக்கமாகப் பார்க்கும்போதும் என்னை அடையாளம் புரிந்து கொண்டால்...?

அவர் தொலைவிலிருந்து கேட்கிறார்: "ஓகோ! நீ தான் வஞ்சி என்ற பெண்ணா?"

வஞ்சி தலையைக் குனிந்து கொண்டு முகத்தைக் காட்டாமல் தலையை மட்டும் அசைத்தாள்.

"நீ ஒரு நடனப் பெண்ணாமே. நன்றாக நடனமாடுவாயாமே?" என்று சோழ அரசர் கேட்டார். உடனே அதற்கு மறுமொழி கூறாமல், வஞ்சி குனிந்த தலை நிமிராமல் இருந்தாள்.

"சேர அரசரிடம் செல்வாக்கு உனக்கு அதிகமிருக்கிறது என்று சொன்னார்கள்" சக்கரவர்த்தி தொடர்ந்து கேட்டார்.

குனிந்த தலை நிமிராமல், "ஏதோ தெரிந்ததை ஆடுவேன். மலை நாட்டு மங்கைக்கு நாட்டியம் என்ன தெரியும்?" என்று மெல்லக் கூறினாள் வஞ்சி.

"இப்பொழுது நீ ஆடுவாயா?"—வஞ்சி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை.



"நான் காட்டிலும், மலையிலும் வாழும் நாகரிகம் அதிகம் அறியாப் பெண். என் நாட்டியத்தைச் சேர மன்னர் ரசித்துப் பாராட்டுவார். தங்கள் முன்னால்..." என்று அவள் அரைகுறையாகப் பேசி நிறுத்தினாள். சோழ அரசரிடமிருந்து தன் பேச்சிற்கான எதிரொலி எவ்வாறு அமைகிறது என்பதைக் கீழ்க் கண்ணால் நோக்க முயன்றாள்.

குலோத்துங்க சோழர் மெல்ல நகைத்தார். "மலை நாட்டுப் பெண்ணே! சேரமன்னர் உன் நடனத்தை ரசிக்கும்போது நான் ரசிக்கக்கூடாதா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வியை வஞ்சி எதிர்பார்க்கவில்லை. மீண்டும் அரசர் கேட்டார்: "பெண்ணே, உன் பெயர் என்ன?"

மயில்விழி என்று சொல்ல வாயெடுத்தவள் தன்னை மிகச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு, "வஞ்சி" என்றாள்.

"வஞ்சி! அழகான பெயர். வஞ்சிக்கோட்டையின் நினைவாக அந்தப் பெயரை உன் பெற்றோர் சூட்டினரா? வஞ்சி! அஞ்சாமல் பேசலாம். விரோதி நாட்டிற்கு மிக நெருங்கியவள் என்பதனால் உன்மீது எங்களுக்குக் கோபமில்லை. நடனக்கலை அறிந்தவள் என்பதனால் உன்னைச் சந்தித்துப் பேச அனுமதியளித்தேன். எங்கள் வீரர்கள் பல காரணங்களால் சோர்வுற்றிருக்கிறார்கள். தோள்வலிமை மிகுந்த அவர்கள், கலைரசனையும்மிக்கவர்கள். அவர்கள் உன் நடனத்தை மிக ரசிப்பார்கள் வஞ்சி! அவர்களுக்கு நீ நடனவிருந்தளிக்க வேண்டும்." என்றார்.

வஞ்சி ஏதோ கூற முயன்றாள்.

"சொல்லு, வஞ்சி சொல்லு. என்ன சொல்ல விரும்புகிறாயோ அஞ்சாமல் சொல்லு. உன்னைப் பார்த்த உடனே சம்புவராயருக்கு மிகப் பிடித்துவிட்டது. 'அவர் அவ்வளவு சுலபமாக ஒருவரை ஏற்கமாட்டார்...'" என்றார் மன்னர்.

''நான் மலைநாட்டுப் பெண். நகர வாழ்க்கையையும் அந்த முறையையும் அறியாதவள். ஆறுமாதங்களுக்கு ஒரு முறை என் தந்தையைக் காண வஞ்சிக்கோட்டைக்கு வருவேன். இன்று காலையிலேயே நான் வஞ்சிக் கோட்டைக்குள் சென்றிருக்க வேண்டும். என் நடனத்தை ரசிப்பதால் சோழ வீரர்களுக்குப் புத்துணர்வு ஏற்படும் என்றால் நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஆடச் சித்தமாயிருக்கிறேன். அதற்குப் பிறகு என்னைக் கோட்டைக்குள் செல்ல அனுமதிக்க வேண்டுமாறு பிரார்த்திக்கிறேன்'' என்றாள்.

சோழ சக்கரவர்த்தி பெரிதாக நகைத்தார். ''ஆகா; நாளைக் காலை நீ வஞ்சிக்கோட்டைக்குள் செல்லலாம்'' என்றார்.

''இரவு நான் இங்குத் தங்க வேண்டுமா'' கவலை நிறைந்த குரலில் கேட்டாள் வஞ்சி.

''அதற்காகப் பயப்பட வேண்டாம். உனக்கு ஒரு சிறு களங்கமும் சோழ வீரர்களால் ஏற்படாது என்று நான் உறுதி கூறுகிறேன்'' என்றார் அரசர்.

இரவு சூழ்ந்தது. சோழவீரர்கள். பாசறையில் விளக்குகள் ஆங்காங்கே ஏற்றப்பட்டு இரவைப் பகலாக்க முயன்றன. இரவு உணவை உடனே முடித்துக் கொண்டு சோழவீரர்கள் ஆற்றங்கரை மணல் வெளியில் வந்தமர்ந்தனர்.

நடுவே ஒரு மேடை அமைக்கப்பட்டது. எதிரே மாமன்னர் குலோத்துங்க சோழ தேவரும், தளபதி சூரியன் சம்புவராயரும் அமர்ந்திருந்தனர். மேடையின் இருபுறமும் பெரிய அகல்விளக்குகள் ஏற்றப்பட்டன.

வஞ்சி மேடைக்கு வந்தாள். அரசருக்கும் தளபதிக்கும் மேடை மீதிருந்தே வணக்கம் தெரிவித்தாள்.

மேடை மீது வலக்காலை முன்னதாகத் தூக்கி வைத்து மிதித்து, நடனத்திற்காக அமைக்கப்பட்ட மேடையிலே ஏறினாள்.



குலோத்துங்கர் இதைக் கவனித்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

வீரர்களுக்கு வணக்கம் தெரிவிக்கும் வகையில் கையசைத்தாள். வீரர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்.

ஒளி சரியான இடத்தில் இல்லாததால் மேடையிலே அவளது நிழல் நீண்டு வீழ்ந்தது. தாளம் தட்டுபவரின் தாள ஓசை எழுந்தது. அதற்கேற்ப வஞ்சி சதங்கை ஒலியுடன் பாத தாளம் ஒலிக்க ஆடினாள்.

''மான் போல் துள்ளினாள். மதக்களிறுபோல் அசைந்து நடந்தாள். மின்னல் ஒளி ஒருகணம் நடனத்தில் பளிச்சிட்டது. கரங்கள் பல பாவங்களை வெளியிட்டன. இடையை ஒயிலாக அசைத்தாள். காளிபோல் ஆடினாள்.

தெய்வத் துதிப்பாடல்களை மெல்லப் பாடி அதற்கேற்ப ஆடினாள்.

குலோத்துங்க சோழர், தன் அருகே இருந்த சம்புவராயரிடம் மெல்லப் பேசினார். ''இதோ வஞ்சி ஆடுகிறாளே இதற்குக் கொடுகொட்டி என்று பெயர். சிவபெருமான் திரிபுரம் எரித்ததைக் கண்டு உமையவள் மகிழ்ந்திருக்க சிவன் ஆடிய அந்த நடனத்தை மலை நாட்டுப்பெண்ணான இவள் எவ்வாறு அறிவாள்?''

''இதோ! இந்த ஆட்டம் திருமால் ஆடியது. அல்லியத் தொகுதி என்று பெயர். யானையின் தந்தத்தை ஒடிப்பதற்காகத் திருமால் ஆடிய ஆட்டம். சம்புவராயரே! இவள் சாதாரண மலை நாட்டு மங்கை அல்லள். இவளே சொல்லிக் கொள்வதுபோல் ஏதோ நடனத்தைச் சிறிது கற்றவளல்லள் நடனக் கலை சிறப்பாகக் கைவரப் பெற்றவள்'' என்றார்.

"சோழ நாட்டிற்கு வந்து நடனக்கலையில் தேர்ச்சியடையத் தனக்கு மிகுந்த ஆசையிருப்பதாக அவள் சொன்னாள் அரசே?" என்றார் சம்புவராயர்.

"ஓஹோ! நாம் இவளைச் சோழ நாட்டிற்கு அழைத்துச் சென்றுவிடலாமே!" என்றார் சோழ சக்கரவர்த்தி.

நடனம் முடிந்தது. வஞ்சி ஆடிய சிறப்பான நடனத்திலே மெய்மறந்திருந்த சோழ வீரர்கள் தங்கள் பாராட்டுதலை கரவொலி எழுப்பியதன் மூலம் அவ்வப்போது ஆரவரித்ததன் மூலம் புலப்படுத்திக் கொண்டனர்.

நடனம் முடியுமுன்பே சோழ மன்னர் சம்புவராயருடன் எழுந்துச் சென்றுவிட்டார்.

வஞ்சி இரவு பயமின்றித் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. தனது நாட்டியத்தைச் சோழ மன்னர் உன்னிப்பாகக் கவனித்து ரசித்ததை வஞ்சி கண்டாள். அருகே இருந்த தளபதியிடம் அவ்வப்போது ஏதோ பேசிக் கொண்டிருந்ததையும் கண்டாள். நடனம் முடியும் முன், பாராட்டி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் எழுந்து போய்விட்டார்; அதன் உட்பொருள் தான் அவளுக்குப் புரியவில்லை.

இரவு அவளுக்கு உறக்கம் வரவில்லை. தாளம் தட்டுபவர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

'விடிந்தவுடன். வஞ்சிக் கோட்டைக்குத் தன்னை அனுப்பிவைப்பதாக சோழ மன்னர் சொல்லியிருக்கிறார். சொல்லைத் தட்டமாட்டார் என்றுதான் நினைக்கிறேன், பிறகு இறைவன் விட்டவழி' என்ற எண்ணத்திலும், மேலும் பற்பல சிந்தனைகளிலும் அவள் ஆழ்ந்தாள்.

ஓர் எண்ணம் அவளை உறுத்தியது.

ஏதோ—தப்புத் தாளத்தைத் தட்டச் செய்து ஆடியிருக்கலாம், முறையாக நடனம் ஆடத்தெரியாதவள்



என்பதைப் புலப்படுத்தாமல் நாம் மேடை ஏறியதுமே ஏன் திறமையைக் காட்ட முயன்றோம்? அதுவே தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ' என்று கவலைப்பட்டாள். அதே சிந்தனையில் சுழன்றவள் விடிகாலை நேரத்தில் கண்ணயர்ந்தாள்.

தாளம் தட்டுபவர் அவளை எழுப்பினார். "வஞ்சி, சோழமன்னர் அழைப்பதாக வீரர்கள் வந்துள்ளனர். எழுந்து, குளித்து உடனே புறப்பட வேண்டுமாம்" என்றார்.

பரபரப்புடன் எழுந்த வஞ்சிக்கு முதல் நாள் இரவின் நினைவுகள் இன்னும் மாறவில்லை. என்ன நேருமோ என்ற கவலை அவளை அழுத்தியது.

"வஞ்சி நேற்று நீ ஆடிய நடனத்தில் நாங்கள் மெய் மறந்தோம். நாள்தோறும் நீ ஆடினால் இரண்டு மடங்கு பலத்தைப் பெறுவோம். உன் நடனம் முடியும் வரை இருக்க முடியவில்லை. வஞ்சிக் கோட்டையை உடனே சூழ்ந்து கொண்டு தாக்குவதற்கான வழி வகைகளைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டியிருந்தது. சம்புவராயரும், நானும் சென்றுவிட்டோம். வஞ்சிக்கோட்டை நாளைக்குள் வீழ்ந்துவிடும். சோழ நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டுவிடும். நீயும் சோழ நாட்டிற்கு வந்துவிட வேண்டியதுதான்" என்று கூறி அவளைக் கூர்ந்து நோக்கினார். மன்னரின் மிக அருகே அவள் இப்போது நின்று கொண்டிருந்தாள். உள்ளத்தில் அச்சம் மெல்ல மெல்லச் சூழ்ந்து கொண்டிருந்தது. அதை வெளிக்குப்புலப்படுத்திக் கொள்ளாமல், குரலில் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "சோழ சக்கரவர்த்திகளே! நேற்றுத் தாங்கள் அளித்த வாக்குறுதியை நினைவுப் படுத்தலாமா?" என்றாள்.

தன் வாக்குறுதியை மறந்து விட்டவர் போல் அவர் புருவத்தைச் சுருக்கிக் கொண்டார்.

"காலையிலேயே என்னை வஞ்சிக்கோட்டைக்குச் செல்ல அனுமதிப்பதாகக் கூறியிருந்தீர்கள். அதனால்தான் இரவு தங்கி நடனமாடச் சொன்னீர்கள். இப்போது சோழர் படைகள் வஞ்சிக்கோட்டையைத் தாக்கி வீழ்த்தப் புறப்படுகின்றன. என்னைச் சோழ நாட்டிற்கு அழைத்துச் செல்லப் போவதாகக் கூறுகிறீர்கள். வயது முதிர்ந்த தந்தையை நான் காண வேண்டாமா? அதற்காகத்தானே காடு, மலை கடந்து வந்தேன்... நான் இவ்வாறு பேசுவதற்குப் பொறுத்தருளுங்கள்" என்றாள். அவள் நெஞ்சு உண்மையிலேயே தழுதழுத்தது.

குலோத்துங்கன் சிரித்தார்; அதில் குறும்புத்தனம் இருந்தது.

"ஆமாம்? நான் நேற்றுச் சொன்னது உண்மைதான். உன் தந்தையை மட்டும்தான் பார்க்க வேண்டுமா? சேர மன்னரைச் சந்திக்க வேண்டாமா? அவரிட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டாமா!" என்று கூறி அவள் இதயத்துள் புதைந்து கிடப்பதை அறிய முற்படுபவர்போல் கூர்ந்து நோக்கினார்.

வஞ்சியின் முகம் மாறுவதை அரசர் கண்டுவிட்டார்.

"வஞ்சி! நடனக்கலையில் நீ சிறந்தவள் என்பதை நான் நேற்று அறிந்து கொண்டேன். ஒன்றுமே தெரியாதவள் போல் நடித்தாய். நடிப்புக் கலையிலும் நீ சிறந்தவள் என்பதைப் புரிந்து கொண்டே. வீரசோமன் அறிவாளி. சோழர்ப் படைகளின் இடையே சென்று உளவறிய உன்னைத் தேர்ந்தெடுத்த அவன் திட்டத்தைப் பாராட்டவேண்டும். ஆனால் சோழ ஒற்றர்கள் அவ்வளவு முட்டாள்களல்லர். நீ கோட்டைக்குள்ளிருந்து வந்த வழியைக் கண்டு பிடித்துவிட்டனர். அந்த வழியாகவே கோட்டைக்குள் செல்லப் படைகள் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று இரவு நுழைந்துவிடுவர். சேர வில்லவர்கள் அந்த இடத்தில் விஷ அம்பைக் கொண்டு



தாக்க முடியாது" என்று கூறும்போது அவரது முகம் கடுமையாவதை வஞ்சி கண்டுவிட்டாள்.

வஞ்சி திடுக்கிட்டாள். அவரது பாதங்களில் வீழ்ந்தாள். "சோழ சக்கரவர்த்திகளே! உங்கள் திறமையை வஞ்சி நகரமே புகழ்கிறது. நான்கு திசையும் போற்றிப் புகழும்போது சேர நாட்டவர்கள் அதை அறியாமல் எதிர்க்க முற்படுவது அறிவற்ற செய்கை. நான் தங்கள் உப்பைத் தின்றவள். மரகதவல்லியிடமிருந்துக் கலையைக் கற்றவள். ஆனாலும், வஞ்சிக் கோட்டைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் வேளையில் நான் இங்கிருப்பது, சேர அரசருக்குத் துரோகம் செய்ததாகும். கோட்டைக்குள் செல்ல என்னை அனுமதியுங்கள்" என்று வேண்டினாள்.

"வஞ்சி என்ற புனைப் பெயர் பூண்ட மயில்விழி! சோழ நாட்டிற்குத் துரோகம் செய்தது எந்த விதத்தில் நியாயம்?" மன்னர் கேட்டார்.

"நான் துரோகம் செய்யவில்லை. எல்லா சக்திகளையும் வென்றுவிடும் காதல் என்னை ஆட்டுவித்தது. வஞ்சிக்குச் செல்லப் போகிறோம் என்று எனக்குத் தெரியாது. அதனால் நான் எப்படித் துரோகம் செய்தவளாவேன்? சேர அரசரிடம் நான் வாக்குக் கொடுத்து வந்திருக்கிறேன். உடனே திரும்பி வருவதாக, என்னை அனுமதியுங்கள். எப்படியும் வஞ்சிக்கோட்டைக்குள் தங்கள் படை வீரர்கள் நுழையப் போகிறார்கள். கைப்பற்றப் போகிறார்கள். அப்போது என்னைத் தாங்கள் சிறைப் பிடித்துக்கூட அழைத்துச் செல்லலாம். நான் வாக்குத் தவறிய குற்றம் செய்தவளாக மாட்டேன். அதே போல் உங்கள் விருப்பப்படி சோழ நாட்டிற்கும் கலைத் தொண்டாற்ற வந்து விடுவேன்... கருணை செய்யுங்கள்" என்று விம்மினாள்.

"மயில்விழி! பகைவர்களிடம் சிக்கிய பகைவரை எளிதில் விட்டு விடுவோமா? ஆனால் நான் கொடுத்த வாக்கை மீற விரும்பவில்லை. அதுபோல் நீயும் ஒரு வாக்குக் கொடுக்கவேண்டும். சத்தியம் செய்து கொடுக்கவேண்டும். ஒரு நிபந்தனையின் பேரில் உன்னை மீண்டும் வஞ்சிக் கோட்டைக்குச் செல்ல அனுமதிக்கிறேன். கோட்டைக்குச் சென்று நாளைக் காலையிலேயே திரும்பி வந்துவிட வேண்டும். போர் முடியுமுன்பே நீ கங்காபுரிக்குச் சென்று கங்கை கொண்ட சோழீசர் முன்பு சந்தியா நிருத்யம் ஆடும் பொறுப்பை ஏற்க வேண்டும். அந்த உறுதியைக் கொடுத்துத் திரும்பிச் செல்...!" என்றார்.

வஞ்சியாக மாறியிருந்த மயில்விழி ஒரு கணம் யோசித்தாள். விழி நீரைத் துடைத்துக் கொண்டாள். குலோத்துங்கன் பாதங்களைத் தொட்டு வணங்கி, "அப்படியே செய்கிறேன், உறுதி" என்றாள்.

மயில்விழியை வஞ்சிக் கோட்டைக்குச் செல்ல, சோழ சக்கரவர்த்தி குலோத்துங்கன் அனுமதித்தார்.

# 15

வஞ்சி கூறியவற்றை, சேரமன்னர் வீரசோமன் பதட்டப்படாமலும், உணர்ச்சி வசப்படாமலும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

வஞ்சிக் கோட்டையின் மேற்கு வாயிலிலிருந்துப் புறப்பட்டது முதல் குலோத்துங்க சோழரிடம் வாக்களித்துத் திரும்பிய வரையில் நடந்தவை, பேசியவை ஒன்றுவிடாமல் வஞ்சி கூறியதைக் கேட்டு வீரசோமன் பரபரப்படையவில்லை.



18584
3469356

"சோழ மன்னர் மிகக் கூர்மையான மதிபடைத்தவர். சோழ வீரர்களின் எண்ணிக்கையை, படைப்பலத்தை அறிய நான் போனது அவ்வளவு சரியல்லவென்றுதான் தோன்றுகிறது. சோழர்களிடம் நான் சிக்கிக் கொள்ளுவேன் என்பதை எதிர்பார்த்துத்தான் சென்றேன். சோழ அரசர் ஒருவலையில் இரண்டு மான்களைப்பிடித்து விட்டாரே! அவர் எண்ணம் நிறைவேறிவிட்டதே!" என்று புலம்பினாள் வஞ்சியாக மாறிய மயில்விழி.

"ஆயிரம் வீரர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்ட வீரசோமன் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

"திறமை மிகுந்த வீரர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் நமது வில்லவர்களிடம் பயந்திருக்கிறார்கள். கோட்டைக்குள்ளே நுழைய அஞ்சி ஒவ்வொரு கணமும் வாய்ப்பை எதிர்பார்க்கிறார்கள்.

"நாளைக் காலையில் அவர்கள் படை எடுத்து வருவது உறுதி. மேற்கு வாயிலிலுள்ள வாய்க்கால் பாதையை அவர்கள் அறிந்து கொண்டார்கள். நாம் என்ன செய்யப் போகிறோம்? அரசே...திரும்பி வருவதாக வாக்களித்து வந்திருக்கிறேன். என்னை உடனே கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அனுப்பப் போகிறார்களாம்! என்னையும் இழந்து வஞ்சிக் கோட்டையையும் இழந்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அரசே!" மயில்விழி விம்மினாள்.

வீரசோமன் முதல் முறையாக, மயில்விழியின் கூந்தலை மெல்லத் தடவி, ஆதரவாக அணைத்து, விழி நீரைத் துடைத்து, "மயில்விழி! உனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நான் அறிவேன். வஞ்சி நகர் உன்னை ஒரு போதும் இழக்காது. சோழர்களிடம் வீரர்கள் பலம் அதிகமிருக்கலாம். ஆனால் நம்மிடம் திட்டம், திறமை, உறுதி இருக்கின்றன. நீ சோழ நாட்டிற்குச் செல்லாமல் நான்

பார்த்துக் கொள்கிறேன். மீண்டும் சோழர்ப் பாசறைக்கு நீ செல்ல வேண்டாம்'' என்று அழுத்தத் திருத்தமாகக் கூறினார் வீரசோமன்.

மயில்விழி வியப்புடன் அவரை நோக்கினாள். ''மன்னர் என்ன சொல்கிறார்? நான் போகவேண்டாமா? வாக்குறுதியை நான் மீற மாட்டேன்' என்று எண்ணிய மயில்விழி, ''அரசரவர்களே! பொய்கூறித் தப்பிவந்ததாக வருங்காலத்தில் ஏச்சும் பேச்சும் ஏற்படும். வஞ்சிநகரைக் காப்பாற்ற அந்த வாக்குறுதியை நான் அளித்தேன். பொய் கூறி நகரத்தைக் காப்பாற்றுவது, சேரநாட்டு வீரத்திற்கு இழுக்கு'' என்றாள்.

''பொய் அன்று அது, மயில்விழி! ராஜதந்திரம்! நீ கவலைப்படாதே. நிம்மதியாகப் போய் ஓய்வெடு. நாளைப் பொழுது விடியும்போது என்ன நேர்கிறது பார்!'' என்று உறுதியாகக் கூறினார் வீரசோமன்.

நடுநிசி. குலோத்துங்க சோழரும், சம்புவராயரும் நெடுநேரமாக மறுநாள் படை எடுப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''சக்கரவர்த்தி அவர்களே! மயில்விழி திரும்பி வருவாள் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?'' என்று சம்புவராயர் கேட்டார்.

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவளுடைய கலைத் தாகம் இழுத்து வந்துவிடும். அப்படி வராவிட்டால் வஞ்சிக்கோட்டை விழும்போது அவளைச் சிறைப்பிடித்து கங்காபுரிக்கு அழைத்துச் செல்வோம்'' என்றார் குலோத்துங்கன்.

''இரவோடு இரவாக நமது படைவீரர்களில் பாதிப் பேரை மேற்கு வாசலில் நிறுத்துங்கள். காலையில்



உத்தரவு பிறப்பிப்போம்!'' என்றும் கட்டளையிட்டார் சோழ மன்னர்.

சோழர்ப் படைகள் அமராவதியைக் கடந்து மேற்குக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, பாசறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த சோழர்ப்படைகளை சேரர்களின் வில்லவர்கள் திடீரெனத் தாக்கினர்.

சேர வில்லவர்களின் எதிர்பாராத தாக்குதலால் நிலை குலைந்தனர் சோழ வீரர்கள். இருளில் அவர்களால் தற்காத்துக் கொள்ளவோ, எதிர்த்து நிற்கவோ போரிடவோ முடியவில்லை. எங்கும் ஒரே ஓலம். ஆனால் சில நாழிகைகளுக்குள் சம்புவராயர் படைவீரர்களை ஒழுங்குபடுத்தி எதிர்த் தாக்குதலைத் தொடங்கியவுடன் சேரர்கள் பின்னடைந்தனர். வைகறை வேளையில்மேற்குக் கோட்டை வாயிலைத் தாக்கி, கோட்டைக்குள் நுழையுமாறு குலோத்துங்கன் கட்டளையிட்டார்.

இருதரப்பிலும் உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை அதிகம். சேர வீரர்கள் பலர் படுகாயமடைந்தாலும், காயமுற்றவர்களைத் தூக்கிக் கொண்டோடிவிட்டனர் சேர வீரர்கள்.

குலோத்துங்க சோழர் அடங்கா சீற்றங் கொண்டார். முழுப் பலத்துடன் வஞ்சிக்கோட்டையைத் தாக்கச் சொன்னார். மேற்குக் கோட்டை வாயில் இடிக்கப்பட்டது. அதன் வழியே சோழர்ப்படை வீரர்கள் நுழைந்தனர். ஒரு பக்கம் நகருக்குள் நுழைந்த சோழ வீரர்களைத் தடுத்து நிறுத்த ஒரு பகுதி சேர வீரர்கள் போரிட வேண்டியிருந்தது.

மறுபுறம் முதல் நாள் இரவு தப்பி ஓடி வரும்போது காயமுற்ற வீரர்களுக்குச் சிகிச்சை செய்யவேண்டியிருந்தது.

மயில்விழி உடலெல்லாம் பதற நின்றுகொண்டிருந்தாள். முதல்நாள் இரவு தனது வீரர்களுடன் மாறுவேடத்தில் சோழர்ப் படைகளைத் தாக்கச் சென்றிருந்த வீரசோமனின் வலது கரம் மட்டும் துண்டிக்கப்பட்டது.

மாளிகையில் மருத்துவர்கள் வீரசோமனுக்குச் சிகிச்சை செய்யக் கூடியிருந்தனர். கருவூர்த் தேவரின் பரம்பரையில் வந்த மருத்துவர்கள் அபூர்வ மூலிகை கொண்டு இரத்தப் பெருக்கை நிறுத்தினர்.

வெட்டுண்ட கரத்தைக்கண்ட மயில்விழி விம்மினாள்.

"நமது திட்டங்கள் தவிடுபொடியாகி விட்டனவே. கோட்டைக்குள் சோழ வீரர்கள் நுழைந்து விட்டனர். இன்னும் சிறிதுநேரத்தில் மயில்விழியைச் சிறைப்பிடித்துச் சென்றுவிடுவார்கள். என் திட்டத்தில்தான் தவறு. நாட்டையும் இழந்து, மயில்விழியையும் இழக்கப் போகிறேன்—ஐயோ!" என்று வீரசோமன் வருந்திப் புலம்பினார்.

"இந்த நிலையில் நீங்கள் வருத்தப்படக்கூடாது" என்று பலர் ஆலோசனை கூறினர். ஆனால் சேர மன்னர் சமாதானமடையவில்லை. மயில்விழியைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்.

மயில்விழிக்கு யோசனை ஒன்று பளிச்சிட்டது. விழி நீரைத் துடைத்துக் கொண்டாள். புதிய சக்தி உதயமானதைப் போல் முகத்தில் ஒளி வீசியது.

வெட்டுண்ட சேரமன்னரின் கரத்துடன் குலோத்துங்க சோழர் தங்கியிருக்கும் இடம் நோக்கி விரைந்தாள். வஞ்சி நகரமே அல்லோலகல்லோலப்பட்டது.

ஃ ஃ ஃ



"யார் வந்திருப்பது?" என்று வினவினார் குலோத்துங்கன். வஞ்சிக்கோட்டை முழுமையும் வீழ்ந்துவிட்டது என்ற செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். போர் நிலவரத்தை அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

மயில்விழி அவர் முன் வந்து நின்றாள். அவள் கையில் சிறு மூட்டை இருந்தது.

"உன்னை வஞ்சி என்று அழைப்பதா, மயில்விழி என்றழைப்பதா?" என்று குறும்புச் சிரிப்புடன் கேட்ட சோழ அரசர், "எப்படி அழைத்தால் என்ன—நீ சொன்ன சொல்லைக் காப்பாற்றத் திரும்பி வந்துவிட்டாய். நல்லது பெண்ணே! உன் கையில் இருப்பது என்ன?" என்று கேட்டார் அரசர்.

மயில்விழி தன் கரத்திலிருந்த மூட்டையைப் பிரித்தாள். குலோத்துங்கன் திடுக்கிட்டார்.

சேரநாட்டு இலச்சினை கொண்ட முத்திரை மோதிரம் அணிந்த விரல்களைக் கொண்ட வெட்டுண்ட கரம்.

"என்ன இது மயில்விழி?" என்று குலோத்துங்கன் கூவினார்.

"சோழ சக்கரவர்த்தி அவர்களே! சேர மன்னர் தன் கரத்தை இழந்துவிட்டார். போரை நிறுத்துங்கள். நகரத்தில் பழிவாங்கும் எண்ணத்துடன் அட்டகாசம் செய்யும் சோழ வீரர்களை அடக்குங்கள். எட்டு திக்கிலும் புகழ் பரவியிருக்கும் தங்களுக்கு இந்த வஞ்சிக்கோட்டையை வெல்வதால் புதியபுகழ் என்ன வரப்போகிறது?" மயில்விழி உணர்ச்சி வயப்பட்டிருந்தாள். ஒரு கணம் சிலம்பை ஏந்திய கண்ணகிபோல் காட்சியளித்தாள். ஆராய்ச்சி

மணியை முட்டி ஒலி எழுப்பும் ஆரூர்ப் பசுவைப்போல் காட்சியளித்தாள்.

வீரசோமனின் கரத்தைப் பார்த்தும், மயில்விழியின் வேதனைக் குரலைக் கேட்டும் சோழ சக்கரவர்த்தியும் கண் கலங்கிவிட்டார்.

மயில்விழி என் அரசாங்கக் காரியத்தில் தலையிடு கிறாள். நேற்று துணிவுடன் சோழ வீரர்களிடையே வந்தாள். தளபதியின் கடுமையான உள்ளத்தையே கவர்ந்துவிட்டாள். இப்போது சேர மன்னரின் துண்டிக்கப் பட்ட கரத்துடன் வந்து நிற்கிறாள். காரணம் என்ன? அவர் சிந்தித்தார்.

''மயில்விழி! என்ன பேசுவது என்றே புரியாமல் என் குரலை ஏதோ ஒன்று தடுக்கிறது. வாக்குத் தவறாமல் திரும்பி வந்த உன்னைப் பார்த்தவுடனேயே எனக்குச் சேரர்களிடம் இருந்த சினம் தணிந்துவிட்டது. சேர மன்னரின் கரத்தைப் பார்த்தவுடன் பழி உணர்ச்சியே மறைந்துவிட்டது. நீ இப்போது வந்திருப்பது சேர மன்னரின் சார்பில் சமாதானம் பேசத்தானே?'' என்று கேட்டார்.

வஞ்சி சிறிதுகூடத் தாமதிக்கவில்லை. ''வஞ்சி நகர மக்களின் சார்பில் என்றும் கூறலாம். வஞ்சி நகர மக்கள் போரின் கொடுமையால் அவதிப்படக்கூடாது என்ற நல்லெண்ணமே என் சமாதான விஷயத்தின் நோக்கம்'' என்றாள்.

''ஓகோ! நகர மக்களின் நலனுக்காக வந்திருக்கிறாயா? அவ்வாறாயின் நீ ஒரு காரியம் செய்யவேண்டும். சோழர்களின் குணத்தை நீ அறியாமல் இருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும். எங்கள் படைவீரர்கள் முன் வைத்த காலைப் பின் வாங்கமாட்டார்கள். திணவுகொண்ட-



தோள்களையுடைய என் வீரர்களை இவ்வளவு நாட்கள் பொறுமையாய் இருக்கச் செய்ததே பெரும் பிரயத்தன மாகிவிட்டது. முன்பே ஒரு பகுதியினர் கோட்டைக்குள் நுழைந்துவிட்டனர். புலிக் கொடியை ஏற்ற வேண்டியது தான் பாக்கி. வஞ்சிக்கோட்டைக்குள் செல்வோம். உடனே திரும்புவோம். நகரத்திற்கோ, மக்களுக்கோ எந்தவிதத் தொல்லைகளும் ஏற்படாது என்பதற்கு நான் உறுதி கூறுகிறேன்' என்று கூறி, மயில்விழியை ஒரு தடவை நோக்கினார்.

தான் வந்த காரியத்தில் பாதி வெற்றி என்று மகிழ்ந்தாள் மயில்விழி!

''ஆனால், ஒரு நிபந்தனை. உன்னிடமிருந்து ஓர் உறுதி தேவை. நீ என்னுடனேயே இருக்க வேண்டும். வீரசோமனைச் சந்திக்கக் கூடாது. இதற்குச் சம்மதம் என்றால் சோழ வீரர்களை உடனே திரும்பச் சொல்கிறேன்'' என்றார்.

வஞ்சிக் கோட்டையைவிட இந்த வஞ்சியிடம் சோழ சக்கரவர்த்திக்கு ஆசையா? உம்; ஒரு கோட்டையும் அதன் மக்களும் என்னால் காப்பாற்றப்படுகிறார்கள். 'சரி—சம்மதமே!' என்றாள்.

# 16

சோழர்களின் பட்டத்து யானையின் மீது குலோத்துங்க சோழர் கம்பீரமாக அமர்ந்து அவரைச் சூழ்ந்து வெற்றிப் பெருமிதத்துடன் சோழ நாட்டு வீரர்கள் புலிக் கொடி ஏந்தி, கோஷமிட்டு வர, வஞ்சி நகர் வீதிகளில் வெற்றிப் பவனி வந்தார்.

வேறு வழியின்றி, வஞ்சி நகர மக்கள் சோழப் பேரரசரை வரவேற்றனர். தோரணங்கள் கட்டி மகிழ்ந்தனர். எதிர்த்த சேர வீரர்கள் சிறையிலடைக்கப் பட்டனர். பணிந்த வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

சோழ வீரர்கள் வஞ்சி நகரமெங்கும் வெற்றிப் பெருமிதத்துடன் ஆனந்தக் கூத்தாடினர்.

வஞ்சி நகரத்துச் சேரர் அரண்மனையில் வீரசோமன் அமர்ந்திருந்த அரியணையில் குலோத்துங்கன் அமர்ந்தார். மயில்விழியை இங்குமங்கும் நகர விடாமல் வீரர்கள் கண் காணித்தனர். சபை மண்டபத்தில் பெண்டிர்கள் அமர்ந்து நோக்கும் மாடத்தில் மயில்விழி அமர்ந்திருந்தாள். அவளுடைய முகத்தில் எந்தவித உணர்ச்சியுமில்லை. ஆழ் கடல் போல் அமைதியாக இருந்தாள்.

'குலோங்துங்க சோழர் வார்த்தை தவறி விட்டார். உடனே திரும்பி விடுவதாகவும், படை வீரர்களைத் திரும்புமாறு செய்வதாகவும் கூறியசோழ மன்னர் சேரரின்



அரியணையில் அமர்ந்து விட்டார். வீரசோமனைச் சிறையில் அடைத்துவிட்டார். இது தான் தர்மமா? அளித்த வாக்குறுதியை மீறுவதுதான் புலிக்கொடி வேந்தருக்கு அழகா? 'எனது சமாதானத் தூது வெற்றி பெற்றுவிட்டது. சோழ அரசர் சமாதான மனப்பான்மையில் இருக்கிறார்' என்ற செய்தியைச் சேர மன்னருக்கு நான் அனுப்பியதால் தானே, வீரசோமன் எதிர்க்காமல் சரணடைந்தார். சமாதானம் விரும்பியவரை சிறையில் அடைத்த கோழைகோளர். நம்பிக்கை மோசம் செய்தவர். அவரருகிலேயே நான் இருக்க வேண்டும் என்ற உறுதியை என்னிடம் பெற்று வாக்குத் தவறியவர் அடுத்து என் உடலை அடையத் துடிப்பார்; குலோத்துங்க சக்கரவர்த்தி அவர்களே! இந்த உடல் வஞ்சி நகருக்குத் தான் என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.

சபை மண்டபத்தில் மகிழ்ச்சி நிலவியது.

சேரர்களின் மகுடம் கொண்டு வரப்பட்டது.

சம்புவராயர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவ்வப்போது மாடத்தில் அமர்ந்திருக்கும் மயில்விழியை நோக்கி புன்னகை புரிந்தார்.

''ஓ! சொல் காக்காத சோழ வேந்தரே! வஞ்சி நகரத்தையும் அடைந்து, சேரமன்னரைச் சிறையிலிட்டு என்னையும் சோழ நாட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று கனவு காணும் வேந்தரே! உங்கள் எண்ணம் நிறை வேறாது.

''இறைவனுக்குத்தான் இந்த உயிரும் உடலும் என்ற தூய பணியை மீறினேன். குருவாகவும் தாய்க்குத் தாயாகவும் இருந்த மரகதவல்லியின் மனம் துடிக்கச்

செய்தேன். காதல் வாழ்வே நிரந்தரம் என்று நம்பினேன். சொந்த மகளைவிட அதிகம் நேசித்த வீரசோமனின் மானத்தைக் காக்க, சோழ அரசர் விதித்த நிபந்தனையை ஏற்றேன். தோல்வி, தோல்வி—இனி இந்த உடலும், உயிரும் அடிமைப்பட்ட சேர நாட்டுக்குப் பயன்படக் கூடாது...''

மயில்விழி ஒரு கணம் பித்துப்பிடித்தவள் போல் ஆனாள். மறுகணம் முன் எச்சரிக்கையாகத் தான் வைத்திருந்த விஷத்தைக் குடித்தாள்.

ஃ ஃ ஃ

வஞ்சி மகள் மயில்விழி, உயிருக்குத் துடித்துக் கொண்டிருக்கும் போது சேர மன்னர் அடைக்கப்பட்டிருந்த சிறைக் கோட்டைக் கதவுகள் விசாலமாகத் திறக்கப்பட்டன. தக்க மரியாதைகளுடன் வீரசோமன் அழைத்து வரப்பட்டார். நன்னீராடச் செய்தார்கள். புத்தாடை அணியச் செய்தார்கள். அவருக்கே ஒன்றும் புரியவில்லை.

சபை மண்டபத்திற்கு அவர் அழைத்து வரப்பட்டார். இன்னும் அவமானப்படுத்த நினைக்கிறாரா சோழ அரசர்.

கம்பீரமாக அவர் அமர்ந்துச் செங்கோலோச்சிய சபை மண்டபத்தில், குலோத்துங்கன் எதிரே மனம் வெதும்பித் தலை குனிந்து நின்றார்.

''சேர மன்னர் வீரசோமன் அவர்களே! ஏன் அங்கேயே நின்று விட்டீர்கள்? அரியணையின் படிகளில்



ஏறி என்னருகே வாருங்கள்'' என்று குலோத்துங்கன் அழைத்தார்.

குனிந்த தலையுடன், விழிகளில் நீர் மல்கச் சென்றார் வீரசோமன்.

சோழ சக்கரவர்த்தி குலோத்துங்கர் ஏன் எழுந்து நிற்கிறார்? அதோ, வீரசோமனை அணைத்துக் கொள்கிறாரே ஏன்?

அதோ! தான் அணிந்திருந்த சோழ மகுடத்தை, மணி முடியைத் தன் சிரசிலிருந்து எடுத்து வீரசோமனின் சிரசில் சூட்டுகிறாரே...?

''வீரசோமரே! வஞ்சி நகரில் வீற்றிருந்து சேர நாட்டை ஆளும் எண்ணம், ஆசை ஒருபோதும் எனக்கில்லை. திறை தராது இருந்த உமக்கு ஒரு பாடம் புகட்ட எண்ணினேன். கங்கை கொண்ட சோழபுரத்தில் மாலை நிருத்தியம் நடைபெறாமல், மயில்விழியைக் கவர்ந்து சென்ற உமக்கு எமது ஆற்றலை, வலிமையைப் புலப்படுத்த விரும்பினேன். ஆனால் வஞ்சிக் கோட்டையை மிக எளிதில் கைப்பற்றிவிடலாம் என எண்ணினேன். வஞ்சி மகளாக மயில்விழி என்னிடம் வந்தாள். நீங்கள் ஒருவிதத்தில் வலை விரித்தீர்கள். அந்த வலையில் தான் உங்கள் இருவரையும் விழச் செய்தேன். அவளால்தான் தாங்கள் வஞ்சிக் கோட்டைக்குள் நுழைய முடிந்தது. மயில்விழி எனக்குக் கிடைத்தாள். கங்கை கொண்ட சோழீசுவரருக்குச் சந்நிதியில் கிடைத்தாள். அவளுக்கு நிருத்யம் ஆட மயில்விழி கிடைத்து விட்டாள். அவளுக்கு தான் வாக்களித்தபடி இந்த நகரிலிருந்து எமது படைகள்

உடனே திரும்பும் மீண்டும் விற்கொடி பறக்கும். இந்த நாடு உமக்கே!

"வஞ்சிமகள் மயில்விழி, மாலை நேரத்தில் இறைவன் எதிரே ஆடும்போதெல்லாம் நான் உம்மை நினைப்பேன்" என்று கூறி வீரசோமனை மெல்ல அணைத்தவாறு அவருடைய உரிமையான சேர அரியணையில் அமர்த்தினார்.

"வீரசோமரே! மயில்விழி இந்த வைபவத்தைக் காண மேல் மாடத்தில் இருக்கிறாள்" என்றும் கூறினார், சோழ அரசர்.

சபையில் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது.

'சோழ சேரர் வாழ்க!' என்ற வாழ்த்தொலி எங்கும் பரவி ஒலித்தது.

சேர—சோழ மன்னர்கள் மீது மலர் மாரி பொழிந்தது

குலோத்துங்க சோழருடன் வந்திருந்த புலவர்கள் வாழ்த்துக் கவிதை பாடத் தொடங்கினார்கள்.

பட்டயம் எழுதுவோர் பரபரவென்று,புலவர்கள் கூறுவதை ஓலைகளில் எழுதினர், கல்வெட்டுக்களில் செதுக்கப் படவேண்டிய வாசகத்தை திருமந்திர ஓலை நாயகம் தெரிவித்தார். புலவர்கள் எழுதினர்.

"கொங்கான சோழ சேரர் மண்டலத்து வெங்கால நாட்டுக் கருவூரான முடிவழங்கு சோழபுரத்துத் திருவானில் மாதேவர்" என்று எழுதத் தொடங்கினார்கள். வாழ்க! வாழ்க! என்ற வெற்றிக் கோஷம் எங்கும் எழுந்தது.



"யாரங்கே, மயில்விழியை அழைத்து வந்து கொடு கொட்டியும், அல்லியமும், ஆடச் சொல்லுங்கள்! நேற்று முன்தினம் சிறப்பாக அவள் வீரர்கள் முன் ஆடினாள்" என்றார்.

ஆனால்,

வஞ்சிமகள் மயில்விழியின் உயிரற்ற உடலைத்தான் அவர்கள் காணமுடிந்தது. அவளுடைய உயிரற்ற உடலின்மீது ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்துவதைத் தவிர சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

புலிக்கொடி இறங்கி, வஞ்சிக்கோட்டையில் விற்கொடி மீண்டும் கம்பீரமாகப் பறந்தது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் தன் வீட்டில் மரகதவல்லி, வெற்றியுடன் திரும்பிவரும் சோழ வீரர்களுடன் மயில்விழி வருவதை எதிர்பார்த்திருந்தாள்.

சோழர்ப் படைவீரர்கள் வஞ்சிக்கோட்டையினின்று கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி மௌனமாகத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

(முற்றும்)

18584
3469356